விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 18 புதன்கிழமை (04.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 350

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# வடக்கில் 100 ஆண்டுகளிற்கு இராணுவம் நிலைத்திருக்கும்!

## ஐ.நா பிரதிநிதியிடம் முதலமைச்சர் ஆதங்கம்

வடக்கில் இன்னும் 100 ஆண்டுகளுக்கு இராணுவம் நிலைத்திருக்கும் என்ற அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதியிடம் சுட்டிக்காட்டியுள்ள வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் வடக்கில் இராணுவம்தான் தமிழ் மக்களுக்கு பெரும் பிரச்சினையாகவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க...)



## ஊழல் சுட்டியில் 91ஆவதாக இலங்கை

(கொழும்பு)

டிரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் 2013க்கான ஊழல் சுட்டியில் இலங்கை 91 ஆவது இடத்திலுள்ளது.

இந்த சுட்டி நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த சுட்டியின் பிரகாரம் இலங்கை 37 புள்ளியை பெற்றுள்ளதுடன் நியூஸிலாந்தும் டென்மார்க்கும் ஆகவும் குறைந்தளவில் ஊழல்கள் இடம்பெறும் நாடுகளாக காணப்படுகின்றன.

ஆப்கானிஸ்தான், வடகொரியா, சோமாலியா ஆகியவை ஆகவும் கூடுதலான ஊழல்கள் இடம்பெறும் நாடுகளாக காணப்படுகின்றன.

(செ-11)

## மார்ச் மாதத்திற்கு முன்னதாக இலங்கை நிலைமைகளில் மாற்றம் ஏற்படும் - கனடா

மார்ச் மாதத்திற்கு முன்னதாக இலங்கை நிலைமைகளில் மாற்றம் ஏற்படும் என கனடா நம்பிக்கை வெளியிட்டுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் மனித உரிமை பேரவையின் அமர்வுகள் நடைபெறவுள்ளது. இந்த அமர்வுகளுக்கு முன்னதாக இல்ங்கை மனித உரிமை நிலைமைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என கனேடிய வெளிவிவகார அமைச்சின் மனித உரிமை விவகாரச் செயலாளர் தீபக் ஒபராய் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையிலும் மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். மனித உரிமை விவகாரம் தொடர்பில் உலக நாடுகளின் குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கை அரசாங்கம் உரிய முறையில் பதிலளிக்க வேண்டி

20-ம் பக்கம் பார்க்க

## திருமலை படுகொலை வழக்கு ஒத்திவைப்பு

2006ஆம் ஆண்டு ஜனவரி 2-ம் திகதியன்று திருகோணமலையில் 5 மாணவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விடுவிக்கபபட்ட 12 அதிரடிப்படையினரும் நேற்று திருகோணமலை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் நீதவான் ஏ.எல். அஸ்ஹர் முன்னிலையில் நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நேற்றைய விசாரணைகளின் பின்னர் வழக்கு எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப் பட்டது.

2006ஆம் ஆண்டு திருகோணமலை கடற்கரையில் வைத்து 5 மாணவர்களையும் கொலை செய்த குற்றச்சாட்டே 12 படையினர் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட மாணவர் ஒருவரின் சார்பில் சட்டத்தரணியும் பதில் நீதவானுமாகிய சுபாசினி தனது சாட்சியத்தினை முன் வைத்தார்.

கொலை செய்யப்பட்ட மாணவரில்

20-ம் பக்கம் பார்க்க

## மன்மோகனுக்கான அழைப்பு உயிரோடுதான் இருக்கிறது

### ஐ.தே.கவின் கருத்துக்கு சிதம்பரம் கண்டனம்



(சென்னை)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அழையா விருந்தாளியாக யாழ்ப்பாணம் வரவிருப்பதாக ஐ.தே. கட்சி வெளியிட்ட கருத்துக்கு இந்திய மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம்கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடமிருந்து அழைப்பு இல்லாமல் அழையா விருந்தாளியாக யாழ்ப்பாணம் செல்வது போல் இந்தியப் பிரதமரை ஐ.தே.க சித்தரித்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது என மத்திய அமைச்சர் சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் யாழ்ப்பாணத்திற்கு செல்வது குறித்து அறிக்கையிட்ட இரண்டு நாட்களுக்குள் இலங்கையில் முக்கிய பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.க

20-ம் பக்கம் பார்க்க

## ஆலயங்கள் தொடர்பில் முக்கிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்து ஆலயங்களை மையப்படுத்தி யாழ். மாவட்டத்தில் இடம் பெற்றுவரும் திருட்டுச் சம்பவங்கள் அற்றுப் போகவும் ஆலயத்தின் புனிதத் தன்மையை பாதுகாப்பதற்கும் சர்வதேச இந்து மதக் குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 8 மணிமுதல் மாலை. 4.15 மணிவரை சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் சிவ ஆராதனையும் பிரார்த்தனையும் இடம் பெறவுள்ளது. இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணம் சர்வதேச இந்து மதக் குருமார் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

(செ-6)

## றெக்ஷியன் மரணம் மனைவி கைது!

(யாழ்ப்பாணம்)

. புங்குடுதீவில மர்மமான முறையில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்ட நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்ஷியனின் மரணம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் அவரது மனைவி திருமதி அனிதா றெக்ஷியன் ஊர்காவற்துறைப் பொலிஸாரால் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை இம் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவின் விசேட குழு ஒன்று கொழும்பிலிருந்து நேற்று யாழ்ப்பாணத்திற்கு வந்ததாகவும் சந்தேகத்தின் பேரில் முக்கியமான ஒருவரை கைது செய்து கொழும்பிற்கு அழைத்துச் சென்றுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இச்செய்தி அச்சுக்கு போகும்வரை பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினருடன் தொடர்பு கொண்டு குறித்த நபரின் விபரத்தினை உறுதிசெய்து கொள்ள முடியவில்லை.

(செ)

## ஐ.நா பிரதிநிதி சலோகா நலன்புரி முகாமிற்கு விஜயம்




(யாழ்ப்பாணம்)

சுமார் 23 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வாழ்ந்துவரும் வலி வடக்கைச் சேர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி கலாநிதி சலோகா பெயானி யாழ்ப்பாணத்தில் வைத்து உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த ஐ.நா விசேட பிரதிநிதி உள்ளிட்ட குழுவினர் வலி வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கி வாழ்ந்துவரும் மல்லாகம் கோணப்புலம் நலன்புரி முகாமிற்குச் சென்று அங்கு தங்கி வாழ்ந்து வரும் மக்களுடன் கலந்துரையாடினார்.

20-ம் பக்கம் பார்க்க

## 6 கைக் குண்டுகள் ஏழாலையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஏழாலை கிழக்கு புனித இசிதோர் பாடசாலைக்கு அருகிலுள்ள காணியிலிருந்து 6 கைக் குண்டுகளை பொலிஸார் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை மீட்டுள்ளனர்.

பொதுமக்களால் கிராம அலுவலருக்கு வழங்கப்பட்ட தகவலினையடுத்து, கிராம அலுவலர் சுன்னாகம் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இந்நிலையில், இது தொடர்பில் பொலிஸார் மற்றும் ஊரெழு இராணுவத்தினர் இணைந்து கைக்

20-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

நவரெட்ணம் ஜீவரெட்ணம் (ஜீவா)

(இளைப்பாறிய முகாமைத்துவ உதவியாளர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை)

திதி:- கார்த்திகைமாத திதிகை



ஆண்டொன்று வந்ததப்பா அவனிவிட்டு நீங்கள் சென்று
மண்ணிலே பிறப்போர் மரணிப்பது நிட்சயமே
ஆயிரம் உறவுகள் அருகினில் இருந்தென்ன
அப்பா உமது அணைப்பே ஆறுதல் எங்களுக்கு,
ஊட்டி எமை வளர்த்து உயர்வடைய வைத்த நீங்கள்
ஒன்றுமே எம்மிடத்தில் பெற்றதில்லை அப்பாவே
உழைத்து நாம் தருமுன்னே ஓடி நீங்கள் சென்றீர்களே
அம்மாவை விட்டு நீங்கள் அகன்றதை நாம் அறியோம்
விதி செய்த சதியாலே கதிகலங்கி நிற்கின்றோம்
திசை தெரியா நாம் இருக்க திசை மாறி சென்றீர்களே
அமர உலகில் உங்கள் ஆத்மா சாந்தி பெற
ஆனைமுகனை அனுதினமும் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி | சாந்தி | சாந்தி |

இல. 686,
கோயில் வீதி,
நல்லூர்.

[4649]

- குடும்பத்தினர்


# அரசியல் கைதிகளை மீட்க உதவுங்கள்

(குருமன்காடு)

தமிழ்அரசியல்கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாண சபைகளில் பிரேரணை நிறைவேற்ற வேண்டும் என அரசியல் கைதிகளின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில்அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் நீண்ட நெடுங்காலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளிலும் உள்ளூராட்சி மன்றங்களிலும் பிரேரணை ஒன்றை நிறைவேற்றுமாறு தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்களாகிய நாம் பற்றுரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அதாவது கடந்த காலங்களில்தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் யாழ்.மாநகர சபை மற்றும் இதர நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றில் கொண்டு வரப்பட்ட பிரேரணைகள் முன்மாதிரியாகக் கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆளுகைக் குட்பட்ட மாநகரசபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளிலும் இதுபோன்று பிரேரணைகளைநிறைவேற்றிதமிழ் கைதிகளின் விடுதலை அவசியத்தை வலியுறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் புத்துணர்சியுடன்மலர்ந்திருக்கும் வடக்கு மாகாண சபை தமிழ் கைதிகள் விடயத்தில்பற்றுறுதியுடன் செயற்பட்டு ஆக்கபூர்வமானஅவசரநடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதனை வெளிப்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாண சபையில் பெரும் பிரேரணை ஒன்றை நிறைவேற்ற வேண்டும் எனவும் உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம். இச்செயற்பாட்டு ஞானத்தின் மூலம் கிழக்கு மாகாண சபையிலும் இதுபோன்ற பிரேரணைகளை நிறைவேற்ற வேண்டும்எனஅனைத்து இலங்கை தமிழ் கைதிகளின் பெற்றோர் உறவினர்களாகிய நாம் எதிர்பார்க்கின்றோம்.

தமிழ்அரசியல்கைதிகளின் விடுதலை என்ற சொற்றொடர்களின் கீழ் எத்தனை விதமான துன்பங்களும் துயரங்களும் மறைந்திருக்கின்றன என்று சற்றுச்சிந்துத்துப் பாருங்கள். அவர்களின் பிள்ளைகள் அடங்கலான ஒரு சந்ததியே சீரழிந்து கொண்டிருக்கின்றது. அவர் தம் குடும்ப உறவுகள் இணைந்த சமூகமே வாழ வழியின்றி வெறுமையாகியுள்ளது. இன்று நேற்று என்று இன்னும் எத்தனை வருடங்கள்இந்தஅவலவாழ்வு? என்ற வினாவுக்கு யாரிடம் விடை கேட்பது.

ஏன் எமக்கு மட்டும் இந்த ஓரவஞ்சகம்? மூன்றரை தசாப்த கால யுத்தம் முடிவுற்று 5 வருடங்களை அண்மித்து முழுநாடும் இன்றுசுமுக சூழலை நுகரும்போது நாம் ஒரு பிரிவினர் மட்டும் எமது அன்பான உறவுகளை பிரிந்து கண்ணீரும் கவலையுமாக நாட்களை நகர்த்துகின்றோம். நாளாந்தம் நடை பிணங்களாக சிறைவாசல்களிலும் நீதிமன்ற படிகளிலும் நிரையாக நிற்கின்றோம்.

ஆகவே எமது அவலக்கண்ணீரை துடைத்து எம் உறவுகளை மீட்க இனம், மதம், கட்சி, கொள்கை வேறுபாடின்றி அனைவரும் பழைய பகைமை பாராட்டாது ஒன்றிணைந்து ஒருமித்த குரலாக ஜனாதிபதி அவர்களிடம் விடுதலை வேண்டு கோளினை பிரேரணையாக முன்வைத்து இந்த மனிதாபிமான வரலாற்றுக்கடமையினைநிறைவேற்றுமாறு கருணை கலந்த உரிமை அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்எனஅவ்வறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (செ-250, 11)


## வாடகைக்கு

பாதுகாப்பான சூழலில் கச்சேரி / Chundukuli Girls Schoolஇற்கு அருகில் Working Girls ஒருவர்/இருவர் தங்குவதற்கான Rooms, Separate Bathroom, சிறிய விறாந்தையுடன் வாடகைக்கு உண்டு.

Contact: 0750828308

(4639)

மனத் தளர்வா?
தனிமையா?
தற்கொலை எண்ணமா?

உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம்.
உடனே அழையுங்கள்.
இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

கைகொடுக்கும் நண்பர்கள்
021 222 8117

(C-5586)

## பிள்ளையார் இன்

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்

- பூரி, சப்பாத்தி, தோசை 80/- மட்டுமே
- மசாலா தோசை 120/- மட்டுமே

தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2829

(C-5642)

NORTH LEAD

COMPUTER & ACCESSORIES WHOLESALER, COMPUTER REPAIRING & SERVICES
COMPUTER & LANGUAGE CLASSES, COMPUTER PRINTING & DESIGNING.
Tel: 021-222 4459, 0772533390. Fax : 021-222 4460

**COMPUTER & ACCESSORIES SALES**

Intel Dual Core 3rd Gen Processor
Intel 61, I-7 Support Mother Board
500 GB Toshiba Hard Disk
2GB DDR III Kingstan Ram
24x LG DVD Multy Recorder
Porch ATX High End Casing
19"Samsung, V.Sonic, HP, LG Or AOC LED
650W Techfine UPS (AVR Inbuild)
2.1 Woofer, Keyboard, Mouse & Pad..
Rs : 48850/-.. i-3 Fullset : 56000

**COMPUTER & LANGUAGE CLASSES**

சிங்கள, ஆங்கில, கணனி வகுப்புகள்

உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், A/L முடித்தவர்கள், அரசமொழி சிங்கள பரீட்சைக்குத் தோற்ற இருப்பவர்களுக்கான.. மிக இலகுமுறையில், குறுகிய காலத்தில், குறைந்த கட்டணத்தில் பயிற்சியினை முடித்துக் கொள்ள... மூன்றே மாதங்களில் மொழியை இலகுவாக எழுத, வாசிக்க, பேச, ஆரம்பத்தில் இருந்து அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும்.. பரீட்சை முடிவுகளின் பின்னர் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களும் வழங்கப்படும்..

Ms Office, DTP, Internet Technology, Hardware Technology, Programming, Accounting Packages, Kids Program போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன..

**CCTV AND ALARM SYSTEM**

உங்கள் காரியாலயங்கள், தொழிற்சாலைகள், மற்றும் வீடுகளின் பாதுகாப்பினை கண்காணிக்க. (CCTV: 4 Channel, 8 Channel & 16 Channels) Mobile View, Online Settings & Installation FREE.. 4channel DVR, 500GB HDD, Cmos 800tvl Night vision Camera, 19" LED, 1800 DPI Optical Mouse, From : 44800/=

**COMPUTER REPAIRING & SERVICES**

சகல விதமான கணனிகளும் (Laptop & Desktop) CPU, Monitor, LED TV, Tablet PC, Printer, UPS என்பன உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துத் தருகின்றோம்.

No: 328, Stanly Road, Jaffna. (Near to Ariyakulam Junction)
Branch: No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் 2014ஆம் ஆண்டிற்கான மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் என்பவறறை 02.11.2013 ஆம் திகதி சனிக்கிழமை உதயன், வலம்புரிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்விப் படிவக் கட்டணம் கேள்வி வைப்பு, வாடகை தொடர்பான அதே நிபந்தனைகளுக்கு அமைவாக 2014ஆம் ஆண்டிற்கான கேள்விகள் பின்வரும் விபரப்படி 01.01.2014 தொடக்கம் 31.12.2014 ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை உப அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| கேளவிப்பத்திரம்வழங்கும்இறுதித்திகதி | 10.12.2013 பி.ப. 1.00 மணிவரை |
| கேள்விப் பத்திரம்ஏற்றுக்கொள்ளும் திகதி | 11.12.2013 பி.ப. 12.00 மணிவரை |
| கேள்விப் பத்திரம் திறக்கும் திகதி | 11.12.2013 பி.ப. 2.00 மணிக்கு |

| இல | சந்தைகளின் விபரம் | கேள்வித் தொகை |
|---|---|---|
| 01. | மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | |
| | 1. மானிப்பாய் பொதுச் சந்தை | 1202000.00 |
| | 2. மானிப்பாய் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 136100.00 |
| 02. | மானிப்பாய் கிராம உப அலுவலகம் | |
| | 1. சாவற்காட்டுச் சந்தை | 182175.00 |
| | 2. ஆனைக்கோட்டைச்சந்திகோழிஇறைச்சிக்கடை | 52500.00 |
| 03. | பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | |
| | 1. மாகியப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 51100.00 |
| | 2. மாகியப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிககடை | 11000.00 |
| | 3. மாதகல் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 51150.00 |

திரு.சண்முகம் சிவகுமாரன், பதில் தவிசாளர்,
வலி தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய். 03.12.2013

(C-5647)


# ST.JOHN' S COLLEGE, JAFFNA

THE JAFFNA ACADEMY AND SCHOOL OF TECHNOLOGY

ADMISSION - 2014 FOR A/L

## தரம் 12 (A/L) 2016 Batch) க்கான அனுமதி

01. அ. தரம் 12 இற்கு (A/L 2016 Batch) தமிழ்மொழிமூலம் விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை, தொழில்நுட்பவியல்) கற்பதற்காகவும், (London A/L 2014 / 2015) ற்கும் கற்பதற்காகவும், தரம் 12ற்கு ஆங்கில மொழிமூலம் விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம் கற்பதற்காகவும் விண்ணப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20.12.2013 வெள்ளிக்கிழமை. அத் திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

02. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரையும் பாடசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

03. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000/-

04. தரம் 12 (A/L) 2016 Batch) விண்ணப்பதாரி 01.02.1997 இல் அல்லது அதற்குப்பின் பிறந்திருத்தல் வேண்டும்.

05. தரம் 12 (A/L) 2015 Batch) தொழில்நுட்பவியல் துறை விண்ணப்பதாரி 01.02.1995 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

06. அனுமதிப்பரீட்சை 04.01.2014 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும். புதிய வகுப்புக்கள் 06.01.2014 திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

குறிப்பு :

01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது.

02. அனுமதிப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.

07. O/L, A/L 2-ம் முறை பரீட்சைக்குத் தோற்றவிரும்புவர்களிடமிருந்து The Jaffna Academy and School of Technology இனால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

PRINCIPAL
ST.JOHN'S COLLEGE,
JAFFNA.

DIRECTOR
THE JAFFNA ACADEMY &
SCHOOL OF TECHNOLOGY

(C-5649)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீரசிங்கம் ம.கல்லூரியில் நேற்று அதிகாலை திருட்டு

## பொருட்கள் சேதம், பணம் சூறை

(சாவகச்சேரி)

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியினுள் புகுந்த விஷமிகள் பொருட்களை சேதமாக்கியதோடு ஒரு தொகைப் பணத்தையும் சூறையாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, சம்பவ தினம் முகமூடி, கையில் உறை என்பனவற்றை அணிந்துகொண்டு கல்லூரியினுள் நுழைந்த விஷமிகள் காவலாளியைத் தாக்கியதோடு கத்திமுனையில் அச்சுறுத்தியுள்ளனர்.


பின்னர் கணனிஅறை, நூலகம், அதிபரின் காரியாலயம் என்பனவற்றின் கதவுகளை உடைத்து, பொருட்கள், நூல்கள், கோப்புகள் போன்றனவற்றையும் சேதப்படுத்தியுள்ளனர்.

அத்தோடு அதிபரின் காரியாலயத்தினுள்ளிருந்த ஒரு தொகைப்பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இவ்வேளை காவலாளியின் கூக்குரலைக் கேட்ட அயலவர்கள் கல்லூரி அதிபருக்கு தொலைபேசியூடாக தகவல் வழங்கியதையடுத்து பாடசாலைக்கு கொடிகாமப் பொலிஸாருடன் அதிபர் வந்த சமயம் விஷமிகள் தப்பியோடியுள்ளனர்.


சம்பவத்தில் இரவுக் காவலாளி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (அ-9-29)



நன்றி:மிரர்

# ஐ.நா.சபை விசேட பிரதிநிதி யாழிற்கு நேற்று விஜயம்





யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத் தித் திட்டங்கள் தொடர்பிலும் ஐ.நா.விசேட பிரதிநிதி கலாநிதி சலோகா பெயானி வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியிடம் கேட்டு அறிந்துள்ளார்.

இலங்கைக்கு நேற்று முன்தினம் வருகை தந்த ஐ.நா.விசேட பிரதிநிதி கலாநிதி சலோகா பெயானி உள்ளிட்ட குழுவினர் நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியை அவரது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போதே வடக்கு மாகாணத்தில் கடந்த நான்கு வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் மற்றும் மீள்குடியேற்றம், உட்கட்டுமான வசதிகள், வீதி புனரமைப்பு உள்ளிட்ட பலவிடயங்கள் தொடர்பாக ஐ.நா.பிரதிநிதிக்கு வடக்கு மாகாண ஆளுநர் விளக்கமளித்துள்ளார்.

இதேவேளை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தையும் யாழ்.மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய ஐ.நா.விசேட பிரதிநிதி உள்ளிட்ட குழுவினர் யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்து கொண்டனர். (அ-6)

## ஒலிம்பியாட் போட்டியில் வெண்கலம் வென்றார்



(மானிப்பாய்)

சர்வதேசகணித. விஞ்ஞான ஒலிம்பியாட் (IMSO) போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் நடேசமூர்த்தி சிவனந்தன் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

நவம்பர் மாத இறுதியில் பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற 10ஆவது சர்வதேச கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் சர்வதேச ரீதியில் 17 நாடுகள் பங்குபற்றியிருந்தன. இப்போட்டியில் இலங்கையிலிருந்து 9 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இலங்கையிலிருந்து சென்ற குழுவில் தமிழரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் பங்குபற்றி வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். (அ-9-23)

## நிர்வாகத் தெரிவு

(மானிப்பாய்)

யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகக் கூட்டம் கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்படி சங்கத்தின் தலைவராக செ.சிவசங்கர், உப தலைவர்களாக ஆர்.செல்வராஜா, ப.முருகவேல், என்.ரவீந்திரா, கோ.கோபிகிருஷ்ணா, எஸ்.சிவச்செல்வன் ஆகியோரும் செயலாளாராக ரி.றொபேசன் பொருளாளராக ந.சிவராஜா, ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு நிர்வாகக் குழு உறுப்பினர் ரி.கிருபாகரன், வை.நிஷாந்தன், ஆர்.ஸ்ரீதரன், எம்.சிதம்பரப்பிள்ளை, பி.வசிகரன் ஆகியோரும் கணக்காய்வாளர்களாக ந.சுரேஸ்குமார், எஸ்.கோகுலன் போன்றோர்தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-9-23)

## பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் அ.கையிலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக இந்திய துணைத்தூதுவராலய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் கடந்த வருடம் பல்கலைக்கழகத்துக்கு தெரிவான கல்லூரி மாணவர்கள் 83 பேருக்கு பதக்கங்களும் பாடசாலையில் சாதனை படைத்த மாணவர்களுக்கும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (அ-9)

## யாழ்.கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்துக்குட்பட்ட யா/வைத்தீஸ்வராக் கல்லூரி தரம் 1AB பாடசாலையினது அதிபர் பதவி வெற்றிடமாகியுள்ளது. இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-1 ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக வடமாகாண கல்வி பணிப்பாளர் வ. செல்வரா்சா தெரிவித்துள்ளார்.

மேற்படி பதவிக்கு யாழ்.மாவட்டத்துக்குட்பட்ட வலயங்கள் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

இப் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பத்தினை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி மாகாணக்கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும் அதிபர் சேவை தரம் 1, 2-1 ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் யாழ்.வலயத்தைச் சேர்ந்த அதிபர் சேவை 2-11 ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

அத்துடன் விண்ணப்பிக்கும் அதிபர்கள் தற்போது கடமையாற்றும் பாடசாலையில் குறைந்தது 3 வருடங்களான சேவையினைப் பூர்த்தி செய்தவர்களாக இருத்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



பொலிகண்டியைச் சேர்ந்த திருநாவுக்கரசுரஞ்சித் யாழ்ப்பாண நீதி நிர்வாக வலயத்துக்கான சமாதான நீதவானாக அண்மையில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சமுர்த்திஅபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி வருகிறார். (அ-5-19)

## மோ.சைக்கிள் மோதி விபத்து;சிறுமி காயம்

நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வீதியைக் கடக்க முற்பட்ட சிறுமியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.இச் சம்பவம் நேற்று மதியம் 12 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,நெல்லியடி சந்தியிலுள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையில் வீதியைக் கடக்க முற்பட்ட 16 வயதுடைய சிறுமியை யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது. இதனால், கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த குறித்த சிறுமியின் தலையில் காயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் [illegible] வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-60)




## பொதுக் கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர் சென்னை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் திருமதி ம.கீர்த்திநாதன் அறிவித்துள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இரட்டைக் குழந்தைகள்

சிலருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறப்பதுண்டு அல்லவா? அதில் மூன்று வகை உண்டு.

முதல்வகை : ஒற்றுமையுடைய இரட்டைக் குழந்தைகள். ஆணின் உயிரணுவும் பெண்ணின் உயிரணுவும் சேர்ந்து உருவாகும் கரு சாதாரணமாக வளர்ந்து பிறக்கும் போது ஒரு குழந்தையாக பிறக்கும்.

சில சமயம் இது வளரும் போது இரண்டாகப் பிரிந்து வளர்ந்தால் ஒரே மாதிரியான இரண்டு குழந்தைகள் பிறக்கும்.

இப்படி பிறப்பது இரண்டும் ஆணாக இருக்கும். அல்லது இரண்டும் பெண்ணாக இருக்கும். அபூர்வமாக சில சமயம் தாயின் இரண்டு உயிரணுக்கள் தந்தையின் இரண்டு உயிரணுக்கள் தனித்தனியாக சேர்ந்து இரண்டு கருக்கள் உருவாகி வளர்ந்து பிறப்பதும் உண்டு. இப்படி பிறக்கும் போது ஒன்று ஆணாகவும் இன்னொன்று பெண்ணாகவும் கூட இருக்கலாம்.

மூன்றாவது வகை : மிக மிக அபூர்வம். உடல் இரண்டும் ஒட்டிக் கொண்டே பிறப்பது. சயாமிய இரட்டையர்கள் என்பது இதற்குப் பெயர் (Siamese Twins)

பொதுவாக இரட்டைக் குழந்தைகளாகப் பிறப்பவர்கள் ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ்வது அபூர்வம். அதுவும் சின்ன வயதிலிருந்து பிரிந்து விடுபவர்கள் மிகவும் குறைவு. அப்படி பிரிந்து வேறு வேறு இடங்களில் வாழ்பவர்களைக் கண்டுபிடித்து அவர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார் தோமஸ் பூச்சார்ட் என்ற பேராசிரியர்.

மின்ன சோட்டா பல்கலைக்கழகத்தின் உளவியல் துறைத் தலைவரான அவர், ஒன்றாக பிறந்து, ஒருவரை ஒருவர் பார்க்காமல் வெவ்வேறு இடங்களில் பிரிந்து வாழும் இரட்டையர்களைக் கண்டு பிடித்தார். அவர்களை எல்லாம் ஒரே இடத்துக்கு வரவழைத்தார்.

ஆராய்ச்சிக்குச் சம்மதித்த இரட்டையர்களை மின்ன சோட்டா பல்கலைக்கழகம் பணம் கொடுத்து கூப்பிட்டது. ஆறு நாட்கள் அவர்களெல்லாம் விருந்தாளியாக தங்கியிருந்தார்கள். அப்பொழுது அவர்களுடைய குணநலன்கள், நடை, உடை, பாவனைகள், பழக்க வழக்கங்கள், உடம்பில் உள்ள நோய்கள், பொழுது போக்குகள், நண்பர்கள், மத நம்பிக்கை...

இது சம்பந்தமாக 15 ஆயிரம் கேள்விகள் கேட்டு, கிடைத்த விபரங்களை கணனியில் கொடுத்து விபரங்களை தெரிந்து கொண்டார்கள். அப்பொழுது தான் சில ஆச்சரியமான உண்மைகள் தெரிய வந்ததாம். ஜரீன்மில்லர், ஆன் சிங்கர் என்ற இரண்டு பெண்களும் இரட்டையர்கள். பிறந்தவுடன் பிரிந்து விட்டார்கள். 60 வருடமாக ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை.

அப்படி இருந்தும் என்ன ஒரு ஆச்சரியம் தெரியுமா? இவர்கள் இருவரும் சந்திப்பதற்கு பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்தபோது... இரண்டு பேரும் ஒரே மாதிரியான பரிசுப் பொருளையே வாங்கிக்கொண்டு வந்தார்களாம்! ஒரே மாதிரி வேலைப்பாடுடைய தட்டுகளைக் கொண்டு வந்திருந்தார்களாம்.

ஆஸ்கர் ஸ்டோகர், ஜாக்யூக என்ற இரட்டையர்கள் பிறந்தவுடன் பிரிந்து விட்டார்கள். ஜேர்மனியில் ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவராகி ஆஸ்கர் வளர்த்து வந்தார். தென் அமெரிக்காவுக்குப் பக்கத்திலுள்ள டிரினிடாட் நாட்டில் ஒரு யூதமதக் குடும்பத்தில் ஜான்யூக் வளர்க்கப்பட்டார்.

இவர்கள் இரண்ட பேரும் சந்திக்க ஏற்பாடு செய்த போது இருவரும் ஒரே மாதிரியான கண்ணாடி போட்டிருந்தார்களாம். ஒரே மாதிரி உடை அணிந்திருந்தார்களாம். அதுமட்டுமல்ல... இருவரும் ஒரே மாதிரியான மீசை வைத்திருந்தார்களாம்.

அமெரிக்க இரட்டையர்களான டோனி மிலாய், ரோஜர்புருக் சிறிய வயதிலேயே இவர்களை இரண்டு வெவ்வேறு குடும்பங்கள் சுவீகாரம் எடுத்துக் கொண்டன.

இவர்கள் சந்தித்த போது ஒரு ஆச்சரியம். இரண்டு பேரின் பெட்டியைத் திறந்து பார்த்தபோது, ஒரே மாதிரியான ஷேவிங் கிறீம். ஒரே மாதிரி பெயர் ஒயில் இருந்ததாம். இருவரும் சுவீடனிலிருந்து இறக்குமதியாகும் ஒரே வகை பற்பசையை வைத்திருந்தார்களாம்.

ஜிம் ஸ்பிசிங்கர், ஜிம் லூயிஸ் என்ற இரட்டையர்கள் 39 வயது வரை ஒருவரை ஒருவர் பார்க்காமல் வளர்ந்தவர்கள். இவர் கள் இருவருமே கை நகங்களை கடிக்கும் பழக்கம் உள்ளவர்கள். கார் றேஸ் பந்தயத்தில் விருப்பம் உள்ளவர்கள். புகை பிடிப்பவர்கள். ஒரே மாதிரியான கார் வைத்திருந்தார்களாம்.

இரட்டையர்களை ஆராய்ச்சி செய்த பேராசிரியர் என்ன சொல்கிறார் தெரியுமா? நம்முடைய குண நலன்களில் ஒரு சிறிய பகுதியை – ஆனால் முக்கியமான பகுதியை – பெற்றோர்களிடமிருந்து நாம் பெற்ற மரபணுக்கள் (Genes) தான் முடிவு செய்கின்றன. இதைப் புறக்கணிக்க முடியாது.

ஆனால் நாம் மரபணுக்களின் '**கைதிகள்**' அல்ல. நாம் வளரும் சூழ்நிலையும் நம்மை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகிறது என்பது அவரது முடிவு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கடற்கொள்ளைகளை தடுக்க இந்தியா-இலங்கை இணக்கம்

(கொழும்பு)

இந்தியப் பெருங்கடலில் செயற்படும் தீவிரவாதக் குழுக்கள் மற்றும், கடற்கொள்ளைக்கு எதிராக நடவடிக்கைகளை இணைந்து முன்னெடுப்பது குறித்த கடற்படை ஒத்துழைப்புகளை வலுப்படுத்த இந்தியாவும் இலங்கையும் இணங்கியுள்ளதாக ஹிந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய அரசாங்க உயர்வட்டாரங்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை புதுடில்லியில் இலங்கை பாதுகாப்புச் செயலருக்கும், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனுக்கும் இடையில் நடத் தப்பட்ட பகிரங்கப்படுத்தப்படாத சந்திப்பிலேயே இது தொடர்பான நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன.

இருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் பதற்றம் நிலவுகின்ற சூழலில், இதுபோன்று, இந்திய கடற்படை தளபதிகளுடனும கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை, பாதுகாப்புச செயலர் கோத்தபாய ராஜபக்ஷ சந்தித்துப் பேசியதை, உறுதிப்படுத்திய இந்திய வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர், இராணுவ மட்ட சந்திப்புகள் குறித்து கருத்து எதையும் வெளியிட மறுத்துவிட்டார்.

கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில், இந்தியக் கடற்படைத் தளபதிகளுடன், இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ பேச்சுக்களை நடத்தியிருந்தார் என்பதை, இந்தியக் கடற்படையின் பேச்சாளர் ஒருவர் உறுதிப்படுத்தினார்.

ஆனால் அவரும் அது தொடர்பான விபரங்களை பகிர்ந்து கொள்ள மறுத்து விட்டார்.

கோத்தபாய ராஜபக்ஷவுடனான சந்திப்பு குறித்து, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனின் செயலகம், எந்தப் பதிலையும் அளிக்கவில்லை.

அதேவேளை, இருநாடுகளுக்கும் பொதுவான பாதுகாப்பு நலன்கள் விடயத்தில், இராணுவ மட்டத்திலான ஒத்துழைப்புகளை மேலும வலுப்படுத்துவதை மையப்படுத்தியே கடந்த வார சந்திப்புகள் இடம்பெற்றதாக, இந்திய அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசியல் அழுத்தங்களால், இந்திய-இலங்கை உறவுகளில் ஏற்படுத்தக் கூடிய தாக்கம் உள்ளிட்ட பரந்துபட்ட மூலோபாய சூழ்நிலைகள் குறித்தும் கோத்தபாய ராஜபக்ஷ கலந்துரையாடியுள்ளார்.

கடந்த ஜூலை மாதம், இந்தியா, இலங்கை, மாலைதீவு ஆகிய மூன்று நாடுகளும் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றில் கையெழுத்திட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொதுமக்கள் மீது நெல்லியடி பொலிஸார் மீண்டும் தாக்குதல்

(கரவெட்டி)

வடமராட்சி, நெல்லியடிப் பொலிஸார் மீண்டும் பொதுமக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 10 மணிக்கு கரவெட்டி இராஜகிராமம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, நேற்றைய தினம் சந்தேக நபரொருவரைக் கைது செய்வதாகக் கூறி, முச்சக்கர வண்டியில் சென்ற மூன்று நெல்லியடிப் பொலிஸார் வீடொன்றினுள் புகுந்து, ஒருவரை சந்தேக நபர் என கைது செய்துள்ளனர்.

இதன்போது, கைது செய்தவரின் மனைவி எதற்காக கைது செய்கிறீர்கள் எனக் கேட்டு பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

வாக்குவாதத்தில் ஈடுபட்ட ரவிக்குமார் ரஜிதா (வயது 26) என்ற குறித்த நபரின் மனைவியின் காதருகில் கைத்துப்பாக்கியை வைத்து மிரட்டியதோடு தாக்கியுமுள்ளனர். அத்தோடு, கைது செய்யப்பட்டவரின் தாயான நல்லதம்பி லங்காதேவி (வயது 55) என்பவரையும் தாக்கியுள்ளனர்.

சந்தேக நபரென கைது செய்யப்பட்ட நல்லதம்பி ரவிக்குமார் (வயது26) என்பவர் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக, வீட்டார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்திற்கு சென்ற வேளை பதிவாளர் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு பணித்ததன் பிற்பாடு, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அத்தோடு, பாதிக்கப்பட்டவர்கள் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவிடமும், நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.ஹங்காராவுக்கும் மேலதிகமாக முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 - 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 70 - 90 | 70 | 120 |
| தக்காளி | 20 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 - 30 | 30 | 40 |
| கோவா | 20 | 10 | 40 |
| கரட் | 50 | 30 | 80 |
| பூசணி | 25 | 20 | 50 |
| புடோல் | 20 | 20 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 - 200 | 240 | 200 |
| பெரிய வெங்காயம் | 60 - 100 | 160 | 120 |
| பாகற்காய் | 60 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 30 | 25 | 50 |
| பயற்றங்காய் | 50 - 70 | 60 | 80 |
| லீக்ஸ் | 60 | 50 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 60 |
| கறிமிளகாய் | 100 | 130 | 120 |
| முருங்கைக்காய் | 80 - 120 | 50 | 100 |
| போஞ்சி | 100 | 90 | 120 |
| கீரை - 1 பிடி | 10 - 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 - 120 | 80 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30 - 60 | 50 | 35 - 45 |

# இராசி பலன்

04.12.2013
(கார்த்திகை 18, புதன்கிழமை )
சூரிய உதயம் காலை 6.09 மணிக்கு
துதியை பின்னிரவு 2.13 மணிவரை
மூலம் பின்னிரவு 3.29 மணிவரை
இராகுகால்ம் 12.15-01.45 மணிவரை
சுபநேரம் 4.45-6.15 மணிவரை

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள். பொதுவழியில் ஏற்பட்ட வீண் பழிகள் மாறும். தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள். சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** சுப விரயங்கள் ஏற்படும் நாள். குடும்பத்தில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும்.பிரயாண பயம் உண்டு உடல் நலனில் கவனம் தேவை. வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும். நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள். விரும்பிய பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள். எடுத்த காரியங்கள் எளிதில், கைகூடும்.

**கடகம்** பகை விலகி பாசம் கூடும் நாள். பயணங்களால் பலன் கிடைக்கும். சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு உருவாகும். பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**சிங்கம்** பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். சொத்துக்களால் ஆதாயம் உண்டு. புண்ணியகாரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** தூரத்துச் சொந்தங்களால் நன்மையுண்டு. குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர். வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.சுப செலவுகள் அதிகரிக்கும். தொழில் நன்மையுண்டு.

**துலாம்** பாராட்டும் புகழும் கூடும். வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.பழைய பாக்கிகள் வசூலாகும். இளைய சகோதரத்தின் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** குடும்பத்தினரின் எண்ணங்களை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள். வருமானம் திருப்தி தரும். விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு. உஷ்ண சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம்.

**தனுசு** சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள். திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம். வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

**மகரம்** மனத்திற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள். குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது. சயன சுகக் குறைவான நாள்.

**கும்பம்** தனவரவு திருப்திபரமாக அமையும். எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். கௌரவமான நாள். சமயோசித புத்தியால் பலரையும் கவருவீர்கள்.

**மீனம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள். மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும். பிறர் உதவியுண்டு. சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல்-2013

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08 ஆம் திகதிய NP/05/01/GE 6/UNS/RQ இலக்க கடிதத்திற்கமைவாகவும் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆள்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### சேவை நிபந்தனைகள

01.இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.

02.ஊழியர் விதவைகள் /தபுதாரர்கள், அநாதைகள் ஒய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

03.நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள.

### அடிப்படைத் தகைமைகள்

01.விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

02.விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.

03.நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

04.விண்ணப்பதாரி புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

05.தொழில்நுட்பம் சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

### தெரிவு செய்யப்படும் முறை

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் விதிக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

### விண்ணப்பிக்கும் முறை

01.புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா நூறு (100/-) செலுத்தி அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும.

02.விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப் படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

03.விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு "செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு" என்ற முகவரிக்கு 20.12.2013 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

04.தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்.

05.ஆள்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ நியமனத்தின் பின்னராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பதிலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

## பதவிகள் பற்றிய விபரங்கள்

| பதவி இல. | பதவிகள் |
|---|---|
| 01 | காரியாலய காரியா சகாயர் - தரம் III |
| 02 | நூலக பரிசாரகர் - தரம் III |
| 03 | வேலைத் தொழிலாளி தரம் III |
| 04 | சுகாதாரத் தொழிலாளி தரம் III |

சம்பள அளவுத்திட்டம - PL-1-2006A (11730-10X120-10X130-10X145-12X160-17600)

### கல்வித் தகைமை

01.கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (6) பாடங்களில் சித்தியடைந தருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (5) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு- 01 இல் குறிப்பிட்ட கல்வித்தகைமைகளுடன் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் தரம் 8 சித்தி கவனத்தில் கொள்ளப்படும்.

| பதவி இல. | பதவிகள் |
|---|---|
| 05 | ஆயுள்வேத மருந்தாளர் - தரம் III |
| 06 | மின்னிணைப்பாளர் - தரம் III |

சம்பள அளவுத்திட்டம - PL-2-2006A (12210-10x130-10x145-10x160-12x170-18600)

### கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்

01.கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு(6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (5) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

02.இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்ப இறுதித் திகதியன்று ஆறு மாதத்துக்கு குறையாத வகையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் கல்வி நிறுவனத்திலிருந்து துறைசார்ந்த பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

| பதவி இல. | பதவிகள் |
|---|---|
| 07 | சாரதி - தரம் III |

(சி/5646)

சம்பள அளவுத்திட்டம - PL-3-2006A (12470-10X130-10X145-10X160-12X170-18860)

### கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்

01.கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு(6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (5) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

02.விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை/தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்குக் குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை விண்ணப்ப இறுதித் திகதிக்கு மூன்று(3) வருடத்திற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.

03.மோட்டார் வாகன சாரதியாக மூன்று (3) வருட அனுபவத்திற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

04.விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5 அடி 2 1/2 அங்குலம் உயரம் இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விதிமுறை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

05.விண்ணப்பதாரி இரவு. பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியை கொண்டிருப்பதுடன் சிறந்த கண்பார்வையினை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

06.பெருந்தெரு பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சு.மிதிலைநாதன், செயலாளர், பிரதேசசபை புதுக்குடியிருப்பு.**

## ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்/ஏழாலை வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் ஒளிவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் சமாதானநீதவான் ஆ.சிறீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் உப அதிபர் வணக்கத்துக்குரிய கலாநிதி டி.எஸ். சொலமன், சிறப்பு விருந்தினராக குளமங்கால்,ஏழாலை பங்குத்தந்தை அருட்பணி றெக்ஸ் சௌந்தரா அதிபர் ஏழாலை இரட்சணிய சேனை பங்குத்தந்தை போதகர் புவனேன்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532


**பிள்ளையார் இன்**

தினமும் நிறைவான மதிய உணவு (பூ்ஃபே) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை

- சைவ உணவு -150/= மட்டுமே
- அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:-இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2829

(சி/5541)



JAFFNA COLLEGE · CEYLON

**JAFFNA COLLEGE**

Jaffna College Carol service is post poned due to unavoidable circumstances to 8 th December 2013 at 4.00 p.m

Principal

(சி/5645)


## அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)**
**வட்டாரம் :- 11**
**ஆதன இலக்கம் :-21/155 (புதிய பதிவு)**
**கொத்துக்கட்டி வீதி, நவாலி**

வட்டாரம் 11 கொத்துக்கட்டி வீதி ,நவாலி ஆதன இலக்கம் 21/155 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட்மாகாணம் ,யாழ்ப்பாணம் ,வலிகாமம் ,மேற்குப் பகுதி ,மானிப்பாய் , கோவில்பற்று, நவாலி இறை) ''மாடிவளவு '' எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்று குளி 4.5 (நி.ப 01 குளி 4.5) இவ்வாதனமானது நவாலி தெற்கைச் சேர்ந்த பொன்னுத்துரை பெண் கமலா அவர்களால் அறுதி உறுதி மூலம் நவாலி தெற்கை சேர்ந்த பத்தலோம் பேர்னாட் பெண் தனலாவதி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் செல்வி.ஞானலோஜினி சிவஞானம் முகதாவில் நிறைவேறிய 8642 ஆம் இலக்க 2013.08.07 ஆம் திகதி அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய்கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். ''மாடிவளவு'' நிலப்பரப்பு 01 குளி 4.5 உள்ள இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம்பத்தலோம்பேர்னாட் பெண் தனலாவதி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினைபெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்,
வலி தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய். (4643)


**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து (V)<br>நட்சத்திரம் :ரோகினி 4<br>கி.பா: 30 செவ் 1இல் உயரம்: 5'8"<br>தகைமை: A/L<br>தொழில்:சர்வதேச வியாபாரம்<br>தொ.இல. B/158 | பிறப்பு: 1988 இந்து (V)<br>நட்சத்திரம் :கார்த்திகை 3<br>கி.பா: 58 செவ்.1 இல். உயரம்: 5' 10"<br>தகைமை: BSc ஆசிரியர்<br>தொ.இல. G/209 |
| பிறப்பு: 1979 இந்து (Pa)<br>நட்சத்திரம் :உத்தராடம் 4<br>கி.பா: 67 செவ் 1இல் உயரம்: 5'6'<br>தகைமை: O/L<br>தொழில்: கடை (சுயதொழில்)<br>தொ.இல. B/159 | பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம் : மகம் 3<br>கி.பா: 17.75 செவ் 4இல் உயரம்: 5'<br>தகைமை: O/L<br>தொழில்: முன்பள்ளி ஆசிரியர்<br>தொ.இல. G/210 |
| பிறப்பு: 1986 இந்து (KO)<br>நட்சத்திரம் :மகம் 23<br>கி.பா: 15 உயரம்: 5' 3"<br>தகைமை: O/L<br>தொழில்:பட்டதாரி/ லண்டன் (Not PR)<br>தொ.இல. B/166 | பிறப்பு: 1967 இந்து (V)<br>நட்சத்திரம் : ஆயிலியம் 1<br>கி.பா: 39.5 செவ்.12 இல்<br>உயரம்: 5' தகைமை: O/L<br>தொ.இல. G/211 |
| பிறப்பு: 198 இந்து (V)<br>நட்சத்திரம் :ரோகினி 1<br>கி.பா: 16. செவ். 8 இல் உயரம்: 5'8"<br>தகைமை: BBA,BA, Business Management<br>தொழில்: கணக்காளர் (UKNot PR)<br>தொ.இல. B/167 | பிறப்பு: 1982 இந்து (Se)<br>நட்சத்திரம் :சித்திரை 3<br>கி.பா: 49<br>உயரம்: 5'6"<br>தகைமை: BA, AIB<br>தொழில்:உதவி முகாமையாளர் (வங்கி)<br>தொ.இல. G/212 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு கொமாண்டோ பயிற்சியளித்தனர் ரஷ்யர்கள்

## நீதிமன்ற விசாரணையில் தகவல்

(கொழும்பு)

தமக்கும் வேறு சிலருக்கும் பத்து ரஷ்யர்கள் சிறப்பு கொமாண்டோ பயிற்சி அளித்ததாக அனுராதபுர விமானப்படைத் தளம் மீதான தாக்குதலில் தொடர்புடையவரென குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலிப் போராளி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அனுராதபுர விமானப்படைத் தளம் மீது 2007 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடத்தப்பட்ட கரும்புலிகளினதும் வான்புலிகளினதும் தாக்குதல்களில் விமானப் படையின் 10 விமானங்கள் அழிக்கப்பட்டன.

இந்த தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் உறுப்பினர் ஒருவர் நேற்றுமுன்தினம் அனுராதபுர சிறப்பு நீதிமன்றில் சாட்சியமளித்தார்.

எனக்கும் வேறு சிலருக்கும் ரஷ்யர்கள் பத்துப் பேர் சிறப்பு கொமாண்டோ பயிற்சிகளை வழங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு விடுதலைப் புலிகள் 2005 ஆம் ஆண்டில் திட்டமிட்டனர்.

நான் தொலைத் தொடர்பு கருவிகளின் மூலம் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தின் மீது சுமார் 100 ஆட்டிலறி குண்டுகளை விடுதலைப் புலிகள் ஏவியிருந்தனர்.

அனுராதபுர விமானப்படைத் தளம் குறித்த தகவல்களை சேகரிக்கச் சென்ற எமக்கு, இரவுப் பார்வை தொலைநோக்கி, சத்தமின்றி சுடக்கூடிய கைத்துப்பாக்கி, புவிநிலை காட்டி உள்ளிட்டவை வழங்கப்பட்டன.

அனுராதபுர விமானப்படைத் தளம் மீதான தாக்குதல் திட்டம் 2007 இல் விசுவமடுவிலுள்ள விடுதலைப் புலிகளின் தளத்தில் தயாரிக்கப்பட்டது.

அதன் பின்னர் நான் மன்னாரில் உள்ள கடற்புலிகளின் முகாமுக் குச் சென்றேன்.

தாக்குதலுக்காக அனுராதபுர விமானப்படைத்தளத்துக்கு பச்சை நிறத்திலான இராணுவ சீருடையுடன் விடுதலைப்புலி போராளிகள் வந்திருந்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவரைவிளக்கமறியிலில்வைக்க உத்தரவிட்ட அனுராதபுர சிறப்பு நீதிமன்ற நீதிபதி எதிர்வரும் 11 ஆம் திகதி மன்றில் முன்னிலைப்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# சந்தேக நபரான வாஸ் வைத்தியசாலையில்

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன வைத்தியாசலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கொழும்பு பம்பலப்பிட்டியை சேர்ந்த கோடீஸ்வரரான வர்த்தகர் மொஹமட் ஷியாம் என்பவர் கடத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக சிறைச்சாலை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தினர்.

ஷியாம் கொலை வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழகத்தின் கணனி பிரிவு வழங்கிய அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

கொலை சம்பவத்துடன் தொடர்புடைய ரவிந்து குணவர்த்தன உட்பட 6 சந்தேக நபர்கள் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர். (அ-2)

## இரு மாகாணசபைகள் கலைக்கப்படவுள்ளன

(கொழும்பு)

தென் மற்றும் மேல் மாகாண சபைகளுக்கு எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தேர்தல் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் இந்த இரு மாகாணசபைகளும் கலைக்கப்படலாம் என்றும் அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதுதொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய சம்மேளனக் கூட் டத்தில் அறிவிக்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.(அ-2)

# தூய தாவர உணவு விநியோக நிறுவனங்களுக்கு இலட்சினை

(கொழும்பு)

தூய தாவரவுணவுகளை விநியோகிக்கும் நிறுவனங்களுக்கு அடையாள சான்றிதழ் மற்றும் இலட்சினைகளை அறிமுகப்படுத்துவதறகு இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் கவனம் செலுத்தியுள்ளது .

எதிர்வரும் வாரமளவில் குறித்த ஆவணங்களை சைவ அல்லது தாவரவுணவுகளை உற்பத்தி செய்யும் மற்றும் விருந்தகங்களுக்கு வழங்கும் நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாக தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் லலித் சேனவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

இதன் மூலம் பொதுமக்கள் இலகுவாக தாவர உணவுகளை விநியோகிக்கும் விருந்தகங்களை இனங்கண்டு தமது தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு இயலும் .

இதன்போது சந்தேகமின்றி பயனடைய முடியும்.

மின்சக்தியை சிக்கனப்படுத்தும் செயற்பாட்டுக்கு இணங்க குளிர்சாதன பெட்டி மற்றும் வாயு சீராக்கி இயந்திரங்கள் குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளதாக குறிப்பிட்டார் .

அதன்பொருட்டு , நட்சத்திர தரத்தில் கொள்கையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நட்சத்திர எண்ணிக்கை தரப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் . அதன்படி குளிரூட்டல் முறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் .

எனவே , பொதுமக்கள் அதிக நட் சத்திர தரப்படுத்தலை கொண்ட குளிரூட்டல் சாதனங்களை பொது மக்கள் பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமையும் என்றார். (அ-2)

## சிவ ஆராதனையும் பிரார்த்தனையும்


(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் சிவ ஆராதனை பிரார்த்தனை நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 7.30 மணிக்கு சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் ஒன்றியத்தின் மகா சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்தின் யாழ். மாவட்ட கிளையினர் அறிவித்துள்ளனர். (அ-9)

## ஒளி விழா

பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வு இன்று காலை 10 மணி முதல் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி மேரிலாசர் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பண்டத்தரிப்பு பரிஷ் பங்குத்தந்தை வண.யூயின் பிரான்சிஸ் கலந்துகொள்வார். மாணவர்களின் நாடகம், குழுப்பாடல், கரோல் கீதம் உள்ளிட்ட கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ-9-23)



வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, கோண்டாவில் பொது நூலகத்தினரால் மாணவர்களுக்கு கருத்தரங்கு நடத்தப்பட்டபோது...

# பொதுநலவாய மாநாடு மூலம் நாட்டுக்கு 369 முதலீடுகள்

## அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை பொருளாதார ரீதியில் நலிவடையச் செய்தால் அரசாங்கத்தை கவிழ்க்க முடியும் என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன யாப்பா அபேவர்த்தன தெரிவிதுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டின் மூலம் இலங்கைக்கு பல முதலீட்டாளர்கள் வருகை தந்துள்ளதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அமைச்சரின் கூற்றுபடி பொது நலவாய மாநாடு மூலம் இலங்கைக்கு கிடைக்கும் முதலீட்டு வியாபாரத்தின் தொகையும் வழங்கும் நாடுகளும் பின்வருமாறு:

நைஜீரியா - 22, சீனா - 85, இந்தியா - 75, மலேசியா - 18, ஐக்கிய இராச்சியம் - 138, பங்களாதேஷ - 31

வவுனியா, கிளிநொச்சி போன்ற முதலீட்டு வலயங்கள் பல இனங்காணப்பட்டுள்ளதாகவும் முதலீட்டு சபை மூலம் 10ஆயிரம் வேலை வாய்ப்புக்கள் இலங்கைக்கு கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் சிறப்பாக இயங்கி தற்போது வாகன பரிமாற்ற மத்திய நிலையமாக மாறியுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

தனது அமைச்சுக்கு நிதி போதும் எனவும் சில சந்தர்ப்பங்களில் தமது அமைச்சு அரசாங்கத்திற்கு நிதி வழங்குவதாகவும் லக்ஸ்மன் யாப்பா கூறினார்.

தேசிய உற்பத்திகளை ஊக்குவிக்கும் பொருட்டு சில பொருட்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# ஐ.தே.கவை எங்களிடம் தாருங்கள் ரணிலையும் பாதுகாப்போம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை எங்களிடம் ஒப்படைத்தால் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எந்தவித அச்சுறுத்தல்களும் ஏற்படாதவாறு நாங்கள் பாதுகாப்போம். ஏனெனில், அவருக்கு ஐ.தே.க.வுக்குள்ளேயே அச்சுறுத்தல்கள் அதிகளவில் உள்ளன என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி உட்பட அவருக்கு கீழுள்ள 27 நிறுவனங்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எதிர்க்கட்சித் தலைவருக்கு பாதுகாப்பு மாத்திரமன்றி அவர் கேட்கும் எந்த உதவியையும் வழங்க



ஜனாதிபதியும் அரசாங்கமும் தயாராகவுள்ளது.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளாது பகிஷ்கரித்ததன் மூலம் எதிர்க்கட்சித் தலைவர் தனது பதவிக்குரிய பொறுப்பை நிறைவேற்றவில்லை.

எனவே ரணில் விக்ரமசிங்கவுக்கு புத்திமதிகள் கூறி அவரை நல்வழிப்படுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒன்றுபட்டு செயற்பட முன்வர வேண்டும்.

இதற்கான எந்தவொரு உதவியையும் வழங்க ஜனாதிபதி தயாராகவுள்ளார்.

சனல் - 4 கூலிக்காக செய்யம் வேலைத்திட்டங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி துணைபோயுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் வெறுக்கும் சனல் 4 இனரை எதிர்க்கட்சியினர் ஸ்ரீகொத்தாவுக்கு அழைத்துச் சென்றது பாரிய விடயமாகும். பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் உச்சி மாநாடு இலங்கையில் நடைபெற்றமை தொடர்பில் எதிர்க் கட்சிகள் பல கருத்துக்களை முன்வைத்தன.

இந்த உச்சிமாநாடு இலங்கையில் நடைபெற்றமையை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கின்றதா என்று நான் கேள்வி கேட்க விரும்புகின்றேன். இதன் செலவுகள் தொடர்பில் குற்றஞ்சுமத்துகின்றனர்.

உலக நாட்டின் அரச தலைவர்களை முச்சக்கரவண்டியிலா அழைத்துச் செலவது என்றும் அவர்களிடம் கேட்கின்றேன் என்றார். (அ-2)

# ஆந்திரக் கடல் எல்லையில் இலங்கை மீனவர்கள் கைது

(கொழும்பு)

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் அறுவரை இந்திய கடலோர காவற்படையினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள் ஆந்திரக் கடல் எல்லைக்குள் வைத்தே நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள் ளனர் என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இவர்கள் பயணித்த படகுகளையும் இந்திய கடலோர காவற்படையினர் கைப்பற்றியுள்ளனர்

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தமை மற்றும் மீன்பிடித்தமை காரணமாக கடந்த 10 நாட்களுக்குள் இலங்கை மீனவர்கள் 56 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாதம் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

உங்களுக்குப் பிறவியிலேயே ஒருவிதச் சுதந்திர மனோபாவம் ஓர் இயல்பாகவே உங்களிடம் குடி கொண்டிருக்கும். எனவே, நீங்கள் சுயேச்சையான போக்கையே விரும்புவீர்களே தவிர கட்டுப்பட்டு வாழ்க்கையில் முடங்கிக் கிடக்க விரும்பமாட்டீர்கள்.

உங்கள் மனப்போக்கை அனுசரித்து நடந்தாலே உங்களுக்கு வாழ்விலே உற்சாகமும், பிரகாசமும் ஏற்பட்டு உங்கள் வாழ்க்கை மலர்வதோடு உங்களைச் சார்ந்துள்ளவர்களின் வாழ்வையும் தொழிலையும் மலரச் செய்வீர்கள்!

சுறுசுறுப்புடைய நீங்கள் எதையும் ஊடுருவிப் பார்க்கும் தனியாற்றல் படைத்தவர்களாகவும் இருப்பீர்கள். பிறர் உள்ளத்தில் உள்ளதை சுலபமாக அறிந்து கிரகிக்கும் சக்தியும் உங்களுக்கு அபாரமாக ஏற்படும். முன்கூட்டியே எதையும் யூகித்து விடும் ஆற்றலும் உங்களுக்குப் பிறவியிலே இயற்கைப் பரிசாக அமைந்திருக்கும்.

இந்த ஆற்றலை நீங்கள் வளர்த்துக் கொண்டால் எதிர்காலத்தில் எதையும் ஊடுருவிப் பார்க்கும் தீர்க்க திருஷ்டி வாய்ந்த ஞானிகளாகவோ அரசியலிலும் சமூகத்துறைகளிலும் பொருளாதாரத்திலும் தொழிற்றுறைகளிலும் கூட எதிர்காலத்தை யூகித்துணர்ந்து எதிர்காலத்தையும் வெல்ல வல்ல அறிவாளிகளாகவும் திகழமுடியும்!

உங்கள் தனுர் ஸ்தானத்தில் சூரியன் பூரண கதிரியக்கத்தோடு இயக்குவதால் தத்துவம், சட்ட நுணுக்கங்கள் ஆகிய உயரிய சிந்தனைகளில் நீங்கள் அதிகக் கவனம் செலுத்துவீர்கள். நீங்கள் உங்கள் எதிர்காலத்தைப் பற்றி எச்சரிக்கையாக இருப்பீர்கள். நீங்கள் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முயல்வதோடு உண்மைகளை உணர்ந்து கொள்ளவும் விரும்புவீர்கள்.

ஒருவர் பேசுவதில் எது பொய், எது மெய் என்பதை அவர்கள் பேசும் தொனியிலிருந்தே அறிந்து கொண்டு விடுவீர்கள். நீங்கள் பிறருக்கு வழிகாட்டியாகவும் உங்கள் வாழ்க்கையில் உயர்ந்த சிந்தனைகளோடும் வாழ்வீர்கள். எல்லோருக்கும் நன்மை செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணமே உங்கள் உள்ளத்தில் குடிகொள்ளும்.

உங்கள் ஸ்தானத்திற்கு ஆட்சியாதிபதி தேவகுரு. அதாவது வியாழன் , புவனச் சக்கரத்தில் இயங்கி வரும் கிரகங்கள் எல்லாவற்றையும் விட குரு கிரகம்தான் மிகப் பெரிய கிரகமாகையால் பொதுவாக எல்லாருடைய ஜாதகத்திலும் குருவின் தன்மையை ஆராய்வது அவசியாகும்.

குறிப்பாக உங்கள் தனுர் ஸ்தலத்திற்கு ஸ்தானாதிபதி தேவ குருவாகவே இருப்பதால் உங்களு க்கு அதிர்ஷ்ட வாய்ப்புகளும் அதன் மூலம் வசதிகளும் அவற்றை நீங்கள் அடையும் காலமும் நேரமும் உங்கள் வாழ்வில் ஒரு குறிப்பிடத் தக்க பகுதியில் ஏற்படக் கூடும்.

அதிர்ஷ்டங்கள் உங்களுக்கு குருவின் அனுக்கிரகத்தால் உண்டாவது நிச்சயம் என்றாலும் அந்த அதிர்ஷ்டத்தால் வரும் பொருளை நீங்கள் காப்பீர்களா என்பதுதான் பிரச்சினையாக முளைக்கும்! உங்களுக்கு அதிர்ஷ்டவசமாக உங்கள் கையில் கிடைக்கும் பொருள் எவ்வளவு? அதில் உங்களிடம் தங்குவது எவ்வளவு என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தீர்களானால் குருவின் மூலம் நீங்கள் அடையும் நல்ல வாய்ப்புக்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை சமய சந்தர்ப்பத்தில் உணர்ந்து கொள்ள வேண்டியிருக்கும்.

அரசியல்துறை, நிர்வாகத் துறை, சமயத்துறை, தத்துவத் துறை ஆகியவற்றில் ஏதாவது ஒரு வகையில் உங்களுக்கு ஆதாயம் ஏற்படமுடியும். நீங்கள் ஏனைய வர்களுக்கும் எதிர்காலம் சுபமாக அமைய வேண்டும் என்பதற்கு உங்களாலான உதவிகளையும் அறி வுரைகளையும் வழங்கக் கூடியவர் களாகவே எப்போதும் விளங்குவீர் கள். உங்கள் சுயமதிப்பையும் விருத்திசெய்து கொள் வீர்கள்.

நீங்கள் எல்லோரோடும் சுமுகமாகப் பழகுவீர்கள் . ஆனால் சட்டென்று சகஜமாகப் பழகிவிட மாட்டீர்கள். எந்த விடயத்திலும் தேர்ந்த முடிவோடும் தீர்வோடுமே நீங்கள் திட்டமிட்டுச் செயல்புரிவீர்கள்.

ஏனையவர்களின் செயல்களை வழிமுறைப்படுத்தித் தரும் ஆற்றலும் உங்களுக்கு இயல்பாகவே இருக்கும். ஆகையால் நிர்வாகத் துறையில் நீங்கள் சிறப்பாகத் திகழ்வீர்கள்.

உங்கள் வாழ்க்கையை அலங்காரமாக நடத்துவதில் அவ்வளவு விருப்பமில்லாத நீங்கள் , வாழ்க்கை வசதிகளையெல்லாம் ஆடம்பரமாக அமைத்துக் கொள்வீர்கள். உணவு, இன்ப உணர்ச்சிகள், புத்துணர்வுகள் ஆகியவற்றைப் பெறுவதிலும் அடைவதிலும் நீங்கள் பெரும்




விருப்பம் வைப்பீர்கள். அது மட்டுமன்றி நீங்கள் நல்ல ரசிகர்கள்!

எனவே, ஆடம்பரங்களில் அதிக அக்கறை செலுத்துவதாலேயே பொருட்களை வாங்கிக் கொள்வதிலும் வசதிகளை வளர்த்துக் கொள்வதிலும் நீங்கள் அதிகம் செலவழிக்க விரும்புவீர்கள். சனிக் கிரகத்தின் சாயலும் படக்கூடுமாகையால் சில சமயங்களில் நீங்கள் புத்திசாதுரியமற்ற வகையிலும் பின் யோசனையின்றியும் நடந்து கொள்ள நேரிட்டு விடும். அத னால் பொருள் துறையிலும் தொழிற்றுறையிலும் சிற்சில சந்தர்ப்பங்களில் நட்டமடையவோ, நல்ல வாய்ப்புக்களை இழக் கவோ நேரிடலாம். அதிக செலவு செய்வதற்குரிய கஷ்டங்களையோ தண்டனைகளையோ சிலர் அனு பவிக்கவும் நேரலாம். வாழ்க் கையில் வெற்றிகளும் தோல்விகளும் உங்களைப் பொறுத்த வரை சமநிலையிலேயே அமைந்து வரும்.

பொருளாதார விடயங்களில் உங்களுக்கு என்றே தனியான கொள்கை வகுத்துக் கொள்வீர்கள். கௌரவத்தை விட்டுக் கொடுக்காத வகையில்தான் பொருள் சம்பாதிப்பீர்கள். சொந்தத் தொழில் நடத்தும் வியாபாரிகள் அல்லது தொழிலதிபர்கள் யாராவது உங்களை நம்பி, தங்கள் தொழில் துறையின் கண்காணிப்புப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்தால் அந்தத் தொழிலை நீங்கள் நல்லமுறையில் வளர்த்து அபரிமிதமான ஆதாயத்தை அவர்களுக்கு உழைத்தும் தேடியும் கொடுத்து நிர்வாகப் பொறுப்பை ஏற்று திறம்பட நடத்தி உங்கள் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வலுப்படுத்தி விடுவீர்கள்.

(தொடரும்)

## அரசின் பிழைகளை மறைக்கவே மனித உரிமை ஆணைக்குழு

### ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பிழைகளை மூடி மறைப்பதற்காகவே மனித உரிமை ஆணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

மனித உரிமை விவகாரம் நகைப்பிற்குரியதாக மாறியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசாங்கத்தின் குறைகளை மூடி மறைக்கவே நாட்டில் மனித உரிமை ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில கொல்லப்பட்ட கைதிகள் தொடர்பான விசாரணைகளுக்கு என்னவாயிற்று? இன்று கைது செய்யப்படும் நபர்கள் ஆயுதங்களை காட்டச் சென்றோ அல்லது நஞ்சு அருந்தியோ, தப்பிச் சென்றோ உயிரிழக்கின்றனர்.

இவை சட்டத்திற்கு புறம்பான வகையிலான மரணங்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார் என்றார். (அ-2)

## ரணிலின் படத்திற்கு மலர் வைத்து வணங்குங்கள்

### மங்கள எம்.பி.அட்வைஸ்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் படத்திற்கு காலையிலும் மாலையிலும் மலர் வைத்து வணங்க வேண்டியவர்கள் என அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்த அவர்,

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருக்கும் பொழுது ரோம் உடன்படிக்கையில் கையெழுத்திடவில்லை என்பதே அதற்கான காரணம் எனவும் அவர் கூறினார்.

ரோம் உடன்படிக்கையில் போர்க்குற்றங்கள் சம்பந்தமாக குற்றம் சுமத்தப்பட்டால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லும் இணக்கப்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதனால் அதில் அன்று ரணில் விக்ரமசிங்க கையெழுத்திடவில்லை.

ரணில் விக்ரமசிங்க அன்று அந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டிருந்தால் ஜனாதிபதியும் பாதுகாப்புச் செயலாளரும் சர்வதேச நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும் என்றார். (அ-2)

## பரிசளிப்பு விழா

யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் யோ. ஜெக ஆனந்தம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக பாடசாலை பழைய மாணவரும் சட்டத்தரணியுமான ஜோதீந்திர சர்மா சிவராம சர்மா, சிறப்பு விருந்தினராக யாழ்.வலய தகவல் தொழில் நுட்ப சேவைக்கால ஆலோசகர் செல்வி வ.நவரத்தினம் கௌரவ விருந்தினராக சிற்றி எலக்ரோனிக்கல்ஸ் உரிமையாளர் க.தியாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். பரிசில்களை திருமதி மதிவதனி சிவராமசர்மா வழங்கி கௌரவிக் கவுள்ளார்.

◆ ◆ ◆ ◆ ◆

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கே.கே.தவதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணாகிரிநாதன், சிறப்பு விருந்தினராக யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார், கௌரவ விருந்தினர்களாக வித்தியாலய பழையமாணவர்களான இ.நடராசா, இ.சத்தியானந்தன் ஆகி யோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் பரிசில்களை திருமதி யோ. அருணகிரிநாதன் வழங்கி வைக்கவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ-9)

## உண்மைகள் வெளிவரும் போதே இங்கு நல்லிணக்கம் ஏற்படும்

### கமலேஸ் சர்மா

கடந்த காலங்களில் இடம்பெற்றவை தொடர்பில் உண்மை வெளிவரும் போதே இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படும் என்று பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஸ் சர்மா தெரிவித்துள்ளார்.

கடந்த 26 வருடகாலமாக இலங்கையில் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சொத்திழப்புகள் குறித்த கணக்கெடுப்பை இலங்கை அரசாங்கம் மேற்கொள்கின்றமை தொடர்பிலேயே சர்மா இந்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் யாவும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அமுலாக்கலுக்கு முன்னோடியாக இருக்கும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் போர்க்கால இழப்புக்கள் குறித்த கணக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் அது பொது மக்களுக்கு வெளியிடப்படும் என்றும் கமலேஸ் சர்மா நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

## நிறைவேற்று அதிகார ஆட்சிமுறை நாட்டுக்கு சுமை- ஜே.வி.பி. தெரிவிப்பு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை பராமரிப்பது நாட்டுக்கு சுமையானது என்பது ஒப்புவிக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை பராமரிப்பது நாட்டுக்கு சுமை என்பது மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இது மஹிந்த ராஜபக்ஷவின் அல்லது அவர்களின் பிரச்சினை கிடையாது. இதனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும் என்பது உறுதியாகியுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் செலவுகளுக்காக வருடாந்தம் 857 கோடி ரூபா செலவிடப்படுகிறது. இது தினமும் இரண்டு கோடியே 34 இலட்சம் ரூபாவாகும்.

அரச ஊழியர்களுக்கு தேநீர் கரண்டியில் பரிமாறி விட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு கப்பல் மூலம் பரிமாறப்பட்டுள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் செலவுகளுக்காக வெளிநாடுகளில் இருந்து கடன் பெறப்படுகிறது.

கடந்த இரண்டு வருடங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கான செலவுகள் 263 கோடி ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புரட்சிகரமான போராட்டத்தினூடாகவே அடக்குமுறையற்ற சமூகத்தினை உருவாக்கி தன்மானத்துடன் வாழமுடியும்

## பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்

**(கிளிநொச்சி)**

**புரட்சிகரமான போராட்டத்தினூடாகவே அடக்குமுறையற்ற சமூகத்தை உருவாக்கி தன்மானத்துடன் வாழமுடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.**

யாழ்.புத்தகலட்டி சிறிவிஸ்ணு வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.


இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"இயற்கையோடு இணைந்த கல்விச்செயற்பாட்டை உங்கள் கல்வியிலேயே காணமுடிகிறது. ஆரம்ப நிகழ்வுகள் கூட மகிழ்ச்சிகரமாக அமைந்திருந்தன. இவ்வாறு இம் மாணவர்களை வழி நடத்திய அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டுகிறேன்.

கலை பண்பாட்டு அம்சங்களைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் கற்றல் செயற்பாடுகள் அமைய வேண்டும். அந்த வகையில் இன்றைய தினம் பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள் பண்பாட்டு விழுமிய மரபுகளை பேணுவதாக அமைந்துள்ளன.

வளர்ந்து வருகின்ற சிறார்கள் எமது அரசியற்சமூக விழுமியங்களையும் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.

அப்போதுதான் இறுதி யுத்தத்தின் போது ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை எதிர்கால சந்ததியினர் புரிந்து கொள்ளவார்கள். அடக்கு முறைகள் ஏற்படுகின்ற போதுதான் அதற்கு எதிராக புரட்சிகள் எழுகின்றன.



புரட்சிகரமான போராட்டம் ஊடாகவே அடக்குமுறையற்ற சமூகத்தை உருவாக்கி தன்மானத்துடன் வாழமுடியும்" எனத் தெரிவித்தார்.

நிகழ்வின் இறுதிப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவ மணிகளுக்கு ப்ரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அ.பரஞ்சோதி, வே.சிவயோகம், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோருடன் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ம-4)




# ஒதியமலை படுகொலை நினைவு நாள் அனுஷ்டிப்பு

முல்லைத்தீவு ஒதியமலைப் பகுதியில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவு நாளை கடும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நேற்று முன்தினம் அப்பகுதி மக்கள் மழையின் மத்தியிலும் நினைவு கூர்ந்தனர்.

பெருமளவில் இந்நினைவு நாளை அனுஷ்டிப்பதற்கு முடியாத நிலையில் அப்பகுதியிலுள்ள பிள்ளையார் கோயிலில் அன்னதான நிகழ்வுடன் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு வணக்கம் செலுத்தினர் .

குறித்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்கள் து.ரவிகரன், அன்டனி ஜெகநாதன், திருமதி மேரிகமலா குணசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒதியமலைப் படுகொலை நினைவு நாள் நேற்றுமுன்தினமாகும். கடந்த 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஒதியமலயில் 32 பொது மக்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

அவர்களில் 27 பேர் ஒதியமலை நூல்நிலையத்திலும் 5 பேர் அருகி லுள்ள காட்டுப்பகுதியில் உழவு இயந்திரத்தில் எரித்தும் கொல்லப்பட்டிருந்தனர்.

அங்கு ஒதியமலைப் படுகொலையின் போது தனது தந்தையை இழந்த பெண்ணொருவர், வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிடம் தன் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டார். மிகவும் உருக்கமாக இருந்தது. இதே போன்ற ஒரு மழை நாளிலேயே அந் தப் படுகொலை இடம்பெற்றதாகவும் அப் போது தன் தந்தையை இழந்த நிலையில் தான் மிகவும் அதிர்ச்சியுற்றதாகவும் அன்று சிறுவனாக இருந்ததன் மகனும் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டு விட்டதாகவும் அந்தப் பெண் மணி அழுகுரலுடன் தெரிவித்தார்.

இந் நினைவு நிகழ்வில் கலந்து கொண்டது மட்டுமன்றி ஒதியமலை மக்களின் அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்துவ தாக ரவிகரன் மக்களிடம் தெரிவித்தார். பிள்ளையார் கோயிலில் விசேட வழிபாடுகள் முடிந்தவுடன் திரளான மக்கள் பங்களிப்புடன் அன்னதான நிகழ்வு இடம்பெற்றது. இதேவேளை, நிகழ்வில் பத்திற்கும் அதிகமான படைப் புலனாய்வாளர்களும் இராணு வத்தினரும் இறுதி வரை அந்நிகழ்வைக் கண்காணித் தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-6)

# வவுனியாவில் கல்நாட்டியகுளத்தில் சுற்றுலா மையம் அமைக்க நடவடிக்கை


(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட பழைமை யானதும் எல்லை கிராமமுமான கல்நாட்டிய குளத்தில் சுற்றுலா மையம் அமைவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த முதலாம் ஆம் திகதி இடம்பெற்றது.

கல்நாட்டியகுளம் என பெயர் காரணமாக இருந்து வருகின்ற "கல்லுமலை" பகுதியில் ஒரு சுற்றுலா மையம் அமைப்பதற்கு தீர்மானித்த அவ்வூர் இளைஞர்களும், மக்களும் இணைந்து மேற்கொண்ட முயற்சியில் பலரும் கொடுத்த ஒத்துழைப்பினால் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்விற்கு வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி ப. சத்தியலிங்கம், வடமகாணசபை உறுப்பினர் ஜி. ரி. லிங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சுற்றுலா மையம் அமைப்பதற்குரிய இடத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தனர். (ம-266)







வவுனியா ஆச்சிபுரம் கிராமத்திற்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக சிறீடெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசாவின் ஏற்பாட்டில் மின்சாரம் வழங்கும் திட்டத்தின் மூலம் சுமார் 15 வருடங்களின் பின்னர் மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டபோது...
(படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

# உடைப்பெடுத்த குளங்களை புனரமைத்து விவசாய நிலங்களை காப்பாற்றுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் குளங்களின் பெயரிலேயே அதிகமான கிராமங்களின் பெயர்கள் அமைந்துள்ள போதிலும் இன்றைய நிலையில் அக்குளங்கள் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றன.

குளங்களுக்குள் ஏற்படும் அத்துமீறிய குடியேற்றங்கள், வெள்ளம் அதிக மழை வீழ்ச்சியினால் உடைப்பெடுக்கும் குளங்கள் திருத்தப்படாமை என பல்வேறு காரணங்களை சுட்டிக்காட்டலாம்.

அந்த வகையிலேயே வவுனியா சாஸ்திரிகூழாங்குளம் மற்றும் பத்தினியார்மகிழங்குளம் குளங்கள் கடந்த வருடம் பெய்த கட்டுக்கடங்காத மழை மற்றும் வெள்ளம் காரணமாக உடைப்பெடுத்திருந்தன.

இதன்போது அப் பகுதி விவசாயிகளும்இராணுவத்தினரும்இணைந்து உடைப்பை சரிசெய்து பாரிய உயிர் மற்றும் உடைமைச் சேதங்களை தடுத்திருந்தனர்.

இதன் பின்னரான காலப்பகுதியில விவசாய திணைக்களங்களுக்கு விவசாயிகளாலும் கமக்காரா அமைப்புகளாலும் சுட்டிக்காட்டப்பட்டு திருத்தம் செய்து தருமாறு பல தடவை கோரிய போதிலும் இதுவரையில் இக் குளங்கள் திருத்தம் செய்யப்படாமலயே உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குளம் உடைப்பெடுத்தபோது அதனைதடுப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பைகளும்தற்போது பழுதடைந்து போயுள்ள நிலையில் தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளமையினால் இக்குளங்கள் மீள உடைப்பெடுக்கும் வாய்ப்புள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக் குளங்கள் உடைப்பெடுக்கும் பட்சத்தில் சாஸ்திரி கூழாங்குளத்தில் 160 ஏக்கர் விவசாய நிலங்களும் பத்தினியார் மகிழங்குளத்தில் 120 ஏக்கர் விவசாய நிலங்களும் முழுமையாக பாதிப்படையும் நிலை ஏற்படும் எனவும் கமக்காரர் அமைப்பினர் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட விவசாய திணைக்களங்கள் சேதமடைந்துள்ள தமது குளங்களை திருத்தம் செய்து காலபோக நெற்செய்கைக்கு ஆபத்து ஏற்படாத வகையில் குளங்களை புனரமைத்து தரவேண்டும் என கோரியுள்ளனர். (ம-266)

# முதியோர் கௌரவிப்பும் ஒன்றுகூடல் நிகழ்வும்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஊற்றப்புலம் கிராமத்தின் மூத்த பிரஜைகள் அமைப்பின் முதியோர் கௌரவிப்பும், ஒன்று கூடல் நிகழ்வும் நாளை வியாழக்கி ழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஊற்றுப்புலம் சேவை நிலையத்தில் ஊற்றுப்புலம் மூத்த பிரஜைகள் அமைப்பின் தலைவர் நா.சின்னையா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதமவிருந்தினராக கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸவரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரும் , ஊற் றுப்புலம் கிராமத்தின் முன்னாள் திட்ட இணைப்பாளருமாகிய நா.வை. குகராசா , சோ ஆ நிறுவனத்தின் கிளிநொச்சி திட்ட முகாமையாளராகிய ஜென்ஸ்ரன் தயாபரன் நைல்ஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன், கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் செல்வி சண்முகம் காந்திமதி, ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலையின் ம.உமாசங்கர், கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவையின் தலைவர் மா.புவனேந் திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-254)

# பொதுக் கூட்டம்

(இராமநாதபுரம்)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிவநகர் கிராம அபிவிருத்தி சங்க பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சிவநகர் கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ம-269)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலை எழுந்தவுடன் காபி!



ஆன்மீகம் 57

இதுவே ஒரு ஆறுமாத காலம் தொடர்ந்து நீங்கள் காபி அருந்தி வந்தீர்கள், திடீரென்று ஒருநாள் காபி வேண்டாம் என்று நிறுத்த முயல்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அன்று உங்கள் முடிவை ஏற்க முடியாது உங்கள் உடல் தவிப்பதையும் மீண்டும் மீண்டும் காபி வேண்டும் என்று அது ஏக்கமாக நச்சரிப்பதையும் நீங்கள் நிச்சயமாக கவனிக்க முடியும். அப்படி என்றால் நிச்சயமாக ஏதோ ஒரு வகையில் காபி உங்களுக்க பாதிப்பு விளைவிக்கிறது தானே?

அப்போது நான் காபி குடிப்பதை நிறுத்திவிட வேண்டுமா என்று நீங்கள் கேட்கலாம். எதைவிட வேண்டும், எதை விடவேண்டாம் என்று நீங்கள் தான் முடிவு செய்யவேண்டும். இதை விடுங்கள். அதை விடுங்கள் என்று நான் எப்போதும் வலிறுயுத்த மாட்டேன்.

நான் சொல்வதெல்லாம்– நீங்கள் இங்கு வாழும்போது எதற்கும் நீங்கள் அடிமைப்பட்டு வாழாதீர்கள் என்பது மட்டும்தான். பதிலாக விழிப்புணர்வுடன் வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.

காபியாக இருந்தாலும் சரி, சிகரெட்டாக இருந்தாலும் சரி, ஏன் கடவுளாக இருந்தாலும்கூட, அதனுடன் ஒரு விழிப்புணர்வோடு வாழக் கற்றுக் கொள்ளுங்கள். ஒவ்வொன்றும் உங்களுக்கு எவ்வளவு வேண்டும் என்று நீங்கள் மட்டும்தான் முடிவு செய்ய முடியும்.

ஆனால், நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். தூண்டுகோள்களை ஓரளவுக்கு மேல் பயன்படுத்தினால், அதற்கு நீங்கள் விலை கொடுத்துதான் ஆக வேண்டும். அதனால் என்ன...? வாழ்க்கையே கொஞ்சக் காலம்தானே.



90 வயது வரைக்கும் வாழாமல், நான் 70 வயதிலேயே போகிறேன் என்று நீங்கள் சொல்பவராக இருந்தால்... பரவாயில்லை. நான் இந்த எண்ணத்தையும எதிர்க்கவில்லை. காபியையும் எதிர்க்கவில்லை.

ஆனால், இது வலுக்கட்டாயமாக பருகப்பட வேண்டிய ஒரு பானம் அல்ல. அதன் சுவை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா, என்றோ ஒரு நாள் ஒரு பெரிய குவளை நிறைய வேண்டுமானாலும் குடியுங்கள். அதன் சுவையில் திளைத்திடுங்கள். ஒருநாள் குடித்தால் பரவாயில்லை. ஆனால், தினம் தினம் குடித்தே ஆக வேண்டும் என்ற கட்டாயத்=தில் இருந்தால் அது பெரும் பிரச்சினைதான்.

ஒருநாள் காபி கிடைக்கா விட்டாலும் அந்த நாளைக் கடக்கவே முடியாது என்ற நிலையில் நீங்கள் இருந்தால், நிச்சயமாக நீங்கள் இப்பிரச்சினையை சரி செய்து கொள்ளத்தான் வேண்டும். போயும் போயும் ஒரு குவளை காபிதானே உங்கள் வாழ்க்கையின் தரத்தை நிர்ணயிப்பது...?

நீங்கள் எதை உண்ண வேண்டும் எதைப் பருக வேண்டும் என்று சொல்வது என் வேலை அல்ல. இந்தப் பொருள் உங்களுக்குள் எப்படி வேலை செய்கிறது என்று மட்டுமே நான் சொல்கிறேன். உங்களுக்கு நீங்கள் எதைச் செய்து கொண்டாலும்சரி, அதை உங்கள் விருப்பத்தோடு முழுத் தெளிவுடன் செய்யுங்கள்.

ஏதோ கட்டாயத்தினாலோ, அறியாமையினாலோ வேண்டாம். உங்கள் சாவை வரவேற்கச் செல்கிறீர்கள் என்றாலும்கூட, முழு விழிப்புணர்வோடு, என்ன செய்கிறோம் என்று தெளிவாகத் தெரிந்துகொண்டு செய்யுங்கள்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களை தடுப்பதில் அவுஸ்திரேலியாவுக்கு வெற்றியா?



அவுஸ்திரேலியாவுக்கான படகுப் பயணம் வெற்றி பெறாததால் தனது 24 வயதான மகனின் வாழ்வும் தனது குடும்பத்தின் வாழ்வும் அழிக்கப்பட்டதாக இலங்கையின் வடக்கிலுள்ள கிளிநொச்சியைச் சேர்ந்த 61 வயதான மாரிமுத்து வள்ளியம்மா தெரிவித்துள்ளார்.

எனது மகன் அவுஸ்திரேலியாவுக்கான தனது பயணத்தை மேற்கொள்வதற்காக எம்மிடமிருந்து ஒரேயொரு நிலத்தை மட்டும் விற்று அவருக்கான பணத்தை வழங்கவேண்டியிருந்தது. அத்துடன் பெறுமதிமிக்க தங்கச் சங்கிலி, தோடுகள் போன்றவற்றையும் அடகுவைத்து பணத்தைச் செலுத்த வேண்டியிருந்தது. அவுஸ்திரேலியாவுக்குச் சென்று உழைத்து பணத்தை அனுப்பும் போது இவற்றை அடகு மீட்கலாம் என அவன் என்னிடம் வாக்குறுதி வழங்கியிருந்தான். இலங்கையில் எந்தவொரு தொழிலும் இல்லாததால் இங்கு தனக்கான எதிர்காலமும் இல்லை என அவன் என்னிடம் கூறியிருந்தான் என்கிறார் மாரிமுத்து வள்ளியம்மை.

ஆனால், தனது மகன் தன்னிடம் அவுஸ்திரேலியாவுக்கான தனது பயணம் சட்டரீதியானது எனவும் கூறியிருந்த போதிலும் இவன் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட போது இலங்கை கடற்படையினர் இவனை வழிமறித்ததாக தாயார் மேலும் தெரிவித்தார்.

2010 இல் அதாவது போருக்குப் பின்னான காலப்பகுதியில் நாங்கள் இலங்கையில் இயல்பு வாழ்வு கிடைக்கும் என எதிர்பார்த்தோம். இதற்குப் பதிலாக இளையோர்கள் அரசியல் அழுத்தம் காரணமாக இலங்கைத் தீவை விட்டு பலவந்தமாக வெளியேறவேண்டியேற்பட்டது என இலங்கையின் பிரதான தமிழ் அரசியற்கட்சி ஆதரவாளரான 28 வயதான வி.சுகுணன் என்பவர் தெரிவித்தார். அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காக இவர் 2011 இல் ஆட்கடத்தல்காரர் ஒருவருக்கு 11,400 அமெரிக்க டொலர்களை செலுத்தியிருந்தார். ஆனால், இவர் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

அவுஸ்திரேலியாவானது தற்போது தனது நாட்டில் தஞ்சம் கோருவோர் தொடர்பில் மிகவும் இறுக்கமான நடவடிக்கைகள் எடுத்துவருவதுடன் புதிய கொள்கைகளையும் அமுல்படுத்தி தனது அயல் தீவுகளுக்கு அனுப்பி வருகிறது. இதனை ஐ.நா. அகதிகள் நிறுவனம் மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளது.

நான் அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு 2012 இல் திருப்பி அனுப்பப்பட்டேன். இலங்கையில் எனக்கென எதுவுமில்லை. ஆனால், மீண்டும் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கான முயற்சிகளை எடுத்தால் அதனால் எவ்வித பயனுமில்லை என 27 வயதான கே.அழகன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட 2002-2004 காலப்பகுதியிலும் 2004 இல் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரும் இலங்கைக்கு பெருமளவிலான அவுஸ்திரேலியத் தொண்டுப் பணியாளர்கள் வருகை தந்தனர். இதன் காரணமாகவே அவுஸ்திரேலியாவானது இலங்கையிலிருந்து புகலிடம் கோருவோருக்கு தனது மனிதாபிமான உதவிகளை அதிகம் வழங்க முன்வந்தது.

இதனைக் காரணமாகக் கொண்டு இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதைத் தமது தெரிவாகக் கொண்டுள்ளனர். என்கிறார் ஆய்வாளர் சர்வானந்தன்.

மிக அண்மையில் அதாவது 2010-2013 வரை இலங்கையில் அவுஸ்திரேலியாவானது 187 மில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளது. இலங்கையில் சமூக, பொருளாதார அபிவிருத்திப் பணிகளுக்காகவே அ்வுஸ்திரேலியாவானது தனது முதலீட்டை மேற்கொண்டது.

அவுஸ்திரேலியாவானது தனது குடிவரவுச் சட்டங்களை மேலும் கடினமாக்கியுள்ளது. சட்டவிரோதமாக நாட்டிற்குள் நுழைபவர்கள் எவரும் அவுஸ்திரேலியா மண்ணில் வாழ்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். படகுகள் அனைத்தும் பப்புவா நியூகினியாவுக்கு இடம்மாற்றப்படும் என இலங்கையில் ஒலிபரப்பப்படும் தமிழ் வானொலியில் அவுஸ்திரேலியாவின் நிதியுதவியுடன் எச்சரிக்கை விளம்பரம் மேற்கொள்ளப்படுகிறது.

நவம்பர் 2013 நௌரு மற்றும் பப்புவா நியூ கினியாவில் அவுஸ்திரேலியாவின் குடிவரவுத் தடுப்பு வசதியின் கீழ் கிட்டத்தட்ட 5000 வரையான இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(முற்றும்)

-நித்தியபாரதி-

...இலங்கையை விட்டு சட்டரீதியாகவும் சட்டரீதியற்ற முறையிலும் வேறு நாடுகளில் தஞ்சம் கோருவதற்கான பிரதான காரணமாக வறுமை நிலை காணப்படுகிறது. ஆய்வில் பங்கு கொண்டவர்களில் 74 சதவீதமானோர் வறுமைநிலை காரணமாகவே நாட்டை விட்டு வெளியேறுவதாகத் தெரிவித்துள்ளனர். இதேபோன்று 41 சதவீதமானோர் பாதுகாப்பற்ற, நிச்சயமற்ற தொழில் வாய்ப்புக்களே இவ்வாறு நாட்டை விட்டுச் செல்வதற்கான காரணம் எனவும் ஏனையோர் இராணுவ அச்சுறுத்தல் போன்ற பல்வேறு காரணங்களைத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலும் விரிவாக ஆராயப்பட வேண்டிய தேவையுள்ளது என பருத்தித்துறை அபிவிருத்தி நிறுவகம் தெரிவித்துள்ளது. சித்திரவதைகள் காரணமாகவே அதிகளவான இளையோர்கள் வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து இலங்கையைவிட்டு வேறுநாடுகளில் தஞ்சம் புகுவதாக கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒருநாள் அதிகாலை நேரம். பனி மூட்டம் எங்கும் பரவி புகை மூட்டம் போல் காட்சி அளித்தது. லேசாக தென்றல் வீசிக் கொண்டிருந்தது. பனித்துளிகள் மரங்களின் இலைகளின் மீது படிந்து, நீர் மொட்டுக்களை உருவாக்கிக் கொண்டிருந்தன.

ஆனால், ஒரு குளத்தில் இருந்த தாமரை இலை, தன் மீது விழுந்த பனித்துளிகளை சேமித்து வைப்பதில் கடினமாக உழைத்தது. பனித்துளியை சிறிதும் சேதம் ஆகிவிடாமல் அவற்றைச் சேமித்து வைப்பதிலேயே தாமரை கண்ணும் கருத்துமாக இருந்தது.

நீருக்குள் இருந்த தவளை ஒன்று தாமரையின் உழைப்பைக் கண்டு ஆச்சரியப்பட்டது. சிறிது நேரம் சென்றிருக்கும். வானத்தில் பிழம்பு போல் எழுந்து வந்தது சூரியன். தன்னுடைய ஒளிக்கதிர்களை வீசியது. பனி மூட்டத்தை ஜீரணித்துப் பகல் ஆக்கிவிட்டது.

தாமரை கஷ்டப்பட்டுச் சேகரித்த பனித்துளிகளை சூரியனின் உஷ்ணக் கதிர்கள் அழித்துவிட்டன. பகலவனின் ஒளிக்கதிர்களுக்கு முன்னே பனித்துளிகள் என்ன செய்துவிட முடியும்?

தாமரைக்கு சூரியன் மீது கோபம். ஆனால், வானம் இருப்பதால் தான் சூரியன் உதிப்பதாக, தாமரை எண்ணிக்கொண்டது.

தான் சிரமப்பட்டுச் சேமித்து வைத்த பனித்துளிகள் அழிந்து போனதற்கு வானமே காரணம் என்று தாமரை கருதியது. அதனால் தாமரைக்கு வானத்தின்மீது கோபம் ஏற்பட்டது. அதேசமயம், தன் உழைப்பு வீணாகிவிட்டதே என்று தாமரை சோகத்தில் ஆழ்ந்தது.

# கோபம் கோபமா வருது



தாமரையின் சோகத்தை அறிந்த தவளை ஒன்று தாமரையைப் பார்த்து, தடாகத்துக்கு அழகு தரும் தாமரையே! சூரியனைக் கண்டு மலர்ந்து மகிழ்ச்சியுடன் காணப்படும் நீ, இன்று முகம் வாடி யிருக்கக் காரணம் என் னவோ? என்று கேட் டது.

தனது உழைப்பெல்லாம் வானம் வீணாக்கி விட்டதை விவரமாகத் தவளைக்கு எடுத்துக் கூறியது தாமரை. வானத்தைப் பார்த்து இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்று தாமரை எண்ணியது.

பின்னர் வானத்தைப் பார்த்து தாமரை ஏ வானமே! இளம் அதிகாலை நேரத்தில் நான் மிகவும் கஷ்டப்பட்டு சேமித்த பனிநீர் மொட்டுக்களை சூரியனைக்கொண்டு அழித்துவிட் டாயே.... இது உனக்கு அடுக்குமா? என் உழைப்பின் மகிமை பற்றி உனக்கு தெரியாதா என்ன? உழைத்தும் பலன் இல்லாமல் செய்துவிட்டாயே என்று கேட்டது.

தாமரையே! உனது வருத்தம் எனக்கு நன்றாகப் புரிகிறது. என் நிலைமையை நீ அறிந்துகொள்ள முடிந்தால் உனக்கு என் மீது கோபம் ஏற்பட வாய்ப்பில்லை.

நீ! உன்னிடம் சேமித்து வைத்திருந்த சில பனித்துளிகள் வீணாகி விட்டதற்காக இவ்வளவு வருத்தம் அடைகிறாய். நானோ இரவு முழுவதும் கோடி கோடி அளவுக்கு நட்சத்திரங்களைச் சேமித்து வைத்து, இரவு முழுவதும் ஜீவராசிகளுக்கு எழிலார்ந்த காட்சி தருகிறேன். ஆனால், பொழுது விடிந்ததும் என்னால் ஒரு நட்சத்திரத்தைக் கூடப் பார்க்க முடியவில்லை. சூரியன் அவற்றை அழித்துவிட்டு, அகங்காரம் கொண்டு ஆர்த்தெழுகிறான். பத்துத்துளி வீணாகிப் போனதற்கே இப்படி அல்லற்படுகிறாய், கோபப்படுகிறாய். நான் கோடி கோடியாய் இழந்துவிட்ட பின்னரும் கவலைப்படுகிறேனா? பகலோடும் சூரியனோடும் நான் மோதிக் கொள்ள முடியுமா என்ன? என்று வானம் தாமரையைப் பார்த்துக் கேட்டது.

நீ சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லையே என்று தாமரை கூறியது.

தாமரையே! ஏற்றுக்கொள்வதா? மறுப்பதா என்பது இங்கே பிரச்சினை அல்ல. ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். பிரதிபலனை எதிர்பார்க்கக்கூடாது. இழப்புக்களைக் கண்டு சோர்ந்துவிடக்கூடாது என்பதுதான் பிரச்சினையாகும்.

கர்மத்தைச் செய். பலனைப் பற்றிக் கவலைப்படாதே என்று மனிதர்களுக்கு உபதேசம் செய்த பகவத்கீதை நமக்கும் பொருந்தும் அல்லவா? என்று விவரித்துக் கூறியது வானம்.

தன்னிடமிருந்த பனித்துளிகளை பறித்துக் கொண்டாலும் தன் மலரைத் தலை நிமிர வைக்கிற காரியத்தைச் சூரியன் ஆற்றுகிறதே என்று எண்ணி தாமரை இழப்பை மறந்து ஆறுதல் அடைந்தது.

★★★★★★★★★★★★★★★




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1259-பிரான்சின் ஒன்பதாம் லூயி பிரத்தானியாவின் மூன்றாம் ஹென்றியும் பாரிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன்படி நோர்வே உட்பட ஐரோப்பாவிலுள்ள பிரெஞ்சுப் பகுதிகளுக்கு ஹென்றி உரிமை கொண்டாடுவதில்லை எனவும் ஆங்கில புரட்சியாளர்களுக்கு லூயி ஆதரவு வழங்குவதில்லை எனவும் முடிவாகியது.
- 1639-ஜெரிமையா ஹொரொக்ஸ், முதன்முதலாக வெள்ளிக் கோளை சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் செல்வதை அவதானித்தார்.
- 1791-உலகின் முதலாவது ஞாயிறு இதழ் “தி ஒப்சேர்” வரின் முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1829-ஆங்கிலேய ஆட்சியின் கீழ் இருந்த இந்தியாவின் சதி முறையை ஒழிக்க ஆளுநர் வில்லியம் பெண்டிங்க் பிரபுவால் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- 1918-முதலாம் உலகப்போரை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு பேச்சுவார்த்தை நடத்த ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சன் பிரான்ஸ் சென்றார். பதவியிலுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் ஐரோப்பா சென்றது இதுவே முதற்தடவையாகும்.
- 1943- இரண்டாம் உலகப்போரில் யுகொஸ்லாவியாவின் எதிர்த் தலைவர் மார்ஷல் டீட்டோ ஜனாதிபதியுகொஸ்லாவிய அரசாங்கம் ஒன்றை தற்காலிகமாக அமைத்தார்.
- 1945-ஐக்கிய அமெரிக்கா ஐ.நாவுடன் இணைவதற்கு ஒப்புதல் அளித்து செனட் சபை வாக்களித்தது.
- 1958-பிரெஞ்சு அதிகாரத்தின் கீழ் டொஹெமி சுயாட்சி உரிமை பெற்றது.
- 1959-ஐக்கிய அமெரிக்காவின் மேக்குரித் திட்டத்தின் கீழ் சாம் என்ற குரங்கு 55 மைல்கள் உயரம் கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாகப் பூமி திரும்பியது.
- 1971-இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஏற்பட்ட கொந்தளிப்பான நிலைமையை ஆராய ஐ.நா.பாதுகாப்பு சபை அவசரமாக கூடியது.
- 1971-ஆச்சே விடுதலை இயக்கம் அமைக்கப்பட்டது.
- 1991-டெரி அண்டர்சன் என்ற அமெரிக்க ஊடகவியலாளர் கடத்தப்பட்டு 7 ஆண்டுகளுக்குப் பின்னர் பெய்ரூட்டில் விடுவிக்கப்பட்டார்.
- 1991-ஐக்கிய அமெரிக்காவின் பான் ஆம் விமான சேவை தனது சேவைகளை நிறுத்திக் கொண்டது.
- 2006-பிரான்ஸ் தொண்டு நிறுவனத்தின் பதினேழு தமிழ் ஊழியர்கள் திருகோணமலை மூதூரில் படுகொலை செய்யப்பட்டனர்.

## பிறப்புக்கள்

- 1991-ஐ.கே.குஜரால், 15 ஆவது இந்திய பிரதமர்
- 1977-அஜித்த அக்ரகர், இந்தியத் துடுப்பாட்ட வீரர்

## இறப்புக்கள்


- 1976- ந.பிச்சமூர்த்தி, தமிழ் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவர் (பி.1900)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்பு நாள்

இந்தியா கடற்படையினர் தினம்

## ந.பிச்சமூர்த்தி



ந.பிச்சமூர்த்தி 1900 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நடேசதீட்சிதர், காமாட்சி அம்மாள் ஆகி யோருக்கு மகனாக கும்பகோணத்தில் பிறந்தார்.

இவர் அண்மைய தமிழ் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர். தமிழ்ப் புதுக் கவிதையின் தந்தை என்று அழைக்கப்படும் இவரே தத்துவார்த்தம் பிணைந்த கதை சொல்லும் பாணியினை தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் ஆவார்.

வழக்கறிஞர் பட்டம்பெற்றுப் பணியாற்றிய பிச்சமூர்த்தி, இந்து அறநிலைத்துறை அதிகாரியாகவும் பணியாற்றினார். இவரின் படைப்புக்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு மற்றும் மராட்டி மொழிகளில் ஹரிகதா கலாட்சேபம் செய்யுமளவுக்குத் தேர்ச்சி பெற்றிருந்ததோடு சைவப் புராணப் பிரசங்கங்கள் செய்த இவர் 1976 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி உயிர் நீத்தார்.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபர் ச.வாமதேவன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, கோண்டாவில் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான செல்வி. ஞான லோஜினி சிவஞானம், கௌரவ விருந் தினராக சுவிஸ் பழைய மாணவர் சங்கத் தலைவர் க.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

ஆசியுரைகளை ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கதிர்காமநாதக் குருக்கள், ஞானப் பழனியாண்டவர் ஆலய பிரதம குரு பிரம்ம ஸ்ரீ ரவீந்திரராசா குருக்கள் ஆகியோர் ஆற்றுவர். (அ)

# ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறித்து கவனம் செலுத்துங்கள்

## சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற விவாதத்தில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டு வரலாற்றில் இந்த தடவையே மிகவும் குறைந்த எண்ணிக்கையிலானவர்கள் பங்கேற்றுள்ளனர்.

அவர்களும் பிரச்சினைகளை பேசவே மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

நாட்டில் பாரியளவில் அமைச்சரவை ஒன்று காணப்படுகின்றது.

மக்கள் நல்லாட்சியையே விரும்புகின்றனர் என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தை போன்றே தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்முறை செயற்பாடுகளும் கண்டிக்கப்பட வேண்டியவை என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தக்கருத்தை ஆங்கில ஊடகம் ஒன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பொதுமக்கள் மீது தாக்குதல்கள், நீலன் திருச்செல்வம் உட்பட்ட தமிழ், சிங்கள அரசியல் வாதிகளின் கொலைகள் போன்றவை கண்டிக்கத்தக்கவை. எனினும் அரசாங்கம், ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூனுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். ஏனைய நாடுகளை போன்று சீனாவும் தற்போது இலங்கைக்கு மனித உரிமைகள் விடயத்தில் அழுத்தம் கொடுத்து வருகிறது.


தமிழ் புலம்பெயர்ந்தோர் சீனாவில் இல்லை. எனவே தமிழ் புலம்பெயர்ந்தோர் காரணமாகவே சீனா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கிறது என்று யாரும் கூற வாய்ப்பில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## திருவெம்பாவை விரத ஆன்மீக சொற்பொழிவு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் திருவெம்பாவை விரத கால சிறப்புச் சொற்பொழிவுகள் எதிர்வரும் 8, 25 ஆம் திகதிகளில் உடுவில் பிரதேச செயலக பகுதியில் மூன்று இடங்களில் திணைக்களத்தின் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்ப்பணா சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 5.30 மணிக்கு தாவடி முருகமூர்த்தி ஆலயத்தில் சைவப் புலவர் கா.கமலநாதன் வழங்கும் "அழுதால் உன்னைப் பெறலாம்" எனும் தலைப்பிலான சொற்பொழிவும் அந் நேரத்தில் மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தில் இந்து தர்மாசிரியர் நித்திய தசீதரன் வழங்கும் "திருவாசகம் எனும் தேன்" என்ற தலைப்பிலான சிறப்பு சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு சுன்னாகம் சொர்ண வரதகாளி அம்பாள் ஆலயத்தில் ஆசிரியர் செ.பாலச்சந்திரன் வழங்கும் மெய்ப்பாடும் மணி வாசகமும் எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (அ-5)



வடமாகாண திட்டமிடல் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட வடமாகாண அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் நேற்று முன்தினம் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் வடமாகாண பிரதம செயலாளர் ஆர். விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்ற போது... (படங்கள்:- என்.குமார்)

## ஐரோப்பிய முதலீட்டு வங்கியில் கடன் பெறுகிறது அரசாங்கம் 90 மில்லியன் யூரோக்களாம்

இலங்கை அரசாங்கத்துடன் ஐரோப்பிய முதலீட்டு வங்கி 90 மில்லியன் யூரோக்களுக்கான கடன் உடன்படிக்கையை செய்துள்ளது.

இந்த கடன்மூலம் அரச மற்றும் தனியார்துறையின் கைத்தொழில்களுக்கு ஊக்கம் வழங்கப்படவுள்ளது.

குறித்த திட்டத்தின் மூலம் 2015 ஆம் ஆண்டுக்கான சக்தி உருவாக்க சூழல் மேம்பாட்டு நிகழ்ச்சியும் உள்ளக்கப்பட்டுள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியம் 670 மில்லியன் யூரோக்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இதில் 250 யூரோக்களை ஐரோப்பிய வங்கி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## தமிழக மீனவர் பிரச்சினையில் ஐ.நா.சபை தலையிட வேண்டும்

இலங்கையில் இந்திய மீனவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவ தால் இது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணையகம் தலையிட வேண்டுமென தமிழக படகு உரிமையாளர் சங்கத் தலைவர் என். ஜே.போஸ் கோரிக்கை விடுத்துள்ளார். இலங்கையில் இந்திய மீனவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதாகவும் இது இந்திய மீனவர்களுக்கு மாத்திரம் அல்ல இந்தியாவுக்கும் மரியாதைக் குறைவான செயல் என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எல்லையை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் மனிதாபிமான முறையில் நடத்தப்படுவதாக இலங்கை கூறுகிறது.

எனினும் அவர்கள் விலங்கிடப்பட்டு குற்றவாளிகளை போல நடத்தப்படுவதற்கு புகைப்பட ஆதாரங்கள் உள்ளன.

எனவே, இந்த விடயத்தில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகம் தலையிட வேண்டும் என்று போஸ் கோரியுள்ளார்.

இது தொடர்பில் இந்திய வெளியுறவு அமைச்சும் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். (அ-2)

# இந்திய பிரதமர் யாழிற்கு செல்வதை வரவேற்பேன்

## பிரதமர் ஜயரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரனின் அழைப்பையேற்று இந்திய பிரதமர் மன்மோகன் சிங் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தால் அதனை வரவேற்பதாக பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏனையோர் கூறுவதை கேட்பதற்கு பதிலாக அவர் நேரில் யாழ்ப்பாணத்திற்கு சென்று நிலைமைகளை பார்த்து அறிந்து கொண்டால் நல்லது.

வடக்கு மாகாண முதலமைச்சர் இந்திய பிரதமருக்கு விடுத்துள்ள அழைப்பு குறித்து அரசாங்கம் இன்னும் அதிகாரபூர்வமான நிலைப்பாட்டை வெளியிடவில்லை. எனினும் இது என்னுடைய தனிப்பட்ட நிலைப்பாடு.

இந்திய பிரதமரின் இலங்கை விஜயம் தொடர்பில் இதுவரை அரசாங்கத்திற்கு அறிவிக்கப்படவில்லை. இந்திய பிரதமர் இலங்கை வருவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மட்டும் பேச்சுவார்த்தை நடத்த அல்ல. அவர் அரசாங்கத்துடனும் பேசுவார்.

அதேவேளை வடக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனின் கருத்துக்கள் தேர்தலில் வாக்குகளை எதிர்பார்த்து வெளியிடப்பட்ட வையாகும்.

வாக்குகளை பெற வேண்டுமானால் நாங்களும் ஏதாவது ஆதரவை வழங்கி வாக்குகளை பெறுவது போன்றுதான் பிரித்தானிய பிரதமரும செய்துள்ளார்.

பிரித்தானியாவில் வாழும் தமிழர்களின் வாக்குகளை பெறவே அவர் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டுள்ளார் என்றார். (அ-2)

## 15 நாடுகளில் தூதரகங்களை ஆரம்பிக்க அரசு தீர்மானம்

தென்னாபிரிக்கா பிராந்தியம் உட்பட 15 நாடுகளில் இலங்கை தூதரகங்களை ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய மொருடானியா, புகினோ, பாசோ, டிஜிபுகி, டொங்கோ, கேமன், ஐவரிகோஸ்ட், கம்பியா, சியாராலியோன், மலாவி, சேட்,மத்திய ஆபிரிக்க குடியரசு, கெமரூன், கினியா, கேப்வர்ட, நைபர் ஆகிய நாடுகளில் இலங்கை புதிய தூதரங்களை ஏற்படுத்த உள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் நேற்று முன்தினம் தெரிவித்தன.

ஆபிரிக்க நாடுகளில் 7 நாடுகள் மட்டுமே பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டன.

புலம்பெயர் நாடுகளிலுள்ள விடுதலைப் புலிகள் தென்னாபிரிக்க பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் தூதுவர்களை ஜெனீவாவில் சந்தித்து இலங்கைக்கு எதிராக பொய்யான தகவல்களை வழங்கியுள்ளதாக திவயின தெரிவித்துள்ளது.

புலம்பெயர் நாடுகளில் உள்ள புலிகளின் அணியொன்று அண்மையில் ஜெனீவாவில் போஸ்ட்வானா நாட்டின் தூதுவரை சந்தித்து இரகசியமான பேச்சுக்களை நடத்தியதாகவும் திவயின கூறியுள்ளது.

இந் நிலையில் புலம்பெயர் புலிகளின் செயற்பாடுகளை முறியடிக்க 15 ஆபிரிக்க நாடுகளில் தூதரகங்களை திறக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையுடன் முரண்படும் இந்தியா



இலங்கை கடற்பகுதியில் அதிகரித்துவரும் குற்றச் செயல்கள் இந்தியப் பெருங் கடலின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உருவெடுத்து வருவதாக, அட்வன்ட்போர்ட் இன்ரநசனல் நிறுவனம் சில வாரங்களுக்கு முன்னர் ஒரு எச்சரிக்கையை விடுத்திருந்தது.

கொமன்வெல்த் மாநாடு நடந்த சூழலில், அந்த எச் சரிக்கை ஊடகங்களில் அவ் வளவாக எடுபடவில்லை. இந்த எச்சரிக்கையை விடுத்த அட்வன்ட் போர்ட் இன்ர நசனல், அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஒரு கடல்சார் பாதுகாப்பு நிறுவ னம். இது கடல்சார் பாதுகா ப்பு, பயிற்சி மற்றும் புல னாய்வு நடவடிக்கைகளை உலகளாவிய ரீதியில் மேற் கொண்டு வருகிறது.

வர்த்தகமயமாகியுள்ள இன்றைய உலகில் கடற் போக்குவரத்து தான் உயிர் நாடியாக உள்ளது. பாதுகாப் பான கடற்பாதை உலகின் வல்லரசு நாடுகள் எல்லாவற் றினதும் முக்கியமான கவலை யாக இருந்து வருகிறது. இந்தப் பாதுகாப்பான கடற் பாதைக்காக நாடுகளுக்கி டையில் உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்டாலும் சர்வ தேச கடற்பயணப் பாதை என்பது இன்னமும் பாதுகாப் பற்றதாகவே இருந்து வரு கிறது.

இதற்கு முக்கிய காரணம் கடற்கொள்ளையர்கள்.

இன்று உலகின் மிகப் பெரிய நாடுகளைக் கூட ஆடிப் போகச் செய்து விடு பவர்களாக, சோமாலியக் கடற்கொள்ளையர்கள் இருந்து வருகின்றனர். ஐரோப்பாவுக் குச் செல்லும் கப்பல்களை மட்டுமன்றி, ஆசியாவுக்குச் செல்லும் கப்பல்களையும் அச்சுறுத்துபவர்களாக சோமா லியக் கடற்கொள்ளையர்கள் மாறியுள்ளனர். இவர்கள் மாலைதீவைத் தாண்டி இல ங்கை கடல் எல்லை வரை வந்து செல்வதாகவும் இலங் கைக் கடற்படையின் ஒத்து ழைப்பு இருப்பதாகவும் இந்திய ஊடகங்களில் சில ஆண்டுகளுக்கு முன்னர் செய்திகள் வெளியானது நினைவில் இருக்கலாம்.

சோமாலியக் கடற்கொள் ளையர்களை முறியடிப்பதே இன்று மிகப்பெரிய பிரச் சினையாக மாறியுள்ள சூழ லில்தான், அட்வன்ட் போர்ட் இன்ரநசனல் நிறுவனம் இல ங்கைக் கடற்பகுதி பாது காப்பு அச்சுறுத்தலுக்குள் ளாகியுள்ளதாக ஒரு அறிக் கையை இம்மாத தொடக் கத்தில் வெளியிட்டிருந்தது. இதனை இலங்கைக் கடற் படைப் பேச்சாளர் கொமாண் டர் கோசல வர்ணகுலசூரிய உடனடியாகவே நிராகரித் திருந்தார். அதேவேளை, இலங்கை பாதுகாப்பு அமை ச்சு நடத்தும் ஒரு கடல்சார் பாதுகாப்பு நிறுவனமான அவன்ற் கார்டே மரிரைம் சேவி சஸ் நிறுவனமும் இது மலினத் தனமான பொய்ப் பிரச்சாரம் என்று கூறியிருந்தது.

முன்னர் நாடுகளின் கடற் படைகளுக்கு இடையில் போட்டி நிலவுவது போன்று இப்போது கடல்சார் பாது காப்பு நிறுவனங்களுக்கு இடையிலும் போட்டி நிலவு கிறது.

இந்தியப் பெருங்கடலில் கடற்கொள்ளையர்களின் அச்சுறுத்தல் இருப்பதால் அதனை தமக்குச் சாதகமாக் கிக்கொள்ள திட்டமிட்டே, அவன்ற் கார்டே நிறுவனத்தை ஆரம்பித்திருந்தார் பாது காப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச. கடற்புலிகளுடன் போரிட்ட அனுபவம் மிக்க கடற்படைக் கொமாண்டோக் களைக் கொண்ட பாதுகாப்பு நிறுவனம் என்று பிரசாரம் செய்து, கப்பல் நிறுவனங் களை தம்பக்கம் அவர் ஈர்க்க முயன்றார். இந்த அவன்ட் கார்டே நிறுவனம், இலங்கை க்கு அப்பால், எம்.வி.மகாநு வர என்ற கப்பலில், மிதக்கும் ஆயுதக்களஞ்சியத்தையும் கொண்டுள்ளது. அதுபோலவே மத்திய தரைக்கடல் பகுதியி லும் சில ஆயுதக் கப்பல்களை நிறுத்தி வைத்துள்ளது.

கப்பல்கள் தமது பாதுகாப் புக்குத் தேவையான ஆயுதங் களை இங்கு பெற்றுக் கொண் டும் பயணிக்கலாம். பாதுகா ப்பு அதிகாரிகளின் சேவையை யும் பெறலாம். அவன்ட் கார்டே நிறுவனம் இந்தக் களத்தில் நுழைந்த பின்னர், அமெரிக் காவின் அட்வன்ட் போர்ட் இன்ரநசனல் நிறுவனத்துடன் முரண்பாடுகள் எழுந்துள்ள தாகத் தெரிகிறது. அதன் விளைவுதான் அந்த நிறுவனம் வெளியிட்ட அறிக்கை.

தூத்துக்குடி துறைமுகத்து க்கு அப்பால், ஒரு ஆயுதக் கப்பல் பிடிக்கப்பட்டதாக சிலவாரங்களுக்கு முன்னர் செய்திகள் வெளியானது நினைவிருக்கலாம். அது இந்த நிறுவனத்தின் சீமன் கார்ட் என்ற கப்பல்தான். அதில் இருந்த 35 பேரையும் தமிழ் நாடு பொலிஸ் கைது செய்து தடுத்து வைத்துள்ளது. அதிலி ருந்து ஆயுதங்களும் மீட்கப் பட்டுள்ளன. அவை அனைத் தும் இந்த அமெரிக்கப் பாதுகாப்பு நிறுவனங்களுக்குச் சொந்தமானவை. ஆனாலும், இந்த நிறுவனத்தின் கப்பல், குறிப்பிட்ட பகுதிக்குள், நீண்ட நாட்களாக காரணமின் றிச் சுற்றித் திரிந்ததும், சட்ட விரோதமாக எரிபொருள் பெற்றதும் பல்வேறு சந்தேகங் களை எழுப்பியுள்ளதால் இந்திய அதிகாரிகளின் விசா ரணைகள் தொடர்கின்றன.

இத்தகைய பின்னணியில் தான் கடந்த வாரம் காலி கலந்துரையாடல் என்ற பெயரி லான கடல்சார் பாதுகாப்புக் கருத்தரங்கு காலி ரைட் ஹவுஸ் விடுதியில் இரண்டு நாட்கள் நடந்தன.

இது தொடர்ந்து நான்கா வது ஆண்டாக இலங்கைக் கடற்படை நடத்திய கருத் தரங்கு.

போர் முடிவுக்கு வந்த பின்னர் 2010 ஆம் ஆண்டில் இலங்கை இராணுவம் தமது போர் அனுபவங்களை உலக லாவிய ரீதியாக பரப்பும் நோக்கில், போர்க் கருத்த ரங்கை நடத்த ஆரம்பித்தது. ஆரம்பத்தில் இந்தக் கருத்த ரங்கு பல நாடுகளையும் அதி களவில் ஈர்த்திருந்த போதிலும் இப்போது அவ்வளவாக கண்டு கொள்ளப்படுவதில்லை. இல ங்கை இராணுவத்தைப் பின் பற்றி காலி கருத்தரங்கு என்ற பெயரில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைக் கடற் படையும் கடல்சார் பாது காப்புக் கருத்தரங்கை நடத்தத் தொடங்கியது. இது இலங்கை இராணுவம் நடத்தும் கருத் தரங்கு போலன்றி உலக நாடுகளை அதிகளவில் ஈர்க் கத் தொடங்கியுள்ளது.

2010 ஆம் ஆண்டில் இந்தக் கருத்தரங்கில் வெறும் 11 நாடுகள்தான் பங்கேற்றன.

2011 இல் 19 நாடுகள் கலந்துகொண்டன. 2012 இல் 28 நாடுகள் பங்கேற்றன. இந்த ஆண்டு கருத்தரங்கில் 35 நாடுகள் பங்கு கொண்டன.

இது ஒன்றே இந்தக் கருத் தரங்கு முக்கியமாகி வருவதற் கான ஆதாரமாகும்.

அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், சீனா, ரஷ்யா என ஐ.நா. பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் 5 நாடுகள் உள்ளிட்ட 35 நாடுகள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண் டன. இம்முறை இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் தேவேந்திரகுமார் ஜோஷி இந்த மாநாட்டில் பங்கேற்றார்.

அவர் இந்த மாநாட்டுக்கு வந்ததற்கு ஒரு முக்கிய காரணம் உள்ளது.

இந்தியப் பெருங்கடலில் கடல்சார் பாதுகாப்பு நிறு வனங்களை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதை வலியு றுத்தவே அவர் இதில் கலந்து கொண்டுள்ளார். இந்தக் கருத்தரங்கின் தொடக்க நாளன்று உரையாற்றிய பாது காப்புச் செயலர், இலங்கை அரசாங்கம் சர்வதேச கடலில் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பணிகளை ஆரம் பித்துள்ளதாக குறிப்பிட்டிருந் தார். கடற்புலிகளையே தோற் கடித்தவர்களைக் கொண்ட அவன்ட் கார்டே நிறுவனத் தின் சேவையை பெறுவதன் மூலம், கப்பல்களின் பாதுகா ப்பை உறுதிப்படுத்திக் கொள் ளலாம் என்று அவர் தெரி வித்திருந்தார்.

இந்தக் கருத்தரங்கில் இந்தி யக் கடற்படைத் தளபதி அட் மிரல் டி.கே.ஜோஷி, நிகழ்த் திய உரை பெரும்பாலும் இலங்கை உள்ளூர் ஊடகங் களின் கவனிப்பை அதிகம் பெற்றிருக்கவில்லை. இந்தி யப் பெருங்கடலில் செயற் படும், கடல்சார் பாதுகாப்பு அமைப்புக்களை அனைத் துலக் ஒழுங்கமைப்பு பொறி முறைக்குள் கொண்டு வர வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருந்தார். தனி யார் பாதுகாப்பு நிறுவனங் களை தீவிரவாதிகள் பயன் படுத்திக் கொள்வது வசதியா னது என்றும் அவர் எச்சரித் துள்ளார்.

இந்தியப்பெருங்கடலில் சீருடை அணிந்தோ, அணியா மலோ, கப்பல்களில் தனியார் பாதுகாப்பு நிறுவனங்களின் ஆயுதப் பாதுகாவலர்கள் பயணம் செய்வது கவலைக் குரிய விடயமாகவும் தெரி வித்த இந்தியக் கடற்படைத் தளபதி, தூத்துக்குடி துறை முகத்துக்கு அப்பால் பிடி பட்ட கப்பல் விவகாரத் தையும் சுட்டிக்காட்டியிருந் தார். பல தனியார் நிறுவ னங்கள், மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களை இந்தியப் பெருங்கடலில் கொண்டிருப் பது தீவிரவாத தாக்குதல்களு க்கு வசதியாக அமையலாம் என்றும் அவர் எச்சரித்திருந் தார். மிதக்கும் ஆயுதக்களஞ் சியங்களும் கடல்சார் பாது காப்பு நிறுவனங்களும் இந் திய பாதுகாப்புக்கு அச்சுறுத் தலாக உருவெடுத்துள்ளதை இந்தியக் கடற்படைத் தளபதி யின் கருத்து வெகுவாக பிரதிபலித்தது. இந்தியக் கடற்படைத் தளபதியின் உரையை, இலங்கை அரசாங் கம் குறிப்பாக பாதுகாப்புச் செயலரினால் அவ்வளவாக ரசித்திருக்க முடியாது.

ஏனென்றால், பாதுகாப் புச்செயலரின் கண்காணிப் பில் முன்னாள் படை அதி காரிகளை நிர்வாகப் பொறுப் பில் கொண்டே, அவன்ட் கார்டே நிறுவனம் உருவாக் கப்பட்டுள்ளது.

இந்தியாவினது நிலைப் பாடு, இந்த நிறுவனத்துக்கும் சிக்கலை ஏற்படுத்தக் கூடியது.

மிதக்கும் ஆயுதக்களஞ்சி யங்களும் ஆயுத பாதுகாவலர் களும் ஆபத்தின் அறிகுறி களாக இந்தியா கருதுகிறது.

கடல்வழிபாதுகாப்பு அச் சுறுத்தலை எதிர்கொண்டுள்ள இந்தியா, கடற்படை மூலமே கடற்கொள்கையர்களை ஒடுக்க வேண்டும் என்று கருதுகிறது.

ஆனால், இலங்கை அர சாங்கமோ இதனை காற் றுள்ள போதே தூற்றிக் கொள்ளும் ஒரு நல்ல வியா பாரமாக பார்க்கிறது.

கடற்கொள்ளையரிடம் இருந்து தமது நாட்டுக் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்க, சீனா, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட நாடுகள் தமது கடற்படைகளை அனு ப்பி வைத்துள்ளன. அது போன்றதொரு அனைத் துலகக் கடற்படைகளின் வலையமைப்பின் ஊடாக இந்தப் பிரச்சினையை கையாள இந்தியா போன்ற நாடுகள் விரும்புகின்றன. ஆனால், இலங்கைக்கு அதில் அவ் வளவு உடன்பாடு இல்லை. ஏனென்றால், இதில் நல்ல வருமானம் கிடைக்கிறதே.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள்/ மேல் மாகாணம்

## வரலாறு -II

(நேற்றைய தொடர்ச்சி.....)

பகுதி I

1. I அ. கீழே I உள்ள வரலாற்று இடங்களை வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் II இல் உள்ள வரலாற்று இடங்களை உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

1. மாணிக்க கங்கை, பராக்கிரம சமுத்திரம், தேவ நகர், நாகதீபம், அனுராதகாம, மகியங்கனை, கோட்டை, மகாதித்த, தீகவாவி, ஜஜ்ஜர நதி. (புள்ளி 1)

ஐஐ. குவாங்கோ, நதி சுயஸ் கால்வாய், பத்தேவியா, மகலன் சமுத்திர சந்தி, ஹேக் நகரம், ஹவாய் தீவு, மக்கா, மத்திய தரைக்கடல். (புள்ளிகள் 8)

ஆ. கீழே A,B,C,D இல் வரலாற்றுத் தகவல் மற்றும் தொடர்பான நபர்களையும் ஒழுங்கில் விடைப்பத்திரத்தில் எழுதுக.

A- முதலாம் சேன மன்னன் காலத்தில் பாண்டிய நாட்டிலிருந்து இலங்கையை ஆக்கிரமித்துக் கொள்ளையடித்தல்.

B- கி.பி. 1899 திறந்த வாயில் கொள்கை ஆலோசனையை வெளிப்படுத்தியவர்

C- 1803 இல் பிரித்தானிய சேனாதிபதியாக மலையகத்தை ஆக்கிரமத்தில்

D- ஜப்பானில் முதலில் அரசியல் கட்சியான லிபரல் கட்சியை நிறுவிய கர்த்தா.

II கீழே தரப்பட்டுள்ள A மற்றும் B படங்களுக்கான வினாக்களுக்கு விடைகளை ஒழுங்கில் விடைப்பத்திரத்தில் எழுதுக.


A

1. A உருவில் குறிப்பிடப்படும் கட்டடம் எது?
2. இந்த கட்டடம் எந்த இராச்சிய காலத்துக்கு உரியது?
3. இந்த இராச்சியம் எந்த ஆண்டில் ஆரம்பமானது.
4. இந்த யுகத்தில் ஆரம்பித்த விசேட இலக்கியப்பிரிவு எது?


B

1. B உருவில் காணப்படும் நபர் யார்?
2. இவர் எந்தத் தேசத்துக்கு உரியவர்?
3. பாப்பரசரின் வேண்டுகோளின்படி தேச சஞ்சாரத்தின் போது இவருக்கு கிடைத்த பிரதேசம் எது? (புள்ளிகள்12)

பகுதி II

2. 1. இலங்கையின் வரலாற்றினை அறிந்து கொள்ள உதவும் தொல்பொருள் மூலாதார வகை 3 தருக. (3புள்ளிகள்)

2. கீழே A,B,C,D யில் குறிப்பிடப்படும் தகவல் திரட்டக் கூடிய கல்வெட்டுக்களைக் குறிப்பிடுக.

A-வர்த்தக சந்தை ஒன்றின் நிர்வாகம் பற்றியது

B- ஆரம்ப நிர்வாகம் பற்றியது.

C-வர்த்தக தரங்கள் மற்றும் கைத்தொழில்கள் பற்றியது.

D- 1 ஆம் விஜயபாகு மன்னனின் இளமைப் பருவம் பற்றியது.

(புள்ளிகள் 4)

3. ஆரியர் இலங்கையில் குடியேற்றம் நிறுவும் போது கவனம் செலுத்திய காரணிகள் 2 விளக்குக. (புள்ளிகள் 5)

4. தேவநம்பிய திஸ்ஸ ஆட்சி காலம் இலங்கை வரலாறு வேறு பாதைக்குத் திசை திருப்புவதற்குக் காரணமாகியது. இது பற்றி 3 காரணிகள் குறிப்பிட்டு விளக்குக. (புள்ளிகள் 6)

3. 13 ஆம் நூற்றாண்டிலிருந்து 15 ஆம் நூற்றாண்டு வரையான தென் மேற்கு இராசதானி காலத்தின் போது கலைத்துறைப் பகுதியில் அளப்பரிய சேவை நிகழ்ந்துள்ளது.

1. கீழ்க் குறிப்பிடப்படும் கலை இலக்கியங்கள் உருவாக்கப்பட்டதானது எந்த இராச்சிய காலம் என A,B,C ஒழுங்கில் விடை எழுதுக?

A-தலதா சிரித B-சமந்தகூட வர்ணனை C-புது குண அலங்கார

(புள்ளிகள் 3)

2. கம்பளை நகர் இராசதானியாகத் தெரிவு செய்யப்படுவதற்கான சாதக காரணிகள் 4எழுதுக? (புள்ளிகள் 4)

3. தென்மேற்கு இராச்சிய காலத்தின் போது பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி 2 காரணிகளைக் கொண்டு விளக்குக. (புள்ளிகள் 5)

4. ஆறாம் வீர பராக்கிரமாகு மன்னர் காலத்தில் நிகழ்ந்த முக்கிய அரசியல் நடவடிக்கைகள் 3 ஐ விளக்குக. (புள்ளிகள் 6)

4. 1. கீழே தரப்பட்டுள்ள குளம் மற்றும் கால்வாய்களை நிறுவிய மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

A- அபயவாவி B-எலகர கால்வாய் C-மின்னேரியா குளம் (புள்ளிகள் 3)

2. கீழே குறிப்பிடப்பட்டுள்ளதானது குளத்திற்குரிய அம்சங்கள் ஆகும். அவற்றினால் நிகழும் தொழிற்பாடுகளை ஒழுங்கில் எழுதுக.

A- கலிங்கல் B- அலைதாங்கி C-கலிங்கல் தொட்டி D.சுருங்கை

(புள்ளிகள் 4)

2. இராசரட்டை நீர்ப்பாசன நடவடிக்கையின் போது நிலத்தின் அமைப்பினைப் பயன்படுத்திக் கொண்ட முறை பற்றி 2 காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(புள்ளிகள் 5)

4. இலங்கையில் நிலவிய நீர்வள நாகரிகம் வீழ்ச்சியடைவதற்குச் செல்வாக்கு செலுத்திய காரணிகள் 3 ஐ விளக்குக. (புள்ளிகள் 6)

5. 1. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுகளில் நிகழ்ந்த அரசியல் யாப்பு சீர்திருத் தங்களின் பெயர்களை எழுதுக.

1.கி.பி. 1833 2.கி.பி. 1910 3.கி.பி.1920 (புள்ளிகள் 3)

2. டொனமூர் அரசியல் யாப்பின் 4 பிரதான அம்சங்களைக் குறிப்பிடுக

(புள்ளிகள் 4)

3. இலங்கை குடியேற்ற ஆட்சிகாலத்தில் கலாசார மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான சாதகக் காரணிகள் 3 ஐக் குறிப்பிட்டு விளக்குக. (புள்ளிகள் 5)

4. பிரித்தானிய நிர்வாகக் காலத்தின் போது இலங்கையில் பெருந்தோட்டத்துறை விரிவுபட செல்வாக்குச் செலுத்திய 3 காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(புள்ளிகள் 6)

6. 1. 1978 இன் இலங்கையில் அரசியல் யாப்பின் பிரதான 3 துறைகளின் பெயர்களைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 3)

2. 1978 இன் அரசியல் யாப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் 4 ஐக் குறிப்பிடுக. (புள்ளிகள் 4)

3. தற்போதைய இலங்கையின் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் 2 ஐக் குறிப்பிட்டு அவை செயற்படுத்தும் முறை பற்றி விளக்குக. (புள்ளிகள் 5)

4. 1978 ஸ்ரீலங்கா அரசியல் யாப்புக்கு அமைய நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவருக்கு உரிய பல அதிகாரங்களுள் 3 ஐக் குறிப்பிட்டு விளக்குக.

(புள்ளிகள் 6)

7. கி.பி. 5,6 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் நிலவிய இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன. A,B,C வினாக்களுக்கு விடை எழுதுக.

1. A பல கிராமங்கள் சேர்ந்து தோற்றிய இராச்சியத்தின் தலைவர் எப்பெயரால் அழைக்கப்படுகிறார்.

B- சமூக இயக்கங்களில் பிரதான சமூக நிறுவனம் எது?

C- முதல் ஆரியர்களின் பரிசுத்தப் பொருளாக இருந்தது எது? (புள்ளிகள் 3)

2. அசோக மன்னன் பௌத்த மதத்துக்காகச் செய்துள்ள சேவைகள் 4 தருக.

(புள்ளிகள் 4)

3. மௌரிய காலத்தில் நிர்வாக உபாயங்கள் செயற்படுத்தப்பட்ட முறை பற்றி 2 காரணிகளை விளக்குக. (புள்ளிகள் 5)

4. குப்த பேரரசில் தோற்றிய சிரேஷ்ட ஆட்சியாளனாக சமுத்திர குப்தன் குறிப்பிடப்படுகிறார். 3 காரணிகள் குறிப்பிட்டு விளக்குக. (புள்ளிகள் 5)

8. மானிய முறை வீழ்ச்சியைத் தொடர்ந்து நவீன யுகம் தோன்றியதுடன் பல்வேறு கலைத்துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களில் அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றம் தேசிய அரசு உருவானதாகும்.

1. ஐரோப்பாவில் முதல் முறையாக தோன்றிய தேசிய அரசு 3 இனைக் குறிப்பிடுக.

(புள்ளிகள் 3)

2. நாடுகாண் பயணத்துக்காக தேசிய அனுசரணை காட்டிய விதம் பற்றி 2 காரணிகள் எழுதுக (புள்ளிகள் 4)

3. சிலுவைப் போர் முடிவில் தோற்றிய புதிய அரசுகளின் வர்த்தக முன்னேற்றம் சம்பந்தமாகக் காணக்கூடிய பங்களிப்புக்களை 2 காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(புள்ளிகள் 5)

4. தேசிய அரசுகளின் அரசியல் இயல்புகள் 3 ஐக் குறிப்பிட்டு விளக்குக

(புள்ளிகள் 6)

9. கைத்தொழில் புரட்சி உலகில் பல்வேறு நாடுகளின் அரசியல் பொருளாதார மற்றும் சமூக பிரிவுகளில் செல்வாக்கு ஏற்படுத்தியுள்ளது.

1. இங்கிலாந்தில் உருவான கைத்தொழிற் புரட்சி பரவிய ஐரோப்பிய நாடுகள் 3 ஐக் குறிப்பிடுக. (புள்ளிகள் 3)

2. கைத்தொழில் புரட்சியினால் தொடர்பாடல் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 2 ஐக் குறிப்பிடுக (புள்ளிகள் 4)

3. இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஆரம்பமாவதற்குத் தூண்டிய 2 காரணிகளைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 5)

4. கைத்தொழில் புரட்சி காரணமாக நிகழ்ந்த சமூக பொருளாதார மாற்றங்கள் 3 ஐக் குறிப்பிட்டு விளக்குக. (புள்ளிகள் 6)

10. 1. இரண்டாம் உலகப் போருக்கு அண்மித்த காலத்தில் கீழ் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு ஆக்கிரமிப்புக்களை ஏற்படுத்திய அரசுகளை ஒழுங்கில் எழுதுக.

A-மஞ்சூரியா

B-ரைன்லாந்து

C-எதியோப்பியா (புள்ளிகள் 3)

2. கீழே Q,R,S,T யால் காட்டப்படும் ஒவ்வொரு கருத்துக்கும் பொருத்தமான விடைகளை ஒழுங்கில் எழுதுக.

Q-பாப்பரசரின் மனதைக் கவரும் நோக்கமாக முஸோலினி பாப்பரசருடன் ஒப்பந்தத்துக்கு கைச்சாத்திடல்

R- 1873 இல் ரஷ்யா, ஜேர்மன், அவுஸ்திரேலியாவுடன் பிஸ்மார்க் உருவாக்கிய இயக்கம்

S- ஹிட்லர் சிறை இருக்கும் போது எழுதிய நாஸிஸவாத புத்தகம்

T- ஐ.நாவின் பிரதான காரியாலயம் அமைந்துள்ள நகரம்

(புள்ளிகள் 4)

3. 1ஆம் உலகப் போரின் பின் சமாதானம் பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்ட சர்வதேச சங்கத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் 2 இனைக் கூறி விளக்குக.

(புள்ளிகள் 5)

4. 2ஆம் உலகப் போரின் பின் ஐக்கிய அமெரிக்கக் குடியரசு முதலாளித்துவ அணியில் தலைமைத்துவத்தினைப் பெறும் வகையில் பின்பற்றிய வழிகள் 3 ஐக் குறிப்பிட்டு விளக்குக (புள்ளிகள் 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாலியப் பிரதமர் பதவி விலகல்

(மொகாடிஷு)



பாராளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பங்கேற்று தோல்வியைத்தழுவிய சோமாலியப் பிரதமர் அபடி பராஷிர் தான் பதவியை இராஜினாமா செய்தார்.

கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக இனக்கலவரங்கள் மற்றும் ஷஹாப் போராளிகளின் ஆளுமையால் நிலவிய குழப்பங்கள் அனைத்தும ஒரு முடிவுக்கு வந்த நிலையில் சோமாலியாவின் புதிய பிரதமராக அப்டிபரா ஷிர் தான சென்ற ஒக்டோபர் மாதம் தான் பதவி ஏற்றார்.

அரசியலுக்குப் புதுமுகமான அவரது அரசின் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை என்ற கருத்து பரவத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து தனது அமைச்சரவையை விரிவுபடுத்துவதில் ஜனாதிபதி ஹசன் ஷேக் முகமதுவுடன் அவருக்குக் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இதனால்நேற்றுமுன்தினம பாராளுமன்றத்தில் நடந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பங்கேற்ற அவர தோல்வியைத தழுவினார். எனவே, அவர் தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார்.

ஷிர்தானின் அமைசசரவை மக்களிடையே நமபிக்கை இழந்து விட்டது அவர்களிடையே குறைந்த அளவு திறனே வெளிப் பட்டது என்று சோமாலியாவின் சட்டமன்ற உறுப்பினரான இப்ராஹீம் சுலைமான்தெரிவிததார்.

மீண்டும் ஒரு புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெறுவதற்கு சில மாதங்கள் எடுக்கக்கூடும் என்று தெரிவிக்கின்றனர். (2)

# பதவி விலக முடியாது; பேச்சுவார்த்தைக்கு தயார்

## தாய்லாந்து பிரதமர் அறிவிப்பு



அரசுக்கெதிராக போராட்டம் நடத்தி வருபவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருக்கிறேன்.

ஆனால, பதவி விலக முடியாது என்று தாய்லாந்து பிரதமர் ஷினவத்ரா கூறியுள்ளார்.

எதிர்க்கட்சி எம்.பி சூதிப் தாக்ஸ்பான் தலைமையில் பாங்கொக் இல் அரசுக்கெதிராக பெரும் பேராட்டங்கள் வெடித்துள்ளது. இதனால் பாங்கொக்கில் இயல்பு நிலை முடங்கியுள்ளது.

இந்நிலையில் பிரதமர் யங்லக் ஷினவத்ரா போராட்டக்குழு தலைவர் சூதிப் தாயூசுபானுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த தகவலை வெளியிட்டு சூதிப் தாயுபான் கூறுகையில்,

அதில் எந்த உடன்பாடும் ஏற்படவில்லை. அவரிடம் பொலிசார் தங்கள் ஆயுதங்களை கீழே போட வேண்டும் என வலியுறுத்தினேன். மக்கள சக்தி வெற்றி பெறும். அது வரையில் இனி உங்களை சநதிக்க மாட்டேன் என்று கூறி வெளியே வந்து விட்டதாக குறிப்பிட்டார்.

இதையடுத்து, நேற்று முன் தினம் அரசு மற்றும் பொலிஸ் தலைமையகம் ஆகியவற்றை முற்றுகையிட சென்ற போராட்டக்காரர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். இதனால் அவர்கள் மீது தடியடி நடத்திய பொலிசார் மேல் கலவரக்காரர்கள் கற்களை எறிந்தனர். கலவரம் பெரிதானதை அடுத்து பொலிசார் அவர்கள்மேல்கண்ணீர் புகை குண்டுகளை வீசி, கலவரக் காரர்களை கலைத்தனர்.

இந்நிலையில், பிரதமர் ஷினவத்ரா இருநாட்கள் காலக் கெடுவை நிராகரித்தார். மேலும் அவர் கூறுகையில்.

கலவரத்தை அடக்கி அமைதியை நிலைநாட்ட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வேன். கலவரத்தை கட்டுப்படுத்த இராணுவம் தயார் நிலையில் உள்ளது. ஆனால் பதவியை விட்டு விலக முடியாது. அரசியலமைப்பு சட்டப்படி தேர்ந்தெடுக்கப்படாத மக்கள் மன்றத்திடம் பொறுப்பை அளிக்க முடியாது. அதற்கு சட்டத்தில் இடமில்லை. அனைவருடனும் நிபந்தனைகள் இன்றி பேச்சு நடத்த தயாராக உள்ளேன் என்று கூறினார்.

பிரதமர் ஷினவத்ரா, சட்டம் ஒழுங்கு கண்காணிப்பாளராக துணைபிரதமர் சுரபாங் டோவிசக்காய்குல்லை நேற்று முன்தினம் நியமித்துள்ளார்.

ஆனால், இதுபற்றி கருத்து தெரிவிக்கையில், 'பொலிசார் மீது உயிரி ஆயுதத்தை பயன் படுத்துவோம்' என்று எதிர் கட்சி குழு உறுப்பினர் சும்போல் ஜுல்லாசாய் கூறினார்.

பாங்கொக் நகரிலுள்ள பல் கலைக்கழக மாணவர்களும் போராட்டத்தில் குதித்தனர்.


இதனை அடுத்து பாங்கொக் நகரிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டன. (2)

# இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சியளிக்கக் கூடாது

## தி.மு.க.தலைவர் கருணாநிதி கொதிப்பு

(சென்னை)

**இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இந்திய கடற்படையினர் இராணுவப் பயற்சிகளை வழங்கக்கூடாது. பயிற்சியளிக்க முன்வந்துள்ள முடிவினைத் திரும்பப் பெற்று அதனை வெளிப்படையாக அறிவிக்க முன்வர வேண்டும் என தி.மு.க தலைவர் முத்துவேல் கருணாநிதி தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

மத்திய அரசு அக்கறை காட்டுகிறதோ இல்லையோ, ஈழத்தமிழர்களின் பிரச்சினை என்றாலே அது தீருவதாக இல்லை. மீனவர்கள் பிரச்சினையாக இருந்தாலும் அகதிகள் பிரச்சினையாக இருந்தாலும் இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவிலே பயிற்சி கொடுப்பதாக இருந்தாலும் இந்த ஆட்சியில் எதுவும் முறையாகவோ, முழுமையாகவோ தீர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அதன்காரணமாக வேதனைகள் தீரவில்லை. அவை தொடர்ந்து தரும் துன்பமும் மாறவில்லை. திராவிட முன்னேற்றக் கழகமும் தன்னால் இயன்ற அளவிற்கு என்னென்ன செய்ய முடியுமோ, அவற்றையெல்லாம் இலங்கைத் தமிழர்களின் நலனை மனதிலே கொண்டு தொடர்ந்து செய்து கொண்டுதான் உள்ளது.

ஈழத் தமிழர்களுக்காக ஓயாது ஓங்கிக் குரல் கொடுத்து வருகிறோம் என்பதை உண்மையை நேசிப்பவர்கள் உணர்ந்தே இருப்பார்கள்.

இலங்கைத் தமிழர்களைக் கொல்வதற்குக் காரணமாக இருக்கும் இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவிலே எந்தப் பகுதியிலும் பயிற்சி அளிக்கக் கூடாது என்பதுதான தமிழகத்திலே உணர்வுள்ள தமிழர்களின் கோரிக்கை, வேண்டுகோள். அந்த வேண்டுகோளை இந்திய அரசிடம் நாம் பலமுறை விடுத்து விளக்கியுள்ளோம்.

நாம் மாத்திரமல்ல, தமிழகத்திலே உள்ள அரசின் சார்பில் முதலமைச்சரும் பிரதமருக்கும தொடர்ந்து கடிதம் எழுதி வருகிறார். தமிழகத்திலே உள்ள ஏனைய கட்சிகளும் அதற்காகக் குரல் கொடுத்த போதிலும், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை இந்தச் செய்தி, அதாவது இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியா பயிற்சி அளிக்கும் செய்தி வந்து கொண்டு தான் இருக்கிறது.

சர்வதேச கடல்சார் பாதுகாப்பு மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக இலங்கை சென்ற டி.கே. ஜோஷி, இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு நான்கு ஆண்டு கால இளநிலை தொழில் நுட்ப கல்வி குறித்த பயிற்சி அளிப்பதற்கு இந்தியக் கடற்படை தயாராக இருப்பதாக இலங்கை ஜனாதிபதியிடம் இந்திய கடற்படைத் தளபதி டி.கே. ஜோஷி நேரில் தெரிவித்துள்ளார்.

இலங்கை நட்பு நாடு என்று சொல்கிறார்கள். இந்தியா நட்பு நாடு என்றால், தமிழ் நாடு இந்தியாவிற்குள் இருக்கும் ஒரு மாநிலம் இல்லையா? அந்த மாநில மக்களின் உணர்வுகளுக்கு முதல் இடம தந்து சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? இலங்கையை இந்தியா நட்பு நாடாகக் கருதுகின்ற நேரத்தில், இலங்கை இந்தியாவை நட்பு நாடாகக் கருத வேண்டாமா? இந்திய அரசின் குரலுக்கு இலங்கை மதிப்பளிக்கிறதா?

கடந்த வாரம் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ டில்லி வந்து, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான்குர்ஷித் உட்பட பலரைச் சந்தித்து இரண்டு நாடுகளும் கடற்படை உறவுகள் மற்றும் ஒத்துழைப்புகள் குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதிலிருந்து இந்திய அரசு தமிழ்நாட்டு மக்களின் நலனை விட, இலங்கையின் நட்பு தான் அவசியம் என்று கருது [illegible]

இதை மனதிலே கொண்டு, இனியாவது இந்திய அரசு தமிழர்களும் இந்திய நாட்டு மக்களே என்ற எண்ணத்தோடு, அவர்களின் உணர்வுகளுக்கு உரிய மதிப்பளித்திட வேண்டுமென்று வலியுறுத்துவதோடு, அதற்கு அடையாளமாக தற்போது இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி அளிக்க முன்வந்துள்ள முடிவினைத் திரும்பப் பெற்று, அதனை வெளிப்படையாக அறிவிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

## பதற்றத்தை தணிக்க

# அமெ.துணை ஜனாதிபதி ஜப்பான் சுற்றுப்பயணம்



சீனாவின் சர்ச்சைக்குரிய வான் பாதுகாப்பு மண்டல அறிவிப்பால் சீனாவுக்கும், ஜப்பான் மற்றும் தென்கொரிய நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிக்க, அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பைடன் அந் நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கிழக்கு ஆசியப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்த அமெரிக்காவின் கவலையை துணை ஜனாதிபதி ஜோ பைடன் சீனாவிடம் எடுத்துரைப்பார்.

ஆசிய பசுபிக் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டும் சக்தியாக அமெரிக்கா தொடர்ந்து செயலாற்றும் என்பதை உறுதிப்படுத்துவதே இந்த சுற்றுப் பயணத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குசீனகடல்பகுதியில் ஜப்பான் உரிமை கொண்டாடி வரும் பகுதிகளையும் உள்ளடக்கிய வான் பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்கியிருப்பதாகவும், அப்பகுதிகளில் பறக்கும் விமானங்கள் சீனாவின் அனுமதியைப் பெற வேண்டும் எனவும் கூறப்பட்டிருந்தது.

இதற்கு ஜப்பானும், அமெரிக்காவும் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில், சீனாவின் உத்தரவை மீறி அமெரிக்கா தனது பி-52 விமானங்களை சர்ச்சைக்குரிய பகுதிகளில் பறக்கச் செய்தது.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து டோக்கியோவுக்கு வருகை தரும் ஜோ பைடனுடன் விவாதிக்கவிருப்பதாக ஜப்பானிய பிரதமர் ஷின்ஸா அபே தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட தேவையுள்ளவர்களுக்கு உரியவசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்

## வலியுறுத்தி மகஜர் கையளிப்பு

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 10 சதவீதத்தினர் ஏதோ ஒரு வகையிலான விசேட தேவையுடையவர்கள் என்பது கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது மொத்த சனத்தொகையில் ஏறத்தாழ 20 இலட்சத்தினர் விசேட தேவை யுடையவர்களாகவுள்ளனர். இவர்கள் பார்வை, கேட்டல் மற்றும் பேசுதல் தொடர்பான விசேட தேவை யுடையவர்கள், உடல் அவயவங்கள் சார்ந்த விசேட தேவையுடையவர்கள்,அறிவு விருத்தி சார் விசேட தேவையுடையவர்கள் போன்ற பல்வேறு விசேட தேவையுடையவர்கள், மாற்றுவலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுடையோர் சங்கம் அங்குள்ள அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவன பொறுப்பதிகாரிகளுக்கு மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இத்தகைய விசேட தேவையுடையவர்கள் தமது நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அவர்களில் சாதாரண வாழ்க்கைக்கு முக்கிய தடையாக இருப்பது சரியான முறையில் சமூக உள் வாங்கல் (Social Inclusion), பௌதீக சூழல் உட்படுத்தல் (Physical Environment Inclusive) ஆகிய இரு உட்படுத்தல்களும் நிகழாமையாகும்.

இலங்கையின் 1996 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க அங்கவீனர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் 21 மற்றும் 24 ஆம் உறுப்புரைகள் இலங்கை யில் நிர்மாணிக்கப்படும் சகல கட்டடங் களும் தகவல் சேவைகளும் பாட சாலைகளும் விசேட தேவையுடையவர்களுக்கு அணுகு வசதி இருக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றது.

இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 2003 ஆம் ஆண்டு அங்கவீனர்களுக்கான தேசிய கொள்கையும் அணுகு வசதிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருப்பதனால் விசேட தேவையுடையவர் களுக்கு அணுகு வசதிகளை செய்து கொடுத்தல் என்பது முற்று முழுதாக இலங்கை அரசால் ஏற்றுக்கொள் ளப்பட்ட ஒரு தேசிய கொள்கையாகும். 17.10.2006 திகதியிடப்பட்ட இல ங்கை அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி 1996 ஆம் ஆண்டு சட்டத்தின் அணுகு வசதி ஒழுங்கு விதிகளை (Accessibility Regulation) பிரகடனப்படுத்தியிருப்பதோடு 2014 ஆம் ஆண்டுக்குள் நிர்மாணிக்கப்பட்ட சகல கட்டடங்களும் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய கட்டடங்களும் விசேட தேவையுடையவர்களுக்கு அணுகு வசதி கூடியதாக மாற்றியமைக்கப் படல் வேண்டும் அல்லது நிர்மாணம் செய்யப்படல் வேண்டும் எனக் கூறுகின்றது.

2007 ஆம் ஆண்டு விசேட தேவையுடைய நபர்களின் உரிமைகள் பாதுகாப்பு தொடர்பாக ஐக்கிய நாடுகள் சாசனம் இத்தகைய அணுகு வசதிகள் குறித்து அங்கத்துவ நாடுகளுக்கு விதப்புரைகள் விடுத்துள்ளது. இச்சாசனத்தை ஏற்று இலங்கை அரசு கையொப்ப மிட்டுள்ளதால் அத்தகைய அணுகு வசதிகளை நாட்டில் செய்ய வேண்டியது சட்டரீதியில் அமுல்படுத்த வேண்டிய விடயமாகும்.

அணுகு வசதிகள் தொடர்பாக இத்தகைய சர்வதேச தேசிய சட்டங்களும் ஏற்பாடுகளும் இருந்த போதிலும் எமது பௌதீக சூழலை நோக்கும் போது அவை எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதற்கான அறிகுறிகளே தென்படுவதால் விசேட தேவையுடைய நபர்களுக்காக உருவாக்கப்பட்டு சேவைகள் வழங்கி வரும் நாம் அதிக கவலை அடைகின்றோம்.

மேற்கூறப்பட்ட நிலைமைகளை தங்களின் மேலான கவனத்தில் கொண்டு தங்களின் சகல நிர்மாண பணிகளிலும் தகவல் சேவைகளிலும் ஏனைய வாடிக்கையாளர்சேவைகளிலும் விசேட தேவையுடையவர்களுக்குரிய அணுகு வசதியை ஏற்படுத்துமாறு தங்களை தயவாகக் கேட்டுக் கொள்கின் றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## செட்டிகுளம் மகா வித்தியாலய சாதனையாளர் கௌரவிப்பு

(பூந்தோட்டம்)

செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் இருந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தி அடைந்த சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் செ.தர்மரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் த. குருகுலராசா, சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா, கௌரவ விருந்தினர்களாக வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலாளர் என். கமலதாசன், பிரதேசசபை உதவித் தவிசாளர் த.சந்திரமோகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-266)

## த.தே.மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் தெரிவு

(குருமன்காடு)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்டக்கிளைக்கான உறுப்பினர்கள் தெரிவு வவுனியா இந்திரன் ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வவுனியா மாவட்டக் கிளைக்கு 27 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவானவர்களது பெயர் விபரங்கள் வருமாறு.

அமைப்பாளராக கிருஸ்ண கோபால வசந்தரூபன், செயலாளராக சிவசுப்பிர மணியம் கோபால கிருஸ்ணன், பொருளாளராக கோபாலராஜன் கேசவன்,நிர்வாகச் செயலாளராக ராஜ்குமார், பிரசார செயலாளராக பூ.உதயபாலன் ஆகியோரும் பிரதேச இணைப்பாளர்களாக ப.மணிவண்ணன்,வி.முபின்ஜான், ஜெ. பைந்தமிழ் குமரன், சி.குமாரதாஸ், ம.பிரதீபன் ஆகியோரும் இளைஞர் பொறுப்பாளராக ஜெ.வேந்தன், செயலாளராக மா.செந்தில்குமரன், பொருளாளராக தயாகரன், உபதலைவராக சிவராம், உப செயலாளராக சி. சியாந்தன், செயற்குழு உறுப்பினரகளாக நிதுசன், சுதர்சன், க.இமயகாந்தன, நிதர்சன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-250)




## பரிசளிப்பு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் முதல் அதிபர் நினைவு தினமும் வருடாந்த பரிசில் நாளும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் த.கண்ணபிரான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. செல்வராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

இப் பாடசாலையின் நிறுவுநராகவும் முதல் அதிபராகவும் இருந்த அமரர் வேலுப்பிள்ளை மகேசனின் பிறந்த தினமாகிய டிசெம்பர் 5 ஆம் திகதி கடந்த வரு டம் அவரது குடும்பத்தவரால் நூலகத்திற்கு புத்தகங்கள் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டன. அத்துடன் பரிசில் தினமும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அந்த பாரம்பரியத்தின்படி வருடா வருடம் டிசெம்பர் 5 ஆம் திகதி பரிசில் தினம் கடைப்பிடிக்கப்படும் முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. (ம-254)

## வயோதிப பெண்ணின் பயணப்பையில் ரவைகள்; வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(பூந்தோட்டம்)

வவுனியாவில் இருந்து கண்டிக்கு பயணமாக இருந்த வயோதிப பெண்ணின் பயணப்பையில் கைத் துப்பாக்கியின் ரவைகள் காணப்பட்ட நிலையில் அவற்றை அப் பெண் வவுனியா பொலிஸில் ஒப்படைத்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு முள்ளியவளை 3 ஆம் வட்டாரத்தில் இருந்து கண்டி செல்வதற்காக வவுனியா வந்தடைந்த வயோதிப பெண்ணொருவர் வவு னியா பேருந்து நிலையத்தில் இருந்த பொது மலசல கூடத்திற்கு செல்வதற்காக தனது பயணப்பையை ஓரிடத்தில் வைத்துவிட்டு சென்றுள் ளார்.

மீண்டும் தனது பயணத்தை தொடர்வதற்காக கண்டிக்கு செல்லும் பேருந்தில் ஏறி தனது தேவையின் பொருட்டு பயணப்பையை திறந்த போது அவற்றில் துப்பாக்கி ரவைகள் உள்ளதை அவதானித்துள்ளார்.

உடனடியாக பேருந்து சாரதியிடம் விடயத்தை கூற அவர் அவ் வயோதிப பெண்ணையும் அழைத்துக்கொண்டு வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு சென்று பொலிஸாரிடம் விடயத்தை கூறியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் சம்பவம் தொடர்பாக மேற்கொண்ட விசாரணைகளில் மேற்படி ரவைகள் மைக்ரோ பிஸ்டலுக்கு பயன்படுத்தும் ரவைகள் எனவும் 18 ரவைகள் காணப்பட்டதாகவும் தெரிவித்தனர். எனினும் இவ் வயோதிப பெண்ணின் பயணப்பையில யார் இதனை வைத்தனர் என்பது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-266)

## ஓமந்தை மத்திய கல்லூரி சாரணர்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கல் நிகழ்வு


(பூந்தோட்டம்)

இலங்கை சாரணர் சங்கத்தினால் சாரண மாணவர்களுக்கு வழுங்கப்படும் அதி உயர் விருதான ஜனாதிபதி விருதினை வட மாகாணத்தில் முதலாவதாக பெண் சாரண பிரிவில் பெற்றுக்கொண்ட ஓமந்தை மத்தியகல்லூரி சாரண மாணவிகளான செல்வி சிவஞானசுந்தரம் நிலாந்தி, செல்வி, இராசலிங்கம் நிலானி, சாரண மாணவன் செல்வன் நாகராசா தர்சுதன் ஆகியோருக்கு இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் வடமாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜாவினால் ஜனாதிபதி விருது வழங்கப்பட இருப்பதாக கல்லூரி அதிபர் எஸ். திருஞானசம்பந்தமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாரண மாணவர்களினால் புதிதாக நிரமாணிக்கப்பட்ட பேருந்து தரிப்பு நிலையங்கள் இரண்டும் அன்றைய தினம் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்த அவர் இந் நிகழ்வுகளுக்கு சிறப்பு விருந்தினராக வடக்கு வலய கல்விப்பணிப்பாளர் திருமதி ப. கணேசலிங்கம், கௌரவ விருந்தினர்களாக வட மாகாண பிரதி கல்விப்பணிப்பாளர் கே.சத்தியபாலன், இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமைக்காரியாலய ஆணையாளர் என். சௌந்தரராஜன், வவுனியா மாவட்ட சாரண ஆணையாளர் எம். எஸ். பத்மநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்க இருப்பதாகவும் தெரிவித்தார். (ம-266)

## இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள திருநகர் கிராம அலுவலர் பிரிவில் கணவனை யுத்தத்தில் இழந்த நிலையில் வசித்து வரும் பெண் ஒருவரின் மூன்று மாடுகள் இனம் தெரியாதோரால் கடத்திசெல்லப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள் ளது.

இச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவது,

குறித்த பெண் தமது வாழ்வாதாரத்தை வளப்படுத்த இந்த மாடுகளை வளர்த்து வந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மழை பெய்துகொண்டிருந்த நிலைமையைப் பயன்படுத்தி இந்த மூன்று பசு மாடுகளும் இனந்தெரியா தோரால் கடத்திச் செல்லப்பட்டு கணேசபுரம் கள்ளுத் தவறணைக்கு அருகாமையில் வெட்டி இறைச்சிக்காக கொண்டு சென்றுள்ளனர்.

இந்த மாடு கன்று ஈனும் தறுவாயில் உள்ள நிலையில் இருந்ததால் அந்த மாட்டை வெட்டும் போது மாட்டின் வயிற்றில் இருந்த கன்று வெளியே தூக்கி வீசப்பட்டு இறைச்சியை கொண்டு சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தை அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த கிளிநொச்சி பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-254)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பெரு நெல்லி

Botanical Name- Phyllanthus emblica

Family- Euphor biaceae

Engl-Indian ghoosberry

Sinh-Ambula/Nelli

மரவகையைச் சேர்ந்தது. சிறகன்ன கூட்டிலை போலத் தோன்றும். மிகச்சிறு இலைகள் 100 வரையில் சிறுகிளைகளில் உண்டாகும். ஆண்மலரும், பெண்மலரும் தனியானவை. பெண்மலர்கள் அடியிலும் ஆண்மலர்கள் மேலேயும் அமைத்து கொத்தான இலைக்கோணத்தில் உண்டாகும். 5 தொடக்கம் 6 சற்று நீண்ட புறவிதழ்கள். அகவிதழ்கள் இல்லை. உருண்டைவடிவ சதைக்கனி. 0.5 தொடக்கம் 0.9 அங்குல நீளமும் 0.2 தொடக்கம் 0.3 அங்குல அகலமும் உள்ளது. 3 வலிய இரண்டு வால்வுகளையுடைய காக்கஸ் என்ற 6 விதைகள் உண்டாகும். விதையிலை தட்டையானது, அகன்றது.

நெல்லிக்கனிசுவையானஉணவுப்பொருள். இதன் கனிகளுக்காக இம்மரம் வளர்க்கப்படும். இது நல்லதொரு மருந்துப் பொருளுமாகும். இதன் அடிமரம் வலியது. இம்மரத்தின் கட்டைகளை கிணற்றில் போட்டு வைப்பதால் கிணற்றுநீர் சுவையாக இருக்கும். உப்புநீர்கூட நன்னீராக மாறும்.

**100 கிரம் நெல்லிக்கனியிலுள்ள சத்துக்கள்**

புரதம் -0.5 கிராம்

கொழுப்பு-0.1 கிராம்

காபோவைதரேற்று-13.7 கிராம்

நார்ப்பொருள்-3.4 கிராம்

கல்சியம்-50 மில்லிகிராம்

பொஸ்பரஸ்-20 மில்லிகிராம்

இரும்பு-1.2 மில்லிகிராம்

உயிர்ச்சத்து C- 600 மில்லிகிராம்

சோடியம்- 5 மில்லிகிராம்

பொட்டாசியம்-225 மில்லிகிராம்

கரோட்டீன்-59 மைக்ரோகிராம்

ஒக்சாலிக்கமிலம்-296 மில்லிகிராம்

❖ இந்நெல்லிக்கனிக்கு புளிப்பு, துவர்ப்பு, இனிப்பு சுவைகளுண்டு. இது ஓர் காயகல்ப மூலிகையாகும். உடற்கலங்களை அழிய விடாது உடலை இளமையாக வைத்திருக்கும் ஆற்றல் இந்நெல்லிக்கனிக்குண்டு. இதனால் வாந்தி, சுவையின்மை, வாத, பித்த, கபங்களால் உண்டான நோய்கள் அழியும். பத்ரியம் தவறியதால் உண்டான விளைவுகளையும் நீக்கும் ஆற்றல் உள்ளது.

❖ நெல்லிக்காயை துவையல், பச்சடி செய்து பயன்படுத்தினால் அதாவது நெல்லிக்காயை விதை நீக்கி கிறேப்பரில் தேய்த்து அத்துடன் சிறிதாக அரிந்து வெங்காயம்,





பச்சைமிளகாய், தேங்காய்ப்பூ, தேவையானளவு உப்புச் சேர்த்து துவையலாக்கி சாதத்துடன் சேர்த்துண்ண வயிற்றுப்பொருமல், சுவையின்மை, பசியின்மை, ஓங்காளம், வாந்தி நீக்கி, குடலை இளகப்பண்ணி சமிபாட்டையும் சீராக்கும்.

❖ நெல்லிக்காயில் ஊறுகாய் செய்து உண்டுவந்தால் மிகு அமிலச்சுரப்பு நீங்கி இரைப்பையில் வேலை சீர்படும்.

❖ நெல்லிக்கனிகளை ஓர் இரவு முழுவதும் நீரில் ஊறவைத்து மறுநாள் கசக்கி பிழிந்த சாறு 60 மில்லியுடன் தேன் 30 மில்லி கலந்து குடிக்க உடல் அழகாவதுடன் மலமும் இளகி வெளியேறும்.

❖ காலை வேளைகளில் உணவு அருந்துவதற்கு முன்பு தினமும் 30 மில்லி நெல்லிக்கனிச்சாறு அருந்தி வர நீரிழிவு கட்டுப்படும். நெல்லிக்காய் கிடைக்காத காலங்களில் நெல்லிவற்றலை உபயோகிக்கலாம்.

❖ குடற்புழுக்களை அகற்ற நெல்லிக்கனிச்சாறு 15 மில்லி, எலுமிச்சம்பழச்சாறு 15 மில்லி கலந்து காலை, மாலை அருந்தவும். இவ்வாறு 3 நாட்கள் அருந்தலாம்.

❖ சாதாரணமாக நெல்லிக்காயை பறித்து தினமும் ஒன்றாவது நன்றாக மென்று தின்றால் பற்களும் ஈறுகளும் உறுதியாகும்.

❖ நெல்லிக்காயைச் சாறு பிழிந்து 5-10 மில்லி அளவு குழந்தைகளுக்குக் கொடுக்க கணச்சூடு குணமாகும்.

❖ நெல்லிக்காயை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் இரத்தம் சுத்தமாகும்.

❖ நெல்லிக்காய்ச்சாற்றில் மிளகு ஊறவைத்து சாறு சுவறி உலர்ந்ததும் பொடித்து, அரித்து ஒரு கிராம் அளவு தேனில் கலந்து சாப்பிட்டுவர சளி, கசம், மூக்கடைப்பு நீங்கும்.

❖ நெல்லிக்காய்ச்சாறு, தேங்காய் எண்ணெய் சமஅளவு எடுத்துக் காய்ச்சி பதத்தில் வடித்து தலைமுழுகிவர முடி உதிர்தல் நீங்கும்.

❖ நெல்லிக்காய் கிடைக்கும் காலங்களில் நீரிழிவு நோயாளிகள் 3 வேளையும் 2,2 நெல்லிக்காய் சாப்பிட நீரிழிவு கட்டுப்படும்.

❖ நெல்லிக்காய்ச்சாறு பிழிந்து 30 மில்லி அளவு தினமும் காலை குடித்துவந்தால் ஆசனக்கடுப்பு, மூலரோகம் தீரும்.

❖ நெல்லிக்காய்ச்சாற்றில் திப்பிலியை ஊறவைத்து சுவறி உலர்ந்ததும் பொடித்து அரித்து தினமும் ஒரு கிராம் அளவு தேனில் கொடுக்க வாய்ப்புண் நீங்கும்.

❖ நெல்லிக்கனிகளைப் பறித்து தண்ணீரில் போட்டு ஊறவைக்கவும். மறுநாள் காலை அந்தத் தண்ணீரில் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து தலையில் தேய்த்து குளித்தால் செம்பட்டை முடி கறுப்பாக மாறும்.

❖ நெல்லிக்காயை விதைநீக்கி பச்சைப்பயறு சேர்த்து அரைத்து உடல்முழுவதும் தேய்த்துக் குளித்தால் தோல்சுருக்கம் நீங்கும்.

❖ நெல்லிக்காயில் சாறு எடுத்து அச்சாற்றை வாயில் ஊற்றி கொப்பளித்து சிறிது நேரம் வாயிலேயே வைத்திருந்து துப்பினால் பல்நோய்கள் குணமாகும்.

❖ நெல்லிக்காய், முருங்கைப்பிஞ்சு, முள்ளங்கி மூன்றையும் அடிக்கடி உணவில் சேர்த்துக்கொண்டால் இரத்தம் சுத்தியாகும். கர்ப்பிணிகளுக்கு உண்டாகும் கை, கால் வீக்கமும் குணமாகும்.

❖ நெல்லிக்காய்ச்சாறு, கறிவேப்பிலை இரண்டையும் தேங்காய் எண்ணெய்யில் போட்டுக்காய்ச்சி பதத்தில் வடித்து தலையில் தேய்த்து வந்தால் முடி நரைக்காது.

❖ நெல்லிவற்றல் 50 கிராம், சீரகம் 50 கிராம் இரண்டையும் பொடிசெய்து ஒரு வாரத்திற்கு காலை, மாலை இருவேளையும் 2 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் மஞ்சள் காமாலை குணமாகும்.

**திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்,**
**கைதடி.**

❖ நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய் ஆகியவற்றை உடைத்து நீரில் போட்டு காய்ச்சிப் பக்குவம் செய்து பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிட்டால் காய்ச்சல் குறையும்.

❖ நெல்லிக்காய்ச்சாறு 1/2 லீற்றர், பொன்னாங்காணிச்சாறு ஒரு லீற்றர், பசுவின் பால் 1/2 லீற்றர், நல்லெண்ணெய் 1 1/2 லீற்றர், செவ்விளநீர் 2 லீற்றருடன் அதிமதுரம், கோட்டம், ஏலம், பூவாங்கிழங்கு, கஸ்தூரி மஞ்சள், சாதிக்காய், சாதிபத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லி, தான்றி ஒவ்வொன்றும் 15 கிராம் எடுத்து , இடித்து, தூள் செய்து சேர்த்து சுண்டக்காய்ச்சி மெழுகுப் பதம் வரும் போது இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும். வாரம் இருமுறை தேய்த்து தலை முழுகிவந்தால் கண்நோய்கள், பொடுகு, தலைமுடி உதிர்தல் நீங்கும், உடலுக்குக் குளிர்ச்சியையும் கொடுக்கும்.

❖ வாந்தி தொடர்ந்து இருந்தால் நெல்லிவற்றல், வில்வம்வேர், சீரகம், சுக்கு, சிற்றாமுட்டி வேர், நெற்பொரி இவைகளை ஒரேயளவாக சேர்த்து குடிநீர் செய்து 30- 60 மில்லி அளவு கொடுக்க வாந்தி நீங்கும்.

# நாய்களின் உணவுக்கு வரிகுறைப்பு சிறப்பானது என்கிறார் பிரதமர்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நாய்களின் உணவுக்கான வரி குறைக்கப்பட்டுள்ளது. இது சிறப்பான ஒரு விடயமாகும். மனிதர்களை விட நாய்களுக்கே அதிக சலுகைகள் வழங்குவது சிறந்ததாகும். காரணம் மனிதனின் பாதுகாப்பு முதல் பொலிஸார் கள்வர்களை கண்டுபிடிப்பது வரை நாய்களே மேற்கொள்கின்றன. எனவே, நாய்களுக்கு சலுகைகள் வழங்குவதை தரக்குறைவாக எண்ண முடியாது என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டட தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

சாதாரண மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலேயே ஜனாதிபதியினால் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தொழில் இல்லாமல் வீடுகளில் தங்கியிருக்கும் பெண்கள் சுயதொழில் செய்து முன்னேறக் கூடிய வகையில் இந்த வரவு செலவு திட்டம் பெரும் உதவியாக அமைந்துள்ளது.

அநேகமான முஸ்லிம் பெண்கள வீடுகளிலேயே முடங்கி கிடக்கின்றனர். எனவே இவர்களுக்கு இது பெரும் உதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

எவ்வளவுதான் உதவி செய்தாலோ அல்லது கோடிக்கணக்கில் கொடுத்தாலோ போதாது. அல்லது இன்னும் கொஞ்சம் தந்திருக்கலாம் என்று கூறுவதான் மனிதனுடைய இயல்பு. இதை மாற்ற முடியாது. எவ்வாறாயினும் சாதாரண மக்களுக்கு வரப்பிரசாதமாக இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்துள்ளது.

உலகின் இரண்டாவது மிகப் பெரிய சனத்தொகையை கொண்ட இந்தியாவை பல பிரிவுகளாகக் குவதற்கு பாரிய சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ரஷ்ய நாடும் இவ்வாறே பல கூறுகளாக்கப்பட்டன.

இதேபோன்று பல்லின கலாசாரம், சமயங்கள் மற்றும் மொழிகளை கொண்ட இந்தியாவையும் பிளவுபடுத்த பாரிய சதித்திட்டங்கள் முனனெடுக்கப்படுகின்றன. எனவே இந்தியா இதனை புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு எவ்வித அநீதிகளும் இழைக்கப்படவில்லை. வடக்கு மற்றும் கிழக்கில் 15 இலட்சம் தமிழர்களே வாழ்கின்றனர். ஆனால், அதனை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் 16 இலட்சத்துக்கும் அதிகமானோர் வாழ்கின்றனர். மேலும் எனது தொகுதியில் 23 வீதமானோர் தமிழர்கள் ஆவர். இவர்களும் நாங்களும் உண்டு குடித்து சந்தோசமாகத்தான் இருக்கின்றோம். நாம் அவர்களுக்கு எவ்வித அநீதியும் இழைப்பது இல்லை என்றார். (அ-2)

# வேதவன விநாயகருக்கு பிள்ளைத்தமிழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வயலூரன் செ.சுதாகரன், கல்வயல் வேதவன விநாயகர் மீது பாடிய பிள்ளைத்தமிழ் நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்வ பல் வேதவன விநாயகர் ஆலய மண்டபத்தில் வைத்திய கலாநிதி சு.சி. அருளாணந்தம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஆசியுரைகளை ஆலயத்தின் முன்னாள் பிரதம சிவாச்சாரியார் கி.சோமசுந்தரக் குருக்களும் இந்நாள் பிரதம சிவாச்சாரியார் செ. பரராஜசேகரக் குருக்களும் ஆற்றுவர்.

பிள்ளைத் தமிழ் குறித்த விளக்கவுரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் க.தர்மராஜா ஆற்ற நூலின் வெளியீட்டுரையை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், நயப்புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் வழங்குவர்.

நூலின் முதற்பிரதியை மட்டுவில் கிழக்கு கந்தசாமி சிவசேகரும் இணைப்பிரதிகளை மடு பிரதேச செயலக கணக்காளர் ஞா. ரூபகரன், தென்மராட்சி விவாகம் மற்றும் பிறப்பு இறப்பு பதிவாளர் க.மோகனராஜலிங்கமும் பெற்றுக்கொள்வார்கள். (அ-2)

# மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மூலம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொள்ளவுள்ளார். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் இளமையாக நினையுங்கள்.
இளைஞரைப் போல உற்சாகமாக வாழுங்கள்.
நல்லதையே நினைத்தால் இளமையும் உற்சாக
மும் எப்போதும் தொடரும். ~ **கானோபஸ்**

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழர் அரசியல் பலம்பெற இளைஞர் அணிகளை உருவாக்குங்கள்

இந்திய அரசியலில் எல்.கே. அத்வானியை எமக்கு மிகவும் பிடிக்கும். இதற்குக் காரணம் அவர் கொண்டிருக்கும் இந்துத்துவக் கொள்கை அல்ல.

மாறாக அத்வானியிடம் இருக்கின்ற வேகமும் உணர்வும் உற்சாகமுமே அவர் மீது நமக்குப் பற்று ஏற்படக்காரணம் எனலாம்.

85 வயதைக் கடந்துவிட்ட எல்.கே. அத்வானி அரசியல் மேடைகளில் பேசும் போது ஒரு இளைஞனின் மிடுக்கில் பேசுவார். அவரின் நடையிலுள்ள வேகம் மற்றவர்களை அச்சம் கொள்ளச் செய்யும்.

அந்தளவிற்கு அத்வானியிடம் வயதை மீறிய மிடுக்கும் உற்சாகமும் உண்டு.

ஒருவர் எந்த வயதிலும் அரசியல் பணியில் ஈடுபடலாம். ஆனால் அதற்கேற்றவாறான உற்சாகமும் மனத்திடமும் இருப்பது அவசியம்.

வயது போய்விட்டது என்ற உணர்வை அத்வானியிடம் இம்மியும் காணமுடியாது.

பாரதிய ஜனதா கட்சியின் எழுச்சி, இந்திய தேசத்திற்குப் பலமான அரசியல் தலைமை என்ற இலக்கை அடையும் பொருட்டு ஊன் உறக்கம் மறந்து அத்வானி வீர நடைபோடுவதைப் பார்க்கும் போதெல்லாம் எங்களுக்கும் அத்வானி போன்ற அரசியல் தலைவர் கிடைக்கமாட்டாரா? என்று ஏங்குவது உண்டு.

என்ன செய்வது எங்களின் தலைவிதி அர்ப்பணிப்புள்ள – தியாகசிந்தையுள்ள அரசியல் தலைமை எமக்குக் கிடைக்காமல் போயிற்று.

கிடைத்த அரசியல் தலைமையும் ஏனோ தெரியவில்லை மனச்சோர்வு கொண்டிருப்பதாகவே தெரிகிறது.

அரசியலில் ஏற்பட்ட வெறுப்போ அல்லது முதுமை கொடுக்கும் இயலாமையோ அல்லது உடல் தளர்வுகளால் ஏற்படக்கூடிய சலிப்புத் தனங்களோ அந்த மனச்சோர்வுக்குக் காரணமாக இருக்கலாம்.

அரசியல் தலைமை என்பது அதிலும் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்பது மிகவும் பலமுடையதாக – உற்சாகமுடையதாக – 24 மணிநேரமும் இயங்கு திறன் உடையதாக இருத்தல் வேண்டும்.

எனினும் எங்கள் அரசியல் தலைமைகளிடம் இத்தகைய நிலைமைகளுக்கு இடமே இல்லை என்றாயிற்று.

வலி வடக்கில் உண்ணாவிரதம் என்றால் முதல் நாளே கொழும்பு செல்கின்ற தந்திரம் இருக்கும்வரை எங்கள் அரசியல் தலைமைகளால் இலக்கை அடைய முடியாது என்பது நிறுதிட்டமான உண்மை.


அதேநேரம் எங்கள் அரசியல் தலைமைகளை குறை கூறிக்கொண்டே இருப்பதும் எங்கள் விடிவுக்கு ஒரு போதும் உதவப்போவதில்லை.

எனவேதான் மாற்று ஏற்பாடுகள் பற்றிச்சிந்திக்க வேண்டும். அத்தகையதொரு சிந்தனையில், அனுபவமும் அறிவு முதிர்ச்சியும் கொண்ட அரசியல் தலைமை இயங்கும் அதேநேரம் வேகமும் உற்சாகமும் உடைய இளைஞர்களைக் கொண்ட அரசியல் அணியும் சமாந்தரமாகச் செயற்பட வேண்டும்.

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களில் மூத்த அரசியல் தலைமை ஈடுபட; இளம் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களின் வாழ்வாதாரங்கள், அபிவிருத்தி முன்னெடுப்புகள், தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் கலாசாரச் சீரழிவுகளைக் கட்டுப்படுத்துதல், தகவல் மையங்களை இயங்கு நிலையில் வைத்திருத்தல், புலம்பெயர் உறவுகளின் உதவியைப் பெற்று வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் தொழில் வாய்ப்புகளை நடைமுறைப்படுத்தல், இளம் சமூகத்திற்கு அரசியல் கற்பித்தல் என்றவாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

தமிழர் அரசியலில் இளம் அரசியல் தலைமைகளின் உருவாக்கம் காலத்தின் உடனடித் தேவை என்பதை எவரும் மறந்துவிடலாகாது.

# இலங்கையின் முதலாவது மருந்தாளர் கந்தசாமி



வட்டுக்கோட்டையில் அன்பும் பண்பும் கொண்ட அறநெறியில் வாழ்ந்திருந்த சின்னத்துரை பொற்கொடி தம்பதிகளின் மூன்றாவது அருந் தவப் புதல்வனாய் கந்தசாமி, நானிலம் தன்னில் அவதரித்தார்.

இவர் உயர் பண்புகளும் வசீகரத் தோற்றமும் கொண்டவர். சமயப்பற்று மிக்க இவர் தனது ஊரிலுள்ள ஆலயங்களுக்கு மட்டுமன்றி பல இடங்களிலுள்ள ஆலயங்களுக்கு உதவிகள் வழங்கியுள்ளார்.உறவினர்களின் நன்மை, தீமைகளில் பங்குபற்றி அந்தச் சபைகளை நன்றாக நடத்தினார்.

இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்றார். பின்னர் கொழும்பு வைத்திய கல்லூரியில் தனது படிப்பைத் தொடர்ந்தவர்.

இலங் கையின் அரச சேவையில் முதலாவது மருந்தாளர் சின்னத்துரை

### மறைந்தார் மாண்பு

கந்தசாமி என்ற பெருமையை தனதாக்கிக் கொண்டார்.

1957 ஆம் ஆண்டு மருந்தாளர் சேவையில் இணைந்த இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் முதல் நியமனத்தைப் பெற்று பணிபுரிந்தார்.

அதன் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையிலும் ஹொரணை அரசாங்க வைத்தியசாலையிலும் சேவையாற்றி கொழும்பு தேசிய மருந்தக தரநிர்ணய ஆய்வுகூடத்தில் விசேடதர பிரதம மருந்தாளராகக் கடமையாற்றினார்.

இவரின் திறமையைக் கண்ட சுகாதார அமைச்சு மேற்படிப்பிற்காக இவரை லண்டன், மலேசியா போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைத்தது.

இவர் அரசாங்க மருந்தாளர் சங்கத்தின் ஸ்தாபகராகவும் முதல் பொதுச் செயலாளராகவும் பணியாற்றியதோடு சங்கத்தின் வளர்ச்சிக்காக பெரிதும் பாடுபட்டவர்.

1997 ஆம் ஆண்டு தனது சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

பின்னர் இவரது 50 வருட சேவையைப் பாராட்டி சுவர்ண ஜெயந்தி விருது வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார்.

2012 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 4ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

**கே.விஜயகாந்த்**

# வவு. சிறுவர் இல்ல துஷ்பிரயோகம்; காப்பாளருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(குருமன்காடு)

வவுனியா அட்டமஸ்கட பிரதேசத்தில் அமைந்திருந்த சிறுவர் இல்லத்தில் சிறுவர்களுக்கு பல்வேறு துஷ்பிரயோகங்கள் இடம்பெற்ற நிலையில் அதன் காப்பாளர் கல்யான திஸ்ஸ தேரர் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர் மீதான வழக்கு நேற்று வவுனியா மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோது அவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி எஸ். இராமகமலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா அட்டமஸ்கட பகுதியில் 2010ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த சிறுவர் இல்லத்தில் விகாராதிபதியினால் சிறுவர் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் வவுனியா மாவட்ட நீதிமன்றில் கடந்த மாதம் 6ஆம் திகதி அன்று தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து விகாராதிபதிக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக கடந்த மாதம் 19ஆம் திகதி மீண்டும் அவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விளக்கமறியல் நீடிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று மூன்றாம் திகதி மீண்டும் விசாரணைக்கு வந்தது.

இந்நிலையில் கடந்த 26ஆம் திகதி மேலும் ஒரு சிறுவன் தன்னை சிறுவர் இல்லத்தில் இருந்த சிலர் தடிகளால் தாக்கியதாகவும் இதன் காரணமாக பலகையில் இருந்த ஆணி தனக்கு காயத்தை ஏற்படுத்தியமையால் தனக்கு தோல் நோய் ஏற்பட்டதாக வவுனியா சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் நிலையத்தில் முறைப்பாட்டைச் செய்திருந்ததுடன் வவுனியா பொலிஸிலும் முறைப்பாட்டை பதிவு செய்திருந்தார்.

அதனையடுத்து மேலும் ஐந்து சிறுவர்கள் நேற்று முன்தினம் தமது பெற்றோருடன் வவுனியா சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் நிலையத்திற்கு வருகை தந்து தமது முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர்.

இம்முறைப்பாடுகள் தொடர்பான அறிக்கையினைப் பெற்றுக்கொண்ட மாவட்ட நீதிபதி, தொடர்ச்சியாக விகாராதிபதிக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைத்து வருவதனாலும் முறைப்பாட்டாளர்களின் தடயங்கள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை கருத்தில் கொண்டும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை இவ்விசாரணை இடம்பெற்றபோது விகாராதிபதிக்கு ஆதரவான ஒரு குழுவினர் நீதிமன்றம் முன்கூடி இருந்தமையால் சம்பவ இடத்திற்கு வந்த வவுனியா பொலிஸார் அவர்களை அங்கிருந்து வெளியேற்றியமை குறிப்பிடத்தக்கது. (செ-250)


## அரசியல்வாதிகளுக்கு எதிராக முறைப்பாடுகள்!

2013 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் இதுவரை 111 அரசியல்வாதிகளுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவர்களுக்கு எதிராக ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இவர்களில் 9 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதத்தில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இவற்றில் அதிகளவான முறைப்பாடுகள் பாடசாலைகளில் மாணவர்கள் முதலாம் ஆண்டுக்கு சேர்ப்பதில் இடம்பெற்ற ஊழல் சம்பந்தமானது.

இந்த வருடத்தில் மாத்திரம் மொத்தமாக 2310 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (செ-11)




## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### விநாயகரின் வாகனம் மூஞ்சூறு தத்துவம்

விநாயகரின் வாகனம் மூஞ்சூறு இருளில்தான் சஞ்சரிக்கும். அத்துடன் மூஷிகத்திற்கு வாசனை பிடிக்கும். வாசனை பிடித்துக்கொண்டே எந்தெந்த உணவுப்பொருள் எங்கிருக்கிறது எனக் கண்டு கொள்ளும். ஆன்மீகத்தில் இருள் என்பது அஞ்ஞானத்தையும் வாசனை என்பது ஆசைகளையும் குறிக்கிறது.

எனவேதான் அஞ்ஞானத்தையும் ஆசைகளையும் கட்டுப்பாட்டில் வைப்பவர் என்பதை விளக்கவே அவற்றின் உருவமாக விளங்கும் மூஷிகத்தை வாகனமாகக் கொண்டுள்ளார். விநாயக சதுர்த்தியில் விசேடமான உணவுப் பண்டங்கள் கடவுளுக்கு நிவேதனமாக அளிக்கப்படுகின்றன.



அப்பண்டங்கள் நீராவியில் தயாரித்தவை அல்லது எள் அறுவடையாகும். எள்ளானது சுவாச சம்பந்தமான நோய்களையும் கண்நோய்களையும் தீர்க்கவல்லது.

நீராவியில் வெந்த பண்டங்கள் ஜீரணிக்கக்கூடியவை ஆகும். இவ்வாறு முன்னோர்கள் ஆரோக்கியமும் ஆனந்தமும் கூடிய வகையில் இறைவனை வழிபட்டார்கள்.

நன்றி: அருள் ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்ட 1200 ரூபா போதுமானதாகவில்லை

## அகில இலங்கை பொது ஊழியர் சங்கம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

காலத்துக்கு காலம் தேசிய சம்பள நிர்ணய ஆணைக் குழுக்கள் நியமனம் என்ற போர்வையில் அரச ஊழியர்கள் ஏமாற்றப்பட்டே வருகின்றனர். ஒரு முறையான சம்பள உயர்வின்றி அரச ஊழியர்கள் கடன் சுமையில் மூழ்கியுள்ளனர் என அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்துள்ளார்.

மேலும் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் வடக்கு, கிழக்கு மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் திட்டம் உள்ளடக்கப்படாதமை இன நல்லிணக்கத்திற்கு வழிகோலாது எனவும் வடமாகாண ஆளுநரை மாற்ற வேண்டும் என்ற கருத்தை வரவேற்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் முகாமைத்துவ சபைக் கூட்டம் கல்முனை சபை மண்டபத்தில்நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கணிசமான அளவு அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுமென்ற எதிர்பார்ப்புடன் அரச ஊழியர்கள் இருந்தனர்.

ஆனால், வெறும் கண்துடைப்பாக ஆயிரத்து 200 ரூபாவே வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது பெரும் ஏமாற்றமாகவே அமைந்துள்ளது.

எப்போதும் வரவு செலவுத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்படும் கால கட்டங்களில் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை நிர்ணயிப்பதற்கான தேசிய சம்பள நிர்ணய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுவது வழக்கமாகும்.

தற்போதும் இத்தகைய தேசிய சம்பள நிர்ணய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு அரச ஊழியர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட சம்பள நிர்ணய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் கிடப்பில் போடப்பட்டு புஸ்வாணமான நிலைமை இன்னும் தொடரக்கூடாது. இதே வேளை வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் எந்தத் திட்டமும் உள்ளடக்கப்படவில்லை.

இத்தகைய புறக்கணிப்புக்கள் நாட்டில் நல்லிணக்கத்தையும் நல்லாட்சியையும் மலரச் செய்வதற்கு வழிவகுக்காது. மேலும் வடமாகாண ஆளுநரை மாற்ற வேண்டுமென்று வடக்கு முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் குரல் எழுப்பியுள்ளார். இந்தக் கருத்தை நாமும் வரவேற்கின்றோம். வடமாகாணத்தை நன்கு தெரிந்த நன்கு புரிந்த ஒரு சிவில் உயரதிகாரியோ அனுபவம் வாய்ந்த அரசியல் பிரமுகர் ஒருவரோ ஆளுநராக நியமிக்கப்படுவதே பொருத்தமானதாகும் என குறிப் பிட்டுள்ளார். (அ)

# மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையத்தினால் நடத்தப்படும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அந்நிலையத்தின் தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை பேராசியரும் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கல்வி வலய கணிதபாட பிரிவுக்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.எம். ஈஸ்வரதேவன், வவுனியா தெற்கு கல்வி வலய விசேடகல்விக்கான ஆசிரிய ஆலோசகர் வி.சுப்பிரமணியம் ஆகியோரும் கௌரவவிருந்தினர்களாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வன் கலாநிதி ஆறு.திருமுருகன், வடமாகாண சமூக சேவைத் திணைக்கள பணிப்பாளர் திருமதி.நளாயினி இன்பராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந் நிகழ்வின் போது வலு சஞ்சிகை வெளியீடு இடம்பெறவுள்ளது. (அ-5)

### வடக்கு கிழக்கு

# பொலிஸ் நிலையங்களில் தமிழ்மொழியில் பொலிஸ் சேவை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ்மொழி மூலம் சேவையை பெற்றுக் கொள்ள முடியும் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இதற்கமைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ்மொழி தெரிந்த உத்தியோகத்தர்கள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித்ரோஹண தெரிவித்துள்ளார்.

ரிவி தெரணவின் 360 எனும் அரசியல் நிகழ்ச்சி யில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன் வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாணத்திலுள்ள எந்தவொரு பொலிஸ் நிலையத்திலும் தமிழ்மொழி மூலம் முறைப் பாட்டை பதிவு செய்வதற்கு உத்தியோகத் தர்கள் எவரும் இல்லை என நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற குறித்த நிகழ்ச்சியில் சுமந்திரன் குற்றம் சுமத்தியிருந்தார்,

இதன்போது ,வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலுள்ள பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் மொழி மூலம் சேவைகள் வழங்கப்படுவதாக தொலைபேசியில் கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (அ-2)

# நாட்டில் பெண்களின் எண்ணிக்கை குறைவு

(கொழும்பு)

நாட்டில் ஆண்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் பெண்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டுக்கான குடிசன மதிப்பீட்டில் 100 ஆண்களுக்கு ,94 பெண்கள் (100:94) என்ற நிலையில் காணப்படுவதாக அத்திணைக்கள பணிப்பாளர் நாயகம் டீ.சீ.ஏ.குணவர்த்தன குறிப்பிட்டு ள்ளார்.

குடிசன மதிப்பீட்டின் 5 வீதத்தை அடிப்படையாகக் கொண்ட தரவுகளுக்கு அமையவே,இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(அ-2)

# வணக்கஸ்தலங்கள் இடிக்கப்படுவதை உடன் தடுக்க நடவடிக்கை எடுங்கள்

## ஜனாதிபதியிடம் ஈ.பி.டி.பி.கோரிக்கை

(கொழும்பு)

வலிகாமம் வடக்கு அதி உயர் பாதுகாப்பு வலய பகுதிக்குள் அங்கிருந்த மக்களை மீண்டும் உரிய இடங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அங்கு கோவில்களும் கல்லூரிகளும் இடித்து அழிக்கப்படுவதாக கூறப்படும் செய்திகள் உண்மையாக இருந்தால் அதை தடுத்து நிறுத்த ஜனாதிபதி உடனடி உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி அவசர கடிதமொன்றை ஜனாதிபதிக்கு எழுதியுள்ளது.'அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாதுகாப்பு வலயங்களாக உள்ள பகுதிகளில் அங்கு வாழ்ந்த மக்கள் மீண்டும் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும். யுத்தத்திற்கு பின்னர் உயர்பாதுகாப்பு வலயங்கள் இருக்க முடியாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதியை கட்டம் கட்டமாக நிறைவேற்ற முடியும் என நாம் நம்புகின்றோம்.

அண்மைக்காலமாக வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் உள்ள கோவில்களும் கல்லூரிகளும் குடியிருந்த வீடுகளும் படையினரால் இடித்து அழிக்கப்படுவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. வீடுகளும் கல்லூரிகளும் உடைக்கப்படுவதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் கோவில்கள் உடைக்கப்படுவதை ஒருபோதும் சகித்துக் கொள்ளப்போவதில்லை.

ஆகவே, கோவில்கள் உடைத்து அழிக்கப்படுவதான செய்திகள் தமிழ் மக்களின் கலாசார அழிப்பாகவும் ,மத நம்பிக்கைகள் மீதான தாக்குதலாகவும் அமையும். இவ்வாறான சம்பவங்கள் தமிழ் மக்களின் மனங்களில் எக்காலத்திலும் ஆறாத வடுக்களை ஏற்படுத்தும்.எனவே கோவில்கள், கல்லூரிகள், குடியிருந்த வீடுகள் உடைக்கப்படுவதாக வெளி யான செய்திகளில் உண்மை இருக்குமானால் அதனை உடனடியாக தடுத்து நிறுத்த ஜனா திபதி உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பயிற்சிப்பட்டறை

(சாவகச்சேரி)

கிராம சிறு நகர எழுச்சித்திட்ட (புற நெகும) விழுப்புணர்வு பயிற்சிப் பட்டறை சாவகச்சேரி நகராட்சி மன்ற உத்தியோகத்தர்களுக்கு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில்நடைபெறவுள்ளது. (அ-9-29)

# ஒளிவிழா

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை றோ.க.த. பாடசாலையின் ஒளிவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ஆசிரியர் ஞா.எஸ்கார்வே தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ,வளர்பிறை உள ஆற்றுப்படுத்துகை நிலைய இயக்குநர் அருட்பணி அமலதாஸ் கலந்து கொள்வார்.

அத்தோடு ஆசியுரையை ,உயரப்புலம் அடைக்கலநாயகி தேவாலய பங்குத் தந்தை அருட்பணி சோதிநாதன், வரவேற்புரையை உப அதிபர் இ.ஷாம்குமார், வாழ்த்துரையை அதிபர் திருமதி.ந.சந்திரகுமார் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-9-23)



இளவாலை வாலிபர் சங்கத்தால் புணரமைக்கப்பட்ட **கலைமகள் படிப்பகம்** அண்மையில் பிரதேச சபை தவிசாளர் வே.சுகிர்தன் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்து சிறப்பான ஆரம்பம்

## ரெய்லர், மக்கலம் சதம்



நியூசிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியதீவுகள் அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் நாள் முடிவில் நியூசிலாந்து முழுமையான ஆதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

டுனிடினில் இடம்பெறும் இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.


இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நேற்றைய முதல் நாள் முடிவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 367 ஓட்டங்களுடன் காணப்பட்டது.

முதலாவது விக்கெட்டுக்காக 25 ஓவர்களில் 95 ஓட்டங்களை பகிர்ந்த அவ்வணி, இரண்டாவது விக்கெட்டை விரைவாக இழந்த போதிலும் மூன்றாவது விககெட்டை 185 ஓட்டங்களுடன் இழந்து காணப்பட்டது.

அதன் பின்னர் இணை சேர்ந்த அணியின் தலைவர் பிரெண்டன் மக்கலமும் முன்னாள் தலைவர் றோஸ் ரெய்லரும் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அவர்களிருவரும் 4ஆவது விக்கெட்டுக்காக பிரிக்கப்படாத 182 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக பிரெண்டன் மக்கலம் 122 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 109 ஓட்டங்களையும் றோஸ் ரெய்லர் 157 பந்துகளில் ஆட்டமிழக்காமல 103 ஓட்டங்களையும் ஹேமிஷ் றதர்ஃபோர்ட் 62 ஓட்டங்களையும் பீற்றர் ஃபுல்ற்றன் 61 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ரீனோ பெஸ்ற், டெரன் சமி, ஷேன் ஷிலிங்பேர்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைபபற்றினர்.



## ஐ.சி.சி சிறந்த கிரிக்கெட் வீரர் பட்டியலில் சங்கக்கார



சர்வதேச கிரிக்கெட் சபையின் வருடாந்த விருதுகளில் இவ்வாண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர், சிறந்த ஒரு நாள் சர்வதேச போட்டி வீரர் ஆகிய விருதுகளுக்கு இலங்கை அணியின் சிரேஷ்ட வீரர் குமார் சங்கக்காரவும் போட்டியிடவுள்ளார்.

ஆறு வீரர்களில் ஒரு வீரராக அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சர்வதேச கிரிக்கெட் சபையின் விருதுகளுக்கான குறும் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே குமார் சங்கக்கார இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.

இதில், குமார் சங்கக்கார தவிர, இலங்கையின் மஹேல ஜெயவர்த்தன சர்வதேச கிரிக்கெட் சபையின் விளையாட்டுப் பண்புகளை மதிப்பதற்கான விருதுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டு நவம்பரில் நியூசிலாந்திற்கெதிரான போட்டியில் நடுவர் ஆட்டமிழப்பு வழங்க முன்னரே களத்தை விட்டு வெளியேறியமைக்காக அவர் இந்த விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளார். முழுமையான குறும் பட்டியல்

**சிறந்த கிரிக்கெட் வீரர்,**

ஹசிம் அம்லா (தென்னாபிரிக்கா), ஜேம்ஸ் அன்டர்சன் (இங்கிலாந்து), மைக்கல் கிளார்க் (அவுஸ்ரேலியா), அலஸ்ரெயர் குக் (இங்கிலாந்து), மகேந்திரசிங் தோனி (இந்தியா), குமார் சங்கக்கார (இலங்கை)

**சிறந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி வீரர்:**

சயீட் அஜ்மல் (பாகிஸ்தான்), ஷிகர் தவான் (இந்தியா), மகேந்திர சிங் தோனி (இந்தியா), மிஸ்பா உல் ஹக் (பாகிஸ்தான்), இரவீந்திர ஜடேஜா (இந்தியா), குமார் சங்கக்கார (இலங்கை).

## கிணற்றில் வீழ்ந்த பாலகன் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றுக்குள் தவறிவிழுந்த குழந்தையொன்று நீரில் மூழ்கியதில் மூச்சுத் திணறி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று மதியம் 12 மணியளவில் யாழ்ப்பாணம் விக்ரோரியா வீதியில் உள்ள வீட்டுக் கிணற்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தினைச் சேர்ந்த ஞானசீலன் கிரியோன் (வயது-3) என்ற பாலகனே உயிரிழந்துள்ளார்.

சடலமானது நேற்று மதியம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் இரவு 7 மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## எல்லே சுற்றுப் போட்டி அல்லைப்பிட்டி சிறிமுருகன் வெற்றி

இலங்கை எல்லே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட வடமாகாண பிரதேச செயலகங்களுக்கு இடையிலான எல்லேப் போட்டியில் வேலணைப் பிரதேச செயலக பிரிவில் அல்லைப்பிட்டி சிறிமுருகன் விளையாட்டுக் கழக பெண்கள் அணி வெற்றி பெற்றுள்ளது. இப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இதில் ஊர்காவற்துறை பிரதேச செயலகம் சார்பாக கலந்து கொண்ட பெண்கள் அணியை வேலணைப் பிரதேச செயலகப் பெண்கள் அணி சார்பாக கலந்து கொண்ட அல்லைப்பிட்டி சிறிமுருகன் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

## வடக்கில்...

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பரதிநிதி கலாநிதி சலோகா பெயானி, முதலமைச்சர் சி.வி.விகனேஸ்வரனை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று காலை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச்சந்திப்பினையடுத்து முதலமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

இடம்பெயர்ந்திருக்கின்ற மக்களுடைய நிலைமைகள் மற்றும் இடப்பெயர்வுகள் தொடர்பாக அறிவதற்காகவே ஐ.நா பிரதிநிதி யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். இதன் போது வலி வடக்கில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர்காணிகளை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றமை,

இதே போன்று கிளிநொச்சி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் எவ்வளவு எவ்வளவு ஏக்கர் காணிகளை ஆக்கிரமித்து இராணுவம் பயன்படுத்தி வருகின்றது என்பன தொடர்பாகவும் எடுத்துக் கூறியிருந்தேன்.

அதுமட்டுமன்றி வடக்கிலுள்ள ஏனைய மாவட்டங்கள் தொடர்பாக தகவல்கள் போதியளவில் இல்லாதமையினால் அந்த விபரங்களை வெளிப்படுத்தாத நிலையிலும் கூட இராணுவத்தால் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக எடுத்துக் கூறியிருந்தேன்.

முக்கியமான எங்களுடைய பிரச்சினை இராணுவம் வடக்கில் நிலை கொண்டிருப்பதுதான. இராணுவம்தான் தமிழ்மக்களுக்கு பிரச்சினையாக உள்ளது. என்பது தொடர்பாகவும் இராணுவத்தால்தான் இங்கு ஏனைய பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினேன்.

ஆகவே அதனை உரியவர்களுக்கு அவர்கள் தெரியப்படுத்த வேண்டுமென்றும் இங்கு இராணுவம் நிலைத்து நிற்க வேண்டுமென்று நினைப்பவர்கள் எவ்வளவு காலத்திற்கு நிலைத்திருக்க வேண்டுமென்று எண்ணுகிறார்கள் என்பதனை வெளிப்படுத்த வேண்டும் .

ஏனென்றால் இப்பொழுது நடைபெறுவதனைப் பார்த்தால் இன்னும் 100 வருடங்களுக்கு இராணுவத்தினர் தொடர்ந்திருப்பார்கள் போன்றே தெரிகின்றதென்றும் இதனுடைய உள்ளார்ந்தம் தெற்கிலிருந்து மக்களைக் கொண்டு வந்து இராணுவத்துடன் சேர்த்து மக்களைக் குடியமர்த்த திட்டமிட்டு வருவதாகவும்

இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதென்றும் இதே போன்று கிழக்கு மாகாணத்திலும் நடைபெற்றதென்றும் இது தொடர்ந்தும் வடக்கு மாகாணத்திலும் நடைபெறுவதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கிறது.

இதனை எம்மால் தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும் உலக நாடுகள் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரியுள்ளேன். இதனைத் தடுத்து நிறுத்தினால்தான் எமக்கு விடிவு ஏற்படுமென்றும் தெரிவித்துள்ளேன்.

இதே போன்று இங்குள்ள நிலைமைகள் மற்றும் நடைபெறுகின்ற சம்பவங்கள் என்பன தொடர்பிலுமான விபரங்களை எடுத்துக் கூறியிருந்தோம். அத்தோடு இங்குள்ள மக்களுக்கு வாழ்வாதாரநிலைமைகளிலும் பாதிப்பு ஏற்படுகின்றன.

தொழில் வாய்ப்புக்களை இராணுவம் ஆக்கிரமித்து தாமே செய்து வருகின்ற நிலையிருப்பதாகவும்,

இதில் விவசாயம், மீன்பிடி மற்றும் வர்த்தக தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர.


இவ்வாறு மக்களுடைய வாழ்வாதாரங்களை இராணுவம் பிடித்து வைத்திருக்கின்றது என்றும் இதனால் தமிழ்மக்களுக்கு வாழ்வாதார ரீதியாக பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளது எனவும் அத்துடன் அது தொடர்பாக எமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையும் எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

எங்களுடைய இத்தகைய கருத்துக்களை அவர்கள் முற்றாக உணர்ந்திருக்கின்றார்கள். எனவே எங்களுடைய இத்தகையபிரச்சினைகள் சம்மந்தமாக ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்தியம்புவார்கள் என நம்புகின்றோம்.

இதனூடாக அரசிற்கு நெருக்குதல்கள் ஏற்பட்டு அந்த நெருக்குதலகள் காரணமாக தமிழ்மக் களுக்கு சில நன்மைகள் ஏற்படுமென [illegible] (செ-6)

## புலிகளுடன் அரசாங்கம் தொடர்புகளை வைத்துள்ளது

### இரா.சம்பந்தன் குற்றச்சாட்டு



(கொழும்பு)

முன்னாள் போராளிகளுக்கு ஆதரவு வழங்கி பதவிகளை வழங்கி அரசாங்கமே விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கூட்டமைப்பு விடுதலைப்புலிகளை ஆதரிக்கவில்லை. அவர்களுடன் இணைந்து பணியாற்றியது.

ஆனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை பெற்று கொள்ளும விடயத்தில் அவர்களுடன் ஆர்வமாக இணைந்து செயற்பட்டது.

. குமரன் பத்மநாதன், பிரதியமைச்சர் முரளிதரன் மற்றும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தன் ஆகியோரும் முன்னாள் போராளிகள். அரசாங்கமும்அவர்களும்நேரடியாக இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

2005 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் செல்வாக்கே அரசாங்கத்திற்கு தேர்தலில் வெற்றிபெற காரணமாக அமைந்தது.

நான் விடுதலைப் புலிகளுடன் எதனையும் செய்யவில்லை. அரசாங்கம் அவர்களுடன் நிறையவற்றை செய்துள்ளது. எங்கள் மீது கல்லெறிய வேண்டாம். நாங்கள் விடுதலைப் புலிகளுடன்எதனையும்செய்யவில்லை.

அரசியல் தீர்வை கொண்டு வரும தேவையில் நாங்கள் அவர்களுடன் இணைந்து பணியாற்றினோம். இதற்காக அவர்களுடன் பணியாற்றும் தேவை இருந்தது.

அண்மைய மாகாண சபைத் தேர்தலிலும் தேர்தலுக்கு பின்னரும் வடக்கில் சில இராணுவ நடவடிக்கைகள் கவலைகளை ஏற்படுத்தியுள்ளன.

இராணுவத்தில் சிறந்த சிப்பாய்களும்உள்ளனர் அத்துடன்அவர்களில் கூடாதவர்களும் உள்ளனர். இந்த விடயம் தீர்க்கப்பட வேண்டும் என்றார். (செ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஐ.நா பிரதிநிதி...

இதன்போது இடம்பெயர்ந்த மக்கள் தங்களை தங்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறு மன்றாட்டமாக வேண்டுகோள் விடுத்தனர். அத்தோடு மழை வெள்ளத்தினால் தாம் படும்அவலநிலை தொடர்பாகவும் ஐ.நா பிரதிநிதியை தமது வீடுகளுக்கு அழைத்துச் சென்று விளங்கப்படுத்தினர்.

சேறும் சகதியுமாக இருந்த குறித்த மக்களின் வாழ்விடங்களுக்குள் சென்று தமிழ் மக்களின் அவலநிலையை நேரடியாகப் பார்வையிட்ட ஐ.நா பிரதிநிதி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேலும் தெரிவித்தாவது.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை நேரில் அறிந்து செல்லவே இங்கு வந்துள்ளேன். ஐக்கிய நாடுகள் சபையின் இடம்பெயர்ந்தோருக்கான விடயங்கள் தொடர்பாக ஆராய்வதோடு மட்டும் அல்லாது சுதந்திரமான அதிகாரியாகவும் கூட நான் பணி புரிகின்றேன்.

இலங்கையின் வடபகுதியில் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் மட்டுமல்லாது உலகத்தில் பல நாடுகளில் இடம்பெயர்ந்த மக்களை நானும் சென்று சந்தித்துள்ளேன்.

இடம்பெயர்ந்த மக்களை நான் சென்று சந்திக்கின்ற போது அவர்கள் எப்பொழுதும் மிகவும் கோபமாகவும் விரக்தியுடனும் பல தேவைகளுடனும் கலந்துரையாடுவர். அதற்கு காரணம் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதே.

இலங்கை அரசாங்கத்தினால் இங்கு வரவழைகப்பட்டுள்ளேன். இங்குள்ள பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடி இதிலிருந்து எவ்வாறு முன்நோக்கிச் செல்வது என்பது தொடர்பாக ஆராய்வதற்காகவே வரவழைக்கப்பட்டுள்ளேன்.

கொழும்பிலும் யாழ். மாவட்டத்திலும் பல அரச அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளேன்.

இன்னும் பல சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளேன். இங்கு வந்ததன் ஊடாக நான் பல விடயங்களை விளங்கிக்கொண்டுள்ளேன். குறிப்பாக இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் சுமார் 23 வருடங்களுக்கு மேலாக தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாமல் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

சொந்த இடங்களில் மீள்குடியேற வேண்டும் என்பதில் பெரும்பாலான மக்கள் விருப்பம் கொண்டுள்ளனர். என்பதை புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இங்கு நேரில் அறிந்த விடயங்கள் தொடர்பில் நிச்சயம் தெரியப்படுத்தி உரிய தீர்வு கிடைக்க வழிவகை செய்வேன் என அவர் மேலும் தெரிவித்தார். இருப்பினும் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் வாழ்ந்துவரும் மக்கள் தங்களை விரைவாக தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றுமாறு ஐ.நா பிரதிநிதி அங்கிருந்து செல்லும் வரை தொடர்ந்து கண்ணீர் மல்க வேண்டுகோள் விடுத்தனர்.

(செ-6)

## மன்மோகன்...

பிரதமர் மன்மோகனின் வருகையை எதிர்க்கின்றது.

அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க, இலங்கை பாராளுமன்றத்தில் பேசுகையில், இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் மறுத்துவிட்டதன் காரணமாக சிங்கின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறோம் என்று கூறியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல், ஜனாதிபதி மகிந்தவின் அழைப்பு இல்லாமல், மன்மோகன் சிங் எப்படி இங்கு வருகை தரமுடியும்? என்று கேள்வி எழுப்பியுள்ள அவர், ஐ.தே. கட்சி, மன்மோகன் சிங்கின் யாழ்ப்பாண வருகையை எதிர்க்கின்றதாக தெரிவித்துள்ளார்.

மன்மோகன் சிங், பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள மறுப்புத் தெரிவித்தமை பிரிவினைவாதத்தினை ஏற்படுத்தும் முயற்சியாகும் என்றும் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் சி.வி.விக்னேஸ்வரன் பெரும்பான்மை தமிழர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள முதலமைச்சர் ஆவார்.

அவருடைய அழைப்பு இன்னும் உயிரோடுதான் இருக்கிறது.

அவர், பிரதமர் மன்மோகன் சிங்கை யாழ்ப்பாணத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தது யாவரும் அறிந்ததே.

மேலும் கொமன்வெல்த் மாநாட்டிற்கு பிரதமர் செல்லாவிடினும், இந்தியாவின் பிரதிநிதியாக சல்மான் குர்சித்தை அனுப்பி வைத்து, இந்தியா தனது பங்கேற்றலையும் வெளிப்படுத்தியது.

இது இந்தியாவின் பெருந்தன்மையே தவிர எக்காலத்திலும் பிரிவினைவாத செயலுக்கு துணை போவதாக அமையாது என ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார். (செ-11)

## 6 கைக் ...

குண்டுகளை மீட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வுருகின்றனர். (செ-6,11)

## இலங்கை...

யது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

மாறாக அவற்றை மூடிமறைப்பதில் அர்த்தமில்லை என அவர் சுட்டிககாட்டியுள்ளார். நம்பகமானதும், நியாயமானதும், வெளிப்படையானதுமான விசாரணைகளை அரசாங்கம் நடத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகள் உரிய முறையில் பின்பற்றப்பட வேண்டியது அனைத்து உறுப்பு நாடுகளினதும் கடமையாகும் என அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## திருமலை...

ஒருவர் தனது அக்காவின் மகன் எனக் கூறி தனது சாட்சிகளை முன்வைத்ததுடன் தான் உறவினர் என்று மட்டுமல்லாது பதில் நீதவானாகவும் சம்பவ இடத்திற்கு சென்றபோது அங்கு திட்டமிட்ட கொலைதான் நடந்தது என்பதை உறுதியாக கூறுகிறேன். எனவே சம்மந்தப்பட்டவர்களுக்கு தகுந்த தண்டனைகள் வழங்க வேண்டும் எனக் கூறினார்.

(செ-11)


ABI BABY MART
பாடசாலை மாணவர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு. நீங்கள் கொள்வனவு செய்யும் கொப்பிகள்அனைத்துக்கும் 20% விலைக்கழிவு!
✔ Atlas ✔ Super Brand
✔ Sun ✔ Rathna
1000/- ரூபாவுக்கு மேல் கொப்பிகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும்
100/- ரூபா பெறுமதியான பொருட்களை உடன் எடுத்துச் செல்ல ஓர்
அரியசந்தர்ப்பம். தவறவிடாதீர்கள்! உடன் விரையுங்கள்!
267, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்.
(C-5650)

டென்மார்க்கில் படிக்க, உழைக்க
3 பேருக்கு மட்டும் அரியவாய்ப்பு
போலந்தில் படிக்க, உழைக்க
வெறும் 7 இலட்சம் மட்டும் போதும்
கனடாவில் படிக்க, உழைக்க
கையில் உள்ள காசே போதும்,
விசேட கட்டணக் கழிவுடன்
இத்தாலியில் படிக்க, உழைக்க
100% சட்ட ஆலோசனை
திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுகள்.
சிறுவர்களுக்கான ஆடைகள் 20% விலைக்கழிவு.
விடுமுறையை முன்னிட்டு சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள் (Toys) 20% விலைக்கழிவு.
மற்றும் அனைத்து விதமான குழந்தைகளுக்கான அத்தியாவசிய பொருட்கள், கிறீம், கொலோன், மாவகைகள், ஆடைகள் பொழுதுபோக்கு சாதனங்கள், விளையாட்டுப் பொருட்கள், புத்தகங்கள், CDகள், பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள் உட்பட அனைத்து விதமான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்.
ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!
ABI BABY MART
267, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்.
(C-5650)

26ஆவது வருட கல்விச் சேவையில்...
புதிய
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
புதிய கல்வியாண்டு - 2014
தரம் 1 முதல் O/L வரை
✤ தமிழ் மொழிமூலம் ✤ English Medium
புதிய வகுப்புக்கள் ஆரம்பம் சனி
07-12-2013 பி.பகல் 3.00 மணி
புதிய அனுமதிகள் இன்று முதல்

வேலைவாய்ப்பு
மத்திய கிழக்கு நாடுகளில்
வீட்டு பணிப்பெண்ணுக்கான
வேலைவாய்ப்பு
சம்பளம் : 27, 000/- மேல்
வயது எல்லை : 22-44 வரை
பயண தினத்தில் உதவிப் பணமாக
ரூபாய் 100,000/- வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு :
கிருபா - 071 368 4639





நீங்கள் விரும்பிய நாட்டிலே
தொழிலுடன் குடியுரிமை பெற !!
உலகம் முழுவதும் 73 மில்லியன் தொழில்வாய்ப்புக்கள் உள்ள சுற்றுலா மற்றும் ஹொட்டேல் முகாமைத்துவ துறையில் வருமானத்துடன் பயிற்சி / பட்டம் பெற்று விரும்பிய நாட்டில் தொழிலுடன் குடியேறுங்கள்...
வங்கி கடன் வசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும்
Australia: BlueMountains Hotel School
New Zealand: Waiarike Institute of Technology
America: Kendall School of Culinary Arts
Switzerland: BHMS
Malaysia: Sunway University / Skills Malaysia INVITE / INTI International University / SEGi University
Thailand: Stamford University
சிகரம் SIKARAM
இல. 153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 222 00 11, நேரடி: 0773 616 798
இணையம்:www.sikaram.lk

விற்பனைக்கு
41 - XXXX இசூஸ் லொறி
27 - XXXX இசூஸ் லொறி
HG - XXXX சுப்பர் டஸ்கர் லேடன்
உடன் விற்பனைக்குண்டு. அத்துடன் 3/4 பரப்பு சீற்போட்ட லொறி பாக்பண்ணக் கூடிய இடமும் (49, புதிய சிவன் வீதி, நல்லூரில்) உண்டு.
தொடர்பு : 0779722621 0771629330
(4645)

O/L கணிதம் (2014)
K. திருமுருகன்
B.Sc, Na.Dip-inTeach
CAMBRIDGE (நவிண்டில்) C.M.E (பருத்தித்துறை)
MATHS CENTRE
(4634)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org